# சிதறல்களில் சில துளிகள்

- நஸ்பியா அஜித் -



நினைவுகள் நிஜங்களாகலாம்


சிதறல்களில்
சில
துளிகள்..........
-நஸ்பியா அஜீத்

**நூல் விபரம்**

| | |
|---|---|
| நூலின் பெயர் | – சிதறல்களில் சில துளிகள் |
| இதழாசிரியர் | – திருமதி நஸ்பியா அஜீத் (ஆசிரியர்) |
| ஆண்டு | – 28.02.2015 |
| வெளியீடு | – காதி அபூபக்கர் வீதி, யாழ்ப்பாணம். |
| அச்சுப் பதிப்பு | – அன்றா பதிப்பகம்.<br>யாழ்ப்பாணம் – 021 221 7279 |
| தாளின் தன்மை | – 70 gsm |
| பக்கம் | – XIV + 102 = 116 |
| பதிப்புரை | – இறையடி சேர்ந்த என் தந்தைக்காக<br>(மர்ஹூம் M.S.M.தாஹிர்) |
| விலை | – 250/= |
| நூல் | – இரண்டாவது பதிப்பு |
| முதல் பதிப்பு | – கண்ணீர்ப் பூக்கள் |
| ISBN | – 978-955-42109-0-5 |

## உள்ளடக்கம்


✍ சிதறல்களில் சில துளிகள்

✍ கவிதையில் நனைவோம்



## மேலும் படைப்புக்கள் உருவாகட்டும்............

யாழ்.ஒஸ்மானிய கல்லூரியின் ஆசிரியை திருமதி நஸ்பியா அஜீத் அவர்களால் வெளியிடப்படும் 'சிதறல்களில் சில துளிகள்' எனும் படைப்பிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

ஒரு சமூகத்தின் ஆணிவேராகவும் பெரு விருட்சம் ஒன்றின் விழுதுகளாகவும் விளங்குபவர்கள் பெண்கள் என்பதையும் சமுதாயத்தில் பெண்களின் கல்வியின் அவசியத்தினையும் தனது படைப்புக்களின் ஊடாக ஒரு சமூக விடுதலைக்கான அறைகூவலாக வெளியீடு செய்கின்றமை பாராட்டுக்குரியது. இவ்வாறான படைப்புக்கள் மேன்மேலும் உருவாக வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

கடந்த மூன்று தசாப்த காலமாக நாட்டில் இடம்பெற்ற யுத்த சூழலினால் சிறுபான்மை சமூகத்தினர் பெரும் பாதிப்புக்களைச் சந்தித்திருந்தனர். பல தடவைகள் இடப்பெயர்வுகளையும் இழப்புக்களையும் சந்தித்திருந்தனர்.

தமது பகுதிகளில் நிம்மதியாக வாழ முடியாத சூழல் நிலவி வந்தது.


தற்போது அந்த நிலையில் மாற்றம் ஏற்பட்டுள்ள போதிலும் சிறுபான்மையினரது பிரச்சினைகளுக்கு இன்னும் தீர்வு காணப்படவில்லை. சிறுபான்மை மக்கள் தொடர்ந்தும் சிதறியே வாழ்ந்து

வருகின்றனர். எனவே இந்த மக்களது வாழ்வில் எதிர்காலத்தில் சுபீட்சம் ஏற்படுவதற்கு நாம் இணைந்து பணியாற்ற வேண்டிய சூழல் ஏற்பட்டிருக்கின்றது. இத்தகைய சூழலில் இவ்வாறான பல படைப்புக்கள் வெளிவரவேண்டும் இவை மக்களின் எண்ணக்கருக்களை வெளிப் படுத்துபவையாக அமைய வேண்டும்.

படைப்பாளியான ஆசிரியை திருமதி நஸ்பியா மேலும் பல படைப்புக்களை மேன்மேலும் படைத்திட எனது நல்வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

ம. விஜயகலா

திருமதி. விஜயகலா மகேஸ்வரன்
மகளிர் விவகார பிரதி அமைச்சர்
ஐ.தே.க.வின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்.



## வாழ்த்துரை.........

யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியின் ஆசிரியரான நஸ்பியா அஜீத் அவர்களின் சிதறல்களில் சில துளிகள் என்ற நூலிற்கு வாழ்த்துரை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

அல்ஹம் துலில்லாஹ்

இந்த நூலில் கூறப்பட்ட பல விடயங்கள் உண்மைச் சம்பவங் களைக் கலந்து எழுதப்பட்டிருக்கின்றன. ஆரம்பத்திலிருந்து நானும் முகாமின் தலைவராக, சம்மேளனத்தின் தலைவராக, தற்போது பிரதித் தலைவராக பல கஷ்டங்களை எம் மக்களோடு சேர்ந்து அனுப விக்கின்றேன். கடந்த மூன்று தசாப்தங்களில் மீள்குடியேற்றக் கிராமம் எம் சமூகத்திற்கு அமைக்கப்படவில்லை. இதுவரையில் ஒரு நெறிப் படுத்தப்பட்ட வாழ்க்கை அமையப் பெறவில்லை... மக்கள் சிதறல்களில் சில துளிகளாகவே... சிதறி வாழ்கின்றனர் என்பது ஆணித்தரமான உண்மையாகும்.


அந்த வகையில் யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயர்ந்த சமூகம் புத்தளம், கம்பஹா, களுத்துறை, கொழும்பு, அனுராதபுரம், கேகாலை, கண்டி, மட்டக்களப்பு போன்ற இடங்களில் குறைந்தது 7500 இற்கும் அதிகமான மக்கள் சிதறி வாழ்கின்றனர். இவர்களில் பல மக்கள் தங்களின் சொந்த மண்ணை நோக்கி வருகை தந்து கொண்டிருக்

கின்றார்கள். இவர்களுக்கு மீள்குடியேற்றம் கேள்விக் குறியாகவே காணப்படுகின்றது. இந்த நிலைகள் மாற வேண்டும் என்றால் எங்கள் குரல்கள் பல திக்குகளிலும் ஒலிக்கப்பட வேண்டும். இப்படியான எழுத்தாக்கம் மிகவும் அவசியமாகும்....

பேனா முனையில் மாற்றத்தைக் காணத் துடிக்கும் இந்த சகோதர எழுத்தாளருக்கு எங்கள் வாழ்த்துக்களை தெரிவித்து மேலும் இவரது எழுத்து வடிவம் உயிர் பெற வேண்டும் என இறைவனை பிரார்த்தனை செய்து விடைபெறுகின்றேன்.

N.நிலாம்

சம்மேளனத்தின் பிரதித் தலைவர்.



## இவரைப் பற்றிய சில அறிமுகம்...........

இவர் மீராலெப்பை லாபிர்...... இவரின் பிறப்பு 01.04.1949 ஆரம்பகாலத்தில் தனது கல்வியினை மஸ்ரஉத்தீன் பாடசாலையிலும் உயர்தர வகுப்புக்களை யாழ். வைத்தீஸ்வரா கல்லூரியிலும் கற்ற இவர் தொடர்ந்து தொழில்நுட்ப கல்லூரியில் உயர் வணிகத்திற் கான பயிற்சி நெறிகளை பூரணப்படுத்தி தற்போது சிறந்த வியாபாரத் தளமான பிளவ்ஸ் ஹோட்டலின் உரிமையாளராகவும் காணப் படுகின்றார்.

வியாபார நடவடிக்கைக்கூடாகவே 1972ஆம் ஆண்டு தொடக்கம் ஒளி சஞ்சிகையுடன் இவரது இலக்கியப்பணி ஆரம்பமாகியது. ஈழத்து நாடகம், சினிமாத்துறையுடன் 1990ஆம் ஆண்டின் பின் நவமணி, எங்கள் தேசம், விடிவெள்ளி, வீரகேசரி, தினமுரசு போன்ற பல பத்திரிகை களுக்கு கட்டுரை, செய்திகளை வழங்கி வருகின்றார்.

இவரின் சேவைப்பணிக்காக பல விருதுகளுக்கும் சொந்தக் காரனாகியுள்ளார். தேசகீர்த்தி, தேச சக்தி, ஊடகச் சுடர், நிழல்படாத தாரகை, சமூகதிலகம், யாழ்.ரத்னா விருது என எண்ணிக்கொண்டே செல்லலாம்....

2013ஆம் ஆண்டில் கலாபூசணம் என்ற அரசு விருதும் கூட இவர் சேவைக்குக் கிடைத்த வெற்றியாகியது.......

இலக்கிய ஆர்வலரான இவர் பல பொதுப் பணிகளையும் மேற்கொண்டு வருகின்றார்..... இவரின் பணியில் எமது நூல் வெளி யீட்டிற்கான பல ஆதரவுகளை வழங்கி மூலையிலே ஒதுங்கி இருந்த எம் எழுத்துருக்களை வெளிச்சம் போட்டுக்காட்டி.. இலக்கிய உலகிற்கு அறிமுகப்படுத்திய மாபெரும் சேவகர் என்பதில் பெரிதும் மகிழ்ச்சியடைகின்றோம். நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

இந்த வகையில் சிதறல்களில் சில துளிகள் என்ற நூலின் ஊடாக இவரை விஷேடமாக அறிமுகப்படுத்தி இவரது சேவைப்பணி மேலும் வளர்ச்சியடைய வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.

நூல் வெளியீட்டுக்குழு.

# ஆசிரியரின் உள்ளத்திலிருந்து....

*பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்....*

*அளவற்ற அருளாளன் நிகரற்ற அன்புடையோன்...*

*அல்லாஹ்வின் திருப்பெயரால் ஆரம்பம் செய்கின்றேன்.*

*அஸ்ஸலாமு அலைக்கும்...*

சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக...

அவனியில் என்னைப் படைத்து நல்ல கல்வி ஞானத்தை தந்துதவி சமூகத்தில் ஓர் ஆசானாக்கி... பின் என்னை ஓர் நூலாசிரிய ராக்கி... இரண்டாவது நூலான "சிதறல்களில் சில துளிகள்" என்ற நாவலை பிரசுரிக்க உதவிய எல்லாம் வல்ல இறைவனைப் புகழ்ந்து கொள்கின்றேன்... அல்ஹம்துலில்லாஹ் (எல்லாப் புகழும் அவனுக்கே)

சிதறல்களில் சில துளிகள் என்ற நூலானது... பல சம்பவங்களை சித்திரிக்கின்றது... முஸ்லிம்களின் சிதறிக் கிடக்கும் வாழ்க்கை... மக்களின் நிலைகள்... குறிப்பாக பெண்களின் கல்விக்கு தடையான காரணிகள் பெற்றோர்/ பெண்/ தாய்மையின் கடமைகள்... குழந்தையின் நல்ல எதிர்காலம்... சமூகத்தின் சில கோட்பாடுகள் என்பவற்றை நூலாக்கி உள்ளேன்... ஆனால் அதில் சில கற்பனைகள். எனது ஆசைகள் கிராமத்தின் வளர்ச்சிப் படிகளை ஒரு கனவுகளாக்கி... அது நினைவுகளாக்கப்படவேண்டும் என்ற நப்பாசையில் நூல் வடிவில் தொகுத்துள்ளேன்.

சமூகத்தை மாற்றக்கூடிய துணிவை வல்லமையை... யாருக்கு கொடுக்கப் போகின்றான் அல்லாஹ் என்பது எனக்குத் தெரியாது. ஆனால்

யாழ் மண்ணில் என்றோ ஒருநாள் வீரமிக்க ஒரு மைந்தன் புறப்பட வேண்டும்... இன்ஷா அல்லாஹ் புறப்படுவான்... இல்லையென்றால்... புறப்படுவாள்... என்ற நம்பிக்கையோடு... எனது நூலை வடித் துள்ளேன்... பல உண்மைகள் சில புனைவுகள். இது யாரையும் தாக்க வேண்டும், தூற்ற வேண்டும் என்பதில்லை... முற்று முழுதாக சமூகத்தை மாற்றவேண்டும்... அநியாயங்களை அழிக்க வேண்டும். உண்மைகளுக்கும் உதயம் கொடுத்து... எம் சமூகத்தினை மலரச் செய்யவேண்டும் என்பது மட்டும்தான் நோக்கமாகும்.

இதுவரையில் மீள்குடியேற்றக் கிராமம் என்பது பெரும் கேள்விக் குறியாகியே வருகின்றது......1990 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து புத்தளம்.. நீர்கொழும்பு... கொழும்பு.. எனப் பல இடங்களில் மக்கள் சிதறிக் கிடக்கின்றனர்... ஆனால் இதுவரை ஒரு இடத்தில் கூட யாழ்ப்பாண முஸ்லிம்களுக்கு ஒரு மீள்குடியேற்றக் கிராமம் அமைக்கப்படவில்லை.. ஆனால் ஏனைய வடமாகாண முஸ்லிம்களுக்கு 9 மீள்குடி யேற்றக் கிராமம் அமைக்கப்பட்டுள்ளது. அதேபோல 6 வடமாகாண பாட சாலைகள் புத்தளத்தில் ஆரம்பிக்கப்பட்டு ஒரு பாடசாலையில் கூட யாழ்.மகன் அதிபராக இல்லை என்பது கவலைக்கிடமான உண்மைகளாகும்...

கொழும்பு வீதியிலுள்ள சோல்டன் ரத்மல்லாய, ஹிஜ்ரத்புரம், சாபி நகர் மாணவச் செல்வங்கள் கல்வி கற்பதில், போக்குவரத்தில் எவ்வளவு சிரமங்களை எதிர்நோக்குகின்றார்கள். அதே போல் எமது பெருந்தலைவர்கள், பல நிறுவனங்கள், அமைப்புக்கள், அரசு பல உதவித் திட்டங்களை வழங்கினாலும் மக்கள் இன்னும் பல தேவைகளுடன் தான் வாழ்கின்றனர் என்பதை நாம் மறந்துவிட முடியாது.

இவை எனது பதினான்கு வருட வெளிக்கள வாழ்வில் நான் கண்கூடாக கண்ட உண்மைகளாகும். நான் பல நாட்கள் வேதனைப் பட்டுள்ளேன். இன்னும் எம் மக்கள் மழை, வெள்ளம், வீடில்லா பிரச்

சினை, பெண்கள் இளைஞர்களுக்கான தொழில் பிரச்சினை என பல துன்பங்களை எதிர்நோக்கியே வாழ்கின்றனர்... இன்று ஏனைய பிரதேசங்களுடன் ஒப்பிடும் போது யாழ் மண்ணின் முஸ்லிம்களின் பல துன்பங்களை தொகுத்துள்ளேன். இவை "விடிவிற்காக.." மக்களின் "நல்வாழ்வுக்காக" சில நினைவுகள் நிஜங்களாகினால்... எப்படி இருக்கும் என்ற கற்பனையில் இந்நூல் தொகுத்துள்ளேன்... எனது தேடலின் சிந்தனைக் கிளறல்களில் சில நேரம் சில மாற்றங்களை காணலாம் என்பது என் அவாவாகும். போர் முனையை விட பேனாமுனை பல மாற்றங்களை ஏற்படுத்தும்.

கவிகளில் பலவற்றை ஏக்கங்களாக வடித்துள்ளேன்... சமூகத்தின் சிதறல்களினால்... எத்தனை வகையான பெண்கள், குழந்தைகள் கண்ணீரில் நனைகின்றார்கள் என்பதை சுட்டிக்காட்டியுள்ளேன்.


சிப்பியில் முத்துபோல நல்ல தாயின் வயிற்றில் நல்ல குழந்தை பிறக்கும். அதேபோல் நல்ல தாயின்/ ஒரு ஆசானில்/ நல்ல எண்ணங் கொண்டவர்களால்/சமூகத்தில் நல்ல குழந்தைகள் உருவாகும் என்பது ஆணித்தரமான உண்மைகளாகும்...

எனது முதல் வெளியீடு "கண்ணீர் பூக்கள்" எம் சமூகத்தின் ஆரம்ப கால உண்மைநிலை... இரண்டாவது வெளியீடு எம் சமூகத்தின் சிதறிய சில துளிகள் ஒன்று சேரும் ஒரு கற்பனை கலந்த கதை.... எனது மூன்றாவது வெளியீடு.... "இது பெண்ணின் கதை..." எனது முயற்சி... தொடர உங்கள் அனைவரது... ஒத்துழைப்புக்களையும்... இறை திருப்பொருத்தத்தையும் நாடி விடைபெறும்..............

*திருமதி நஸ்பியா அஜித்*

*(ஆசிரியை)*

*யாழ்ப்பாணம் ஒஸ்மானியா கல்லூரி*


அல்குர் ஆன்
நிச்சயமாக யார் அதனை (உள்ளத்தை)
தூய்மைப் படுத்துகின்றாரோ அவர் வெற்றிபெற்றுவிட்டார்.
மேலும் யார் அதனை மாசுபடுத்துகின்றாரோ
அவர் நிச்சயம் நஷ்டமடைந்து விட்டார்.
91:9:10 அல்குர்ஆன்

# சிதறல்களில் சில துளிகள்

பரந்த வானில் பளபளக்கும் நட்சத்திரம். அதில் பவனி வரும் நிலாப் பெண். அந்த அழகிய நிலாவின் நடுவே ஏன் அந்தக் களங்கம் என்பது தெரியவில்லை. அந்த அழகான காட்சிகளை ஜன்னல் வழியே ரசித்துக் கொண்டிருக்கிறாள் பஸ்லியா.

இறைவன் மனிதனைப் படைத்து, மனிதன் வாழக்கூடிய அனைத்து ஜீவராசிகளையும் படைத்து விண்ணைப் படைத்து அதில் பல அழகையும் படிப்பினைகளையும் வடித்து மனிதன் வாழ எவ்வாறு வழிசமைத்து இருக்கின்றான்....

ஆனால் மனிதர்கள் தன்னையும் மறந்து படைத்த இறைவ னையும் மறந்து படைக்கப்பட்ட பூமியையும் மறந்து தங்கள் மனம் போன வழியில் எவ்வாறெல்லாம் வாழ நினைக்கின்றார்கள்.... ஆண்டவனே...

பூமி எவ்வளவு அற்புதமாக படைக்கப்பட்டுள்ளது... அதில் மாபெரும் அற்புதமானவன் மனிதன். ஆனால் மனிதர்கள் தன்னைப் படைத்த இறைவனுக்குக் கூட பயப்பட மறந்து விடுகின்றார்கள். எம்மை படைத்தவன் ஓர் நாள் எம் உயிரை எடுப்பான். ஆனால்

நாம் செய்யும் நல்ல சேவைகள் ஒருநாள் எங்கோ குடைகளாகும் என்பதை மறந்துவிட்ட பல மனிதர்களால் இன்று உலகில் எத்தனை குழப்பங்கள், இழப்புகள் நினைத்துக்கூட பார்க்க முடிய வில்லை....

எங்கோ பிறந்த நாம் இப்போ எங்கோ ஓர் ஓட்டைக் கொட்டிலில் குப்பி விளக்கினில் இந்த நிலா வெளிச்சத்தை ரசித்துக் கொண்டிருக் கின்றோம்... நினைத்துக் கூடப் பார்க்கமுடியாது... என்று மனதிற்குள் பல சிந்தனைகளோடு போராடிக் கொண்டிருக்கும் பஸ்லியாவை யாரோ அழைக்கும் சத்தம் கேட்டு திரும்புகின்றாள்.

உள்ளே உம்மா நுழைந்து கொண்டிருந்தாள். “என்ன பஸ்லியா இன்னும் தூங்கவில்லையா? என்ன யோசனை ?”

“ஒன்றுமில்லை... உம்மா... தூக்கம் வரவில்லை. அதான் வானத்து நிலாப் பெண்ணையும் அதனைச் சுற்றி கண் சிமிட்டும் நட்சத்திரங்களையும் ரசித்துக் கொண்டிருக்கிறேன்” என்று கூறிய போது....

தாயோ!... “அது சரி... வாப்பா... கேட்ட கேள்விக்கு நீ இன்னுமே பதில் சொல்லவில்லையே...” என்று கேட்க... மகள்... “தொடங்கி விட்டீங்களா... பஞ்சபுராணத்தை...”

உம்மா! எனக்கு வயது பதினெட்டு... ஏன் கலியாணம்? வேண்டாம்... நான் படிக்கணும்... கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் மக்களுக்கு உதவி செய்யணும்... பெரிய வீடு கட்டணும், உம்மா வையும் தங்கச்சிமாரையும் ராணி மாதிரி வைக்கணும் என்று கூறியபோது... போதும்... போதும்... இதுவெல்லாம் நடக்காது...

நீங்களும் கலியாணம் முடிக்காம... கீழேயுள்ள நாலு தங்கை மாரும் கலியாணம் முடிக்காம... கடைசி முதியோர் இல்லம்தான் கெதியாகப் போகுது... என்று தாய் கூற என்னம்மா... சீ... என்ற ஆசைகளை புரிய மாட்டீங்களா? என்று கேட்க...

தாய் அன்போடு தன் குடும்ப நிலைமைகளை புரியவைக்க நினைக்கின்றாள்..... மகள் பஸ்லியா..... நம்ம வீட்டில் ஆண் சகோதரம் இல்லை...அகதியா... நாம எல்லாம் இழந்து விட்டோம்... அகதி முகாம் வாழ்வில் கையில் தொழில் இல்லாம இப்படி கஷ்டப் படமுடியாது. மானமரியாதையா உங்க ஐந்து பேரையும் ஒருத் தனிடம் புடிச்சு கொடுக்கணும் இல்லாவிட்டால் நீங்க சீரழிந்து போய் விடுவீர்கள் என்று கூறி கண் கலங்க ஆரம்பிக்கின்றாள்...

இப்ப நல்ல விதியொன்று வந்திருக்கு. மாப்பிள்ளை நல்ல பொடியன் தான். தொழில் கொஞ்சம் குறைவு. ஆனால் ஏதோ கூழோ கஞ்சியோ குடித்து நிம்மதியா வாழலாம்... என்று தாய் பஸ்லியா விடம் கெஞ்சுவதைப் போல் கூற... பஸ்லியாவின் மனதில் ஏதோ ஒரு கவலை ஏற்பட்டாலும் தாயின் கவலையை போக்குவதற்காக... உம்மா... இப்பவும் கூழும் கஞ்சியும் தான்... அப்ப கலியாணத்திற்கு பிறகும் கூழும் கஞ்சியும்தானே. புரியாணி தரமாட்டாங்களா... என்று கிண்டலாக கேட்க தாய் சிரித்தே விடுகின்றாள்...

பஸ்லியா தாயின் கண்ணீரை மெதுவாகத் துடைத்து... உம்மா... உங்கட சந்தோசம்தான் என் சந்தோசம்... ஓ.கே. என்று தாயின் கைகளைப் பிடித்துக் கூறும்போதே தாயின் முகத்தில் கண்ட புன்னகை பஸ்லியாவின் இதயத்திலுள்ள கவலைகளை மறக்கச் செய்தது...

புத்தளம் என்ற ஒரு மாவட்டத்தில் தில்லையடி என்ற கிராமத்தில் நடுவே வடமாகாண முஸ்லிம்கள் இடம்பெயர்ந்து பல முகாம்களை அமைத்து வாழ்கின்றார்கள். அந்த கிராமத்தில் தான் பஸ்லியாவின் இளமைக்காலம் ஆரம்பமாகின்றது.

பஸ்லியா படிப்பில் கெட்டிக்காரியாக இருந்தாலும் பல்கலைக் கழகம் கிடைத்தும் படிப்பை தொடர அவளது வறுமை இடம் கொடுக்கவில்லை... பஸ்லியாவைப் போல் ஆயிரம் ஆயிரம் பெண் களின் வாழ்க்கையில் இடப்பெயர்வும் கடந்த கால யுத்தங்களும் வெற்றிப்படிகளுக்கு தடைக்கல்லாக இருந்தது என்பது யாராலும் மறக்க முடியாத சம்பவமாகும்...

அந்த கிராமத்தில் பஸ்லியாவின் குடும்பம் ஓரளவு வசதியாக இருந்தாலும், ஐந்து பெண் பிள்ளைகள் என்பதால் பெற்றோர் வயிற்றில் நெருப்பை கட்டியிருப்பதைப் போல் தவித்து வந்தனர்...

ஆண்டவனே! ஐந்தும் பெண்களாக போய்விட்டதே.... எப்படி கரை சேர்ப்போம் என்ற கவலையை பஸ்லியாவின் பெற்றோர் அடிக்கடி கூறி வரலானார்கள்.

பெண்களாக பிறந்தாலே ஏன் பெற்றோரும் சமூகமும் இப்படி யெல்லாம் கவலைப்படுகின்றது என்பது புரியவில்லை... அன்று பஸ்லியா தனக்காக, தன் வேதனைகளைப் போக்குவதற்காக தன் டயரியில் ஏதோ புலம்புகின்றாள்...

## பெண்....

நவீன உலகினிலே நாகரீக யுகத்தினிலே
நங்கையரின் உரிமைகளை நயந்துதான் பார்ப்போமா?

கருவில் தொடங்கி கல்லறை முடியும்வரை
கன்னியரின் உரிமைகளை வியந்துதான் பார்ப்போமா?

தாயின் கருவில் குழந்தையது
உலகைப் பார்க்க வரும்போது
"பெண்" குழந்தை என்றவுடன்… சிலர்
பெருமிதம் கொள்ளார் ஏனப்பா?….

வஞ்சகம் அறியா குழந்தையது
வஞ்சகர் நெஞ்சை காணாது
குறுகுறு மொழிகள் பேசி நல்ல
இன்பம் காண முடியாது - காரணம்

அன்பும் பண்பும் காட்டி நின்று
காம வெறிகள் பிடித்த பலர்
சிறுவர் குழந்தை பாராது
பாலியல் வன்முறை செய்வதென்ன?

அதையும் தாண்டிப் பெண் குழந்தை
அவனியில் தவழ வரும் போதே - சில
ஆடவர் அவளைப் படுத்தும் பாடு
ஆண்டவன் அன்றி யாரறிவார்…

படிக்கப் பாடசாலை செல்லும்போது
பாவலர் செய்யும் தொல்லைகளில்
படிகள் தாண்ட முடியாது
பாவை நெஞ்சம் பதைப்பதென்ன?

வேலை தேடிச் செல்லும் போது - பணப்
பேய்களை காட்டி பெண்களையும்
வேடிக்கைப் பொருளாய் காட்டுகின்றார்
வேதனம் கொஞ்சம் வழங்கிடவே....

வறுமையைக் காண்பார் ஓர் சிலரும் - அவள்
வாழ்க்கைக்கே விலை பேச எண்ணிடுவார்
திருமண வாழ்வை நினைக்கும்போது - பலர்
சீதனம் கேட்டு அடக்குகின்றார்

பெண் உரிமை என்றும் பேசிடுவார் - எம்
பெண்களுக்கெங்கே உரிமையப்பா.
கருவில் தொடங்கும் பெண் கண்ணீர்
கல்லறை வரையும் தொடருதப்பா...

உலகம் பேசிடும் பெண் உரிமை
உண்மையில் உண்டா தெரியவில்லை
ஊமைகள் பேசிடும் வார்த்தைகளாய்
உண்மைகள் அழிந்து போகுதப்பா...

எழுதிக் கொண்டிருக்கும்போதே... யாரோ வருவதை அறிந்த பஸ்லியா தன் எண்ணங்களோடு எழுதுவதையும் நிறுத்திக் கொள்கிறாள்.

★★★

வாப்பா உள்ளே வந்து கொண்டிருக்கின்றார்.... மகள் இன்றைக்கு மாப்பிள்ளை வீட்டார் வாறாங்க, கொஞ்சம் ரெடியாகுங்க

என்று கூறியபோது தந்தையின் பேச்சிற்கு மறுபேச்சு இல்லாது ஓம்... என தலையாட்டிக் கொள்கின்றாள்....

யாழ்ப்பாணத்தில் திருமண வாழ்வு என்பது மிகவும் வித்தியாச மானது. பெண்ணிற்கோ அல்லது ஆணிற்கு திருமணம் என்றால் எந்த வீதி, என்ன தொழில் என்பதை பார்ப்பார்கள். ஆரம்ப காலத்தில் வீதிகளுக்கு ஒவ்வோர் பெயர்கள் மான்குட்டி தெரு, துண்டு வெட்டித் தெரு, பெரிய தெரு, பொம்மைவெளி என்று இருக்கும். அனேகமாக ஒரு வீதியாட்கள் மறு வீதியில் கலப்பு வைப்பது குறைவு. ஆனால் இடப்பெயர்வும் யுத்தமும் "இடம்பெயர்ந்தவர்கள்" அல்லது "அகதி" அந்தஸ்துகளை ஒரு காலம் ஒன்றாக்கிவிட்டது...

இருந்தாலும் இன்னும் அந்த கலாசாரத்தை சிலர் பின்பற்றாமல் இல்லை...

வடமாகாண மண்ணில் வாழ்ந்த பல்லாயிரக்கணக்கான முஸ்லிம்கள் இலங்கையில் பல பகுதிகளில் குடியேறி வாழ் கின்றார்கள். ஆனால் யாழ்ப்பாணத்திலுள்ள முஸ்லிம்கள்... பல பிரதேசங்களில் தமது வாழ்க்கையை ஆரம்பித்துள்ளனர்.

இடப்பெயர்வு காலத்தில் பெரும்பான்மையான முஸ்லிம் தமிழ் மக்களுக்கு அடைக்கலம் கொடுத்த புனித தாய்தான் புத்தளம்... புத்தளம் அன்றல்ல... என்றென்றும் அந்த மண்ணின் பெருமை யாக கருதக்கூடியதாகவுள்ளது... காரணம் 1938ல் வட்டுக் கோட்டை, முதுதமிழ் புலவர் மு. நல்லதம்பி புத்தளத்தைப் பற்றி பாடிய பாடல் எழுத்தாளர் அப்துல் மஜீத் அவர்களும் அவரது நூலில் தொகுத்திருக்கின்றார்...

எந்தளந்தான் சென்றிடினும்
எவ்விதந்தான் நொந்திடினும்
புத்தளம் நல்லதன்று - போயடைக...
புத்தளத்தார் பார்த்திருக்க உண்ணார்
பசித்த முகம் பார்த்தருள்வார்... - இது
கோத்திரத்திற்கு உள்ள குணம்....

என்று பாடியதில் இருந்து இந்த மண்ணின் வாசம் கடந்த காலங்களில் கூடப் பாடப்பட்டிருக்கின்றது... என்பது தெளிவாகின்றது... இந்த பிரதேசம்தான் யாழ்ப்பாணத்திலிருந்து இடம் பெயர்ந்து சென்ற பெரும்பான்மையான மக்களை அரவணைத்த ஊராகும்... அந்த புகலிடம் கொடுத்த புத்தளத்தில்தான் திருமண வாழ்வும் தொடங்குகின்றது.

பஸ்லியாவின் திருமண விழாவில் ஒரு முகாமில் பஸ்லியா பெண்ணாக அமர்ந்திருக்க... மறு முகாமிலிருந்து மாப்பிள்ளை ரஜாவுத்தீன் வருகை தந்து கொண்டிருந்தார்.......

பெட்ரோ மாக்ஸ் விளக்கொளியில் எவ்வித ஆடல் பாடல் இன்றி மிக அமைதியாகவும் எளிமையாகவும் திருமணம் நடந்து முடிந்தது... முகாமிலுள்ள மக்களின் ஆதரவுகள் பஸ்லியாவின் வாப்பாவிற்கு பேருதவியாக இருந்தது.... அந்த அகதி முகாமில் சமைக்கப்பட்ட உணவுகளை முஸ்லிம்களுக்கே உரித்தான விருந்தோம்பல் மூலம் அங்குள்ள மக்கள் உண்டு மகிழ்ந்தனர்.... சோடா, பீடா எதுவும் இல்லை.... அந்த அகதிமுகாமில் பாசம் அதிகமாக இருந்தது. பணக்காரன், ஏழை என்ற உணர்வு இல்லை.... நாம் அகதி / இடம் பெயர்ந்தவன் என்ற உணர்வு இருந்தது...

ஏதோ ஒரு வகையில் திருமணம் முடிந்த கையோடு அனைவரும் தங்கள் சிறிய குடிசைகளில் தஞ்சமானார்கள்... மீண்டும் அந்த அகதி முகாம் அமைதியாகியது.

ஓலைக் குடிசையில் அரிக்கன்லாம்பு வெளிச்சத்தில் பஸ்லியாவின் வாழ்க்கை ஆரம்பமாகியது. மாப்பிள்ளை கோலத்தில் ரஜாவுத்தீன் ஒரு கதிரையில் காத்திருக்கின்றான்.

ஏதோ ஒரு பயத்தில் பஸ்லியா வீட்டிற்குள் வருகின்றாள்.

மிக எளிமையான தோற்றம். அமைதியான சுபாவம், குறு குறுக்கும் கண் பார்வை. குறும்புப் பேச்சு கொண்ட பஸ்லியாவுக்கு திருமண பந்தத்தின் முதல் அத்தியாயம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது... காரணம்

ரஜாவுத்தீனின் கடுமையான முகம், கறுப்பு மீசை உயர்ந்த தோற்றம் அவளுக்கு புலியைக் காண்பது போல் பயந்துவிடுகின்றாள்...

மனைவி தன்னைக் கண்டு படும்பாட்டை நினைத்து சிரித்தே விடுகின்றான் ரஜாவுத்தீன்... புன்னகை தவழ அன்போடு அழைக்கின்றான் ரஜா. மிகவும் கஷ்டப்பட்டு ஒரு புன்னகையொன்றை வரவழைத்துக் கொண்டு பஸ்லியா அவனருகே செல்கின்றாள். தன்னருகே அமரும்படி கண்ணால் சைகை காட்டிய போது என்ன செய்வதென்று புரியவில்லை. பஸ்லியாவுக்கு கதவைத் திறந்து கொண்டு வெளியே ஓடிவிடுவோமா? என்று யோசிக்கின்றாள். வாப்பா சிங்கம் போல் வெளியே நிற்பார்... உள்ளே புலியின் இடையில் மாட்டிவிட்டோமோ... ஓ... வென்று அழவேண்டும்

போல் இருந்தாலும்...... சத்தம் வராமல் கண்களில் இருந்து கண்ணீர் வர ஆரம்பித்துவிட்டது...

கண்களைத் தானே மெதுவாக துடைத்துக் கொண்டு பக்கத்தி லுள்ள கதிரையொன்றில் போய் அமர்கின்றாள். அவளது பிறந்த காலத்தில் முதன்முதலில் ஓர் தெரியாத ஆணிடம் மாட்டிய புதிய அநுபவமாக இருந்தது அவளுக்கு...

ரஜாவுத்தீன் தனக்குள் சிரித்துக் கொண்டான்... "ஏய் மொக்கு... நீ... படிச்ச புள்ளையா? சீ.... ஏ... அழுகின்றாய் என்னைப் பார்க்க பேய் மாதிரி இருக்கா...?"

பஸ்லியா தலையை ஆட்டுகின்றாள்... அப்போ... என ரஜாவுத்தீன் கேட்க.... புலி... புலி மாதிரி இருக்கு... என்று கூற அவன் வாய் விட்டே சிரித்துவிடுகின்றான். மானிடம் புலி மாட்டிவிட்டதா... என்று குறும்பாக கேட்டு சிரிக்கும்போது... பஸ்லியா தன்னை இவ்வளவு கிண்டலாக பேசும் அவனைப் பார்க்க கோபம் ஏற்பட்டா லும் பொறுமையாகவும் அமைதியாகவும் இருந்தாள்.

ஆனால் ரஜாவுத்தீன் பஸ்லியாவின் பயத்தைப் போக்க மெதுவாக கதைக்க ஆரம்பித்தான்....

பஸ்லியா... பயப்படவேண்டாம்... நீங்க சின்னப் புள்ள இல்லை... இனி என்ர மனைவி....

நான் உண்மையில் படிக்கவில்லை. ஓதவில்லை... என்ர கஷ்டம் வாப்பா கடையில் சேர்த்துவிட்டார்.... ஆனா அகதியா வந்த பிறகு எனக்கு இப்ப தொழிலும் இல்லை.

முகாமில் பொடியங்களோடு கெட்டிடுவேன் என்று வாப்பா கலியாணம் செய்து தந்திட்டார்.... எனக்கு கலியாணம் பிடிக்க வில்லை... ஆனா... உங்களை ரொம்ப பிடித்துள்ளது... என்று ரஜாவுத்தீன் கூறும்போது.... நளினத்துடனும் வெட்கத்துடனும் சிரித்துக் கொள்கின்றாள் பஸ்லியா...

ரஜா தொடர்கின்றான்..... "வாழ்க்கை என்பது விளையாட் டில்லை.... கடைசி வரை நானும் நீங்களும் கைகோர்த்து பிரயாணம் செய்ய வேண்டியதொன்று. உங்களை கண் கலங்காம காப்பாற்ற வேண்டியது எனது கடமை. ஆனா நீங்க என்னைப் புரிஞ்சு வாழணும். எனக்கு எது பிடிக்கும் எது பிடிக்காது என்பதை புரிஞ்சு நடந்தால் சரி. எதுவென்றாலும் என்னோடு கதைத் துச் செய்யலாம். ஆனா நானும் உங்களை புரிஞ்சு வாழ முயற்சிக்கின்றேன்..." என்று கூறிக் கொண்டிருந்த கணவனை பஸ்லியா வியப்போடு பார்க்கின்றாள். படிக்கவில்லை என்றார்.... ஆனா.... விரிவுரையாளர் போல் பேசுகின்றாரே.... கலியாணம் முடிச்சா.... எல்லாம் தானே வரும்போல... என்று... மனதில் எண்ணிக் கொள்கின்றாள்... அந்த நேரம் வாசல் கதவு தட்டப்படும் சத்தம் கேட்டு பஸ்லியா போய் கதவை திறக்கின்றாள்...

வாசலில் இரவுச்சாப்பாடு கொண்டு வந்திருந்தார்கள் தங்கை மார்...

சாப்பாட்டை வாங்கிய பஸ்லியா தங்கைமாரை வழியனுப்ப முயற்சிக்கின்றாள். தங்கைமாரோ வந்திருக்கும் மூத்த மச்சானை குழப்புவதற்கு ரெடியாகி வந்திருந்தார்கள். பஸ்லியா புரிந்து கொண்டாள். கதவை சாத்த முற்படுகின்றாள். தங்கைமாரோ...

ஹாய்... மச்சான்... எப்படி என்று கூற... ரஜாவுத்தீனும் பஸ்லியாவை குழப்ப... ஹாய்....மச்சி...என்று கூற பஸ்லிய தங்கைமாரை போ..... என்று கூறி கதவைச் சாத்திக் கொள்கின்றாள்...

ரஜாவுத்தீன் தன் தங்கைமாரை போல் அவர்களையும் நினைத் தாலும் பஸ்லியாவை குழப்பி எடுக்க முயற்சித்தான். உங்கட தங்கச்சி நல்ல வடிவு என்ன... என்று கேட்க பஸ்லியாவின் கண்கள் நான் வடிவில்லையா? என்று ஏக்கம் கலந்த கோபத்தில் ரஜாவுத் தீனைப் பார்த்தது... ரஜாவுத்தீன் கண்களை சிமிட்டி சிரிக்கும் போது பஸ்லியாவும் புன்னகையை சிந்திக்கொள்கின்றாள். பயம் போய்விட்டது.

இவ்வாறு இரவுச் சாப்பாடு முடிந்தது.... பிட்டும், இறைச்சிக் கறியும், ஈரல் என்று சாப்பாடு மிகவும் சுவையாக இருந்ததால் நல்ல புடி ரஜாவுத்தீன் புடித்துவிட்டான். பகல் முழுவதும் வேலை வேலை என்று அலைந்தவன் யாழ்ப்பாண குழல் பிட்டும் கறியும் அவனுக்கு மிகவும் பிடித்தமான உணவுகள்தான்... ஆனால் பஸ்லியா கொஞ்சம் போல் சாப்பாட்டை வைத்து தின்பதா விடுவதா என்று யோசித்துக் கொண்டிருந்தாள்..... ரஜா "என்ன பஸ்லியா சாப்பிட விருப்பமில்லையா? அல்லது பயம் இன்னும் போகலயா" என்று கிண்டல் பண்ணும்போது சிரித்துக் கொண்டே அவசர அவசரமாக சாப்பிட்டு முடித்துவிட்டார்கள். பின்பு பஸ்லியா இரவுத் தொழுகையை நிறைவேற்றிக் கொள்கின்றாள். பின் ரஜாவுத்தீன் தொடர்கின்றான்.

பஸ்லியா நீங்க படிச்ச நீங்க, இப்படி நடவுங்க. அப்படி நடவுங்க என்று நான் கட்டளை போடமாட்டேன். ஊர் உலகம் தப்பா

கதைக்காம நாம நடக்கணும். எதையும் மனம் திறந்து பேசலாம். இன்ஷா அல்லாஹ் நானும் ஒரு தொழிலை ஆரம்பித்து விடு வேன்... நாம ஏதோ நம் வருமானத்திற்கு தக்கபடி வாழலாம் என்று கூறி விட்டு, நான் தொழப்போவது குறைவு... என்று கூறும் போதே...பஸ்லியா நிமிர்ந்து பார்க்க, இல்ல இல்ல நாளையில் இருந்து தொழப் போகவேண்டும்... என்று கூறும் ரஜாவுத்தீனைப் பார்த்து பஸ்லியா சிரித்து விடுகின்றாள்.... அந்த சிரிப்பின் ஒலியோடு அவர்களின் வாழ்க்கைப் பயணம் தொடர்கின்றது.

★★★

காலம் உருண்டோடியது... அந்த அகதி முகாமில் பஸ்லியா ரஜா வுத்தீன் குடும்பமும் புதிய பதிவுகளைப் பெற்று அகதி வாழ்வின் அத்தியாயத்தில் தாங்களும் ஓர் இடம் பிடித்தனர். இடம்பெயர்ந்த காலத்தில் இரண்டாவது தலைமுறை பஸ்லியாவின் குடும்பம் ஆரம்பமாகியது.

ரஜா புதிய வேலையொன்றில் சேர்ந்து பஸ்லியாவை கண் கலங்காமல் காப்பாற்றி வந்தான். பஸ்லியா தன் வருமானத்திற்கு ஏற்ப மிக எளிமையாக வாழ்க்கை நடத்தி வந்தாள். வாழ்க்கை என்ற வண்டியில் இரண்டு சக்கரங்களும் ஒரே மாதிரியே சுழல ஆரம்பித்தன... அதனால் இவர்களின் வாழ்க்கைப் பயணம் மிக இலகுவாக இருந்தது. இந்தப் பயணத்தில் பிரதியீடாக இவர்களுக்கு அழகான ஆண் குழந்தையும் பிறக்கின்றது...

அந்தக் குழந்தையின் வருகையால் இந்த இரண்டு உள்ளங் களின் சந்தோசம் பட்டாம்பூச்சி பறந்து திரிவதைப் போல் ஒருவர் முகத்தை ஒருவர் நன்றியுடன் நோக்கிக் கொண்டார்கள்.

பிள்ளைக்கு நிஃமத்துல்லாஹ் (அல்லாஹ்வின் அருட்கொடை) எனப் பெயரிட்டனர்.

பிள்ளை வளர்ப்பதில் இரண்டு உள்ளங்களும் போட்டி போட ஆரம்பித்தன... ரஜா பிள்ளைக்குத் தேவையான அனைத்துப் பொருட்களையும் எப்படியோ கொண்டு வந்து சேர்த்துக்கொண் டான்... பஸ்லியா தன் இலட்சிய கனவுகளை பிள்ளையில் காண வேண்டும் என்பதில் குறியாக இருந்தாள்... பிள்ளை அறியாத வயதில் கூட... தம்பி... நீ... படித்து பெரிய ஆளா ஆகணும்... என்று கூறிக்கொள்வாள்...

★★★

இவ்வாறு காலத்தின் சக்கரம் உருண்டோடியது... அன்று ரஜாவுத் தீன் தொழிலுக்காக வெளியே புறப்பட்டுக் கொண்டிருந்தான்... ஆனால் எல்லாம் தடங்கலாகவே இருந்தது..... மகன் நிஃமத் கூட தந்தையின் முகத்தைப் பார்த்து அழுது கொண்டிருந்தான். மனமும் மனக்கேடுமாக புறப்படுகின்றான் ரஜாவுத்தீன்...... வெளியே செல்லும் போது கல் தடுக்கி கீழே விழப்போனவன் ஒருவாறு நிதானமாகி புறப்பட்டுச் செல்கின்றான்...

சிறிது நேரத்தில் பஸ்லியாவின் கொட்டில் முன் சனக்கூட்டம் கூடிவிட்டது... தொழிலுக்கு சென்ற ரஜா வாகனத்தில் அடிபட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தான்.

பஸ்லியாவுக்கு செய்தி கிடைத்தது. அவள் அனலில்பட்ட புழுவாக துடித்தாள். அழுதாள். கண்ணீருடன் வைத்தியசாலைக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தாள். பஸ்லியாவின் தந்தை ஆட்டோவில்

வந்து அழைத்துச் செல்கின்றார்... சிறிது நேரத்தில் ஆட்டோ வைத்தியசாலையை அடைகின்றது... அங்கே முகம் மட்டும் தெரி கின்றது. மிகுதி உடல் முழுவதும் காயங்கள் கண்களால் பார்க்க முடியாது. கால் உடைந்துவிட்டது.... பல் நொருங்கிவிட்டது. வைத்தியர்கள் உயிரை காப்பாற்ற ஓடித்திரிகின்றார்கள்.

பஸ்லியா ICU வில் இருக்கும் கணவனை கண்டு.... யா..... அல்லாஹ்... என்று ஒரு மூலையில் அப்படியே அமர்ந்துவிட்டாள். கண்ணீர் விடுகின்றாள்.... கதறிக் கதறி அழுகின்றாள்... பஸ்லியாவின் குடும்பமும் ரஜாவுதீனின் குடும்பமும் பஸ்லியா வுக்கு ஆறுதல் கூற நினைத்தாலும் யாராலும் முடியவில்லை. பஸ்லியா அப்படியே உடைந்துவிட்டாள்.

இவ்வாறு ஒருநாள் இரண்டு நாள்... என்று பல நாட்கள் சென்று விட்டன. ரஜாவுத்தீனின் உடல்நிலை தேறவில்லை.

வைத்திய செலவு, பிள்ளைக்கான உணவு, இதர செலவு என்று நகை பொருள் என்று ஒவ்வொரு பொருளாக விற்பனையாகிக் கொண்டிருந்தது....

பஸ்லியாவுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை... ரஜாவுத்தீனின் உடல்நிலை தேற சில வருடம் செல்லும் போல் இருந்தது. காரணம் கால் இரண்டும் காயப்பட்டுக் காணப்பட்ட தால் ரஜா எழுந்து நடக்க முடியாமல் கஷ்டப்பட்டான். பஸ்லியா தலையில் இடிவிழுந்தது போல்... இடிந்து விட்டாள்...

பெண்கள் படிக்கக் கூடாது என்று கலியாணம், கலியாணம் என்று சாவும் பெற்றோர்கள் யோசிக்கவேண்டும்... கையில்

பெண்ணிற்கு பலம் இல்லை என்றால் ஆபத்து வரும்போது... எங்கே போவது... ஆண்டவனே!... அவர்களின் வறுமைக்கு பயந்து கலியாணத்தில் பெண்களை தள்ளி விடுகின்றார்கள்...

கலியாண மேடையில் பெண்களை துன்பம் சீண்டிவிட்டால் பலம் இல்லையே... போராட... என்ன செய்வது...

பட்டாம் பூச்சி போல பறந்து திரிந்த உள்ளங்கள் இரண்டுமே.... சிரிப்பில்லாமல் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டன. என்ன செய்யப்போகின்றாய் என்று... ரஜாவுத்தீனின் கண்கள் பேசின... நான் என்ன செய்யப்போகின்றேனோ... என்று பஸ்லியாவின் கண்கள் பதில் கூறின. ..

நாட்கள் செல்லச் செல்ல... வறுமை குடும்பத்தில் குடியிருக்க ஆரம்பித்தது.... வாப்பா ஏனைய குமர்களை கரை சேர்க்க முடியாது மிகவும் கஷ்டப்படுகின்றார்... அதற்குள் தானும் ஒரு பாரமாக வாழ பஸ்லியா விரும்பவில்லை. ஆனால் உறவினர்களின் உதவியை நாடிய பஸ்லியாவை உறவினர் கேலியாக சிரிக்க ஆரம்பித்தனர். பஸ்லியா யார் வீட்டிற்கு உதவி கேட்டுப் போனாலும். பஸ்லியா போகும் முன்பே, உதவி செய்வதற்கு முன்பு தங்கள் கஷ்டங்களைக் கூற ஆரம்பித்தார்கள்.

பஸ்லியா வாங்கிய கடனை கொடுக்க முடியாது தவித்தாள். கடன்காரர் வீட்டைத் தேடி வர ஆரம்பித்தனர். இனி கடன் வாங்கவும் முடியவில்லை...

அன்று வீட்டில் உணவு எதுவும் இல்லை. பிள்ளை பசியால் கத்த ஆரம்பித்தான். பஸ்லியா எதைக் கொடுத்தாலும் சத்தம்

நிற்கவில்லை... இறுதியாக தாயிடம் சென்று சாப்பாடு கேட்டு வாங்கிக் கொடுத்தாள்... இரண்டு வயசாகி விட்டது. மகனுக்கும் இனி பொறுக்கமுடியாது...

ரஜாவுத்தீனிடம் பஸ்லியா மெதுவாக தான் வேலைக்குப் போகப் போவதாக கூறியபோது... ரஜாவுக்கு விருப்பமில்லை. ஆனால் செய்ய வழியில்லை... என்ன செய்வது... ஏதோ யோசித்து செய்யும்படி கூறிவிட்டான்...

★★★

தன் A/L பெறுபேறுகளை காட்டி பல இடங்களுக்கு வேலைக்குச் செல்கின்றாள்..... உடனடியாக எந்த வேலையும் கிடைக்க வில்லை. ஏதாவது ஒரு வேலைக்கு செல்லலாமே என்று... மனதில் கவலைப்பட்டுக் கொண்டே உள்ளே வருகின்றாள்.

ரஜா ஒரு மூலையில் தூங்கிக் கொண்டிருந்தான். பார்க்கவே கவலையாக இருந்தது. தேநீர் கூட கொடுக்கவில்லை. என்ன செய்வது. ஒன்றுமே புரிய வில்லை.

திடீரென ஒரு யோசனை. முன் வீட்டில் வீட்டுவேலைக்காக ஆள் தேடினார்களே. அங்கே போய் கேட்போம் என்று மிக வேக மாக நடக்கின்றாள்.

கதவை தட்டுகின்றாள். உள்ளே இருந்து அந்த வீட்டு பெண் கதவை திறக்கின்றாள். அவ டீச்சர். கணவன் வங்கியில் வேலை. இரண்டு ஆண் பிள்ளைகள். வீட்டு வேலைக்கு ஆட்கள் தேவை என்று சொல்லியிருந்தீர்களாமே... என்று பஸ்லியா கேட்க ஓம்... வாங்க... என்று அந்தப் பெண்... அழைத்து உள்ளே செல்கின்றாள்...

அவர்கள் புத்தளத்திலுள்ள பெரிய பணக்காரர். மாட மாளிகை போல் வீடும் வீட்டுப் பொருட்களும்... காணப்பட்டன. பஸ்லியாவை அன்போடு அழைத்துச் சென்ற பெண் உள்ளே கதிரையில் அமரச் செய்கின்றாள். பின் பஸ்லியாவை பற்றி கேட்டபோது பஸ்லியா தன் வாழ்க்கையின் சுருக்கத்தை கண்ணீரோடு கூறி முடிக்கின்றாள். பஸ்லியாவுக்கு இப்போது தான் இருபத்தைந்து வயது. ஆனால் பெரிய சுமைதாங்கியாகிவிட்டாள்.

அவள் மட்டுமல்ல இலங்கையில் ஏற்பட்ட யுத்தம் கடந்த காலங்களில் பல பெண்களின் வாழ்க்கையைச் சீரழித்து விட்டது என்பது உண்மையாகும். திருமணத்தில் அகப்பட்ட பெண்கள், கணவனை இழந்த பெண்கள், ஊனமுற்ற பெண்கள், மன நோயாளிகளான பெண்கள், திருமண வாழ்வே கிடைக்காத பெண்கள், வறுமையில் வேலைக்காகச் சென்று துஷ்பிரயோகங் களுக்குள் அகப்பட்ட பெண்கள் என்று சீரழிந்து கொண்டிருக்கும் பெண்கள் சமூகத்தை திரும்பிப் பார்த்தால் அதிகமாக பாதிக் கப்பட்டுக் கொண்டிருப்பது பெண்கள் சமூகமாகும்.

அந்த வகையில் பஸ்லியாவின் வாழ்வும் ஒரு அணையில் அகப்பட்ட அணை உடைத்து ஓடுவதைப் போல் வறுமை என்ற கடலில் சிக்கித் தவித்துக் கொண்டிருந்தாள்.

பஸ்லியா தன் கதைகளை கூறியபோது... அமைதியாக கேட்டுக் கொண்டிருந்த வீட்டுக்கார அம்மா... பஸ்லியாவை வேலையில் இணைத்துக்கொண்டார். ஆனால் காலை 6.00 மணிக்கு வேலைக்குச் சென்று வீடு வாசல் துப்பரவு செய்து உடுப்பு கழுவி வீட்டிலுள்ளவர்கள் வரும் வரை வயதான தாயாரைப் பரா மரித்து

அவருக்கு உதவியாக இருக்க வேண்டும்... வேலை கஷ்டம் தான்... ஆனால் பஸ்லியாவுக்கு எப்படியோ ஒரு வேலை கிடைத்துவிட்டது... என்ற நிம்மதி.

பஸ்லியாவுக்கு உடனே 1000ரூபா காசு கொடுத்து நாளை யில் இருந்து வேலைக்கு வரும்படி கூறுகின்றார் வீட்டுக்கார அம்மா...

பஸ்லியாவுக்கு சந்தோசம் தாங்கமுடியவில்லை. நன்றி சொல்லி அவசரமாக கடையொன்றில் போய் வீட்டுக்குத் தேவை யான பொருட்களைக் கொண்டு வருகின்றாள்.

★★★

வீட்டுவாசலில் ஏறும்போது ரஜா ஒரு மூலையில் குந்திக் கொண்டிருந்தான். வயிற்றில் பசி... மனைவியை நினைத்து கவலை... அவனால் தாங்கமுடியவில்லை... மனைவி கையில் பாசலோடு வந்து உடனடியாக சமைக்க ஆரம்பிக்கின்றாள். ரஜாவுக்கு தேநீர் கோப்பையை கொண்டு போய் கொடுக்கும் போது ரஜா கண் கலங்கிவிடுகின்றான். பஸ்லி... நான் மௌத்தா போயிருக்க வேணும்... ஆண்டவன் ஏன் என்னை சோதிக்கின்றான்... என்று கூறும்போது... பஸ்லியா அமைதியாக அவனருகே வந்தமரு கின்றாள்...

சீ... என்ன சின்னப்பிள்ளை மாதிரி... ஆண்டவன் சோதிப் பான். கைவிடமாட்டான்... எனக்கு ஒரு வீட்டில் வேலை கிடைத் துள்ளது... என்ன கொஞ்ச நாள் கஷ்டப்படவேண்டும்... அல்லாஹ் உங்கட காலை சுகப்படுத்திவிட்டால் நான் வேலைக்

குப் போகத்தேவையில்லை... என்று கூறும் போதே ரஜா துடித்துவிட்டான்... நீங்க வேலைக்காரியாய்ப் போய் நான் சாப்பிட வேண்டுமா? பஸ்லி... அல்லாஹ்... என்று தலையில் கையை வைத்துக்கொண்டான்.

பஸ்லியா... இங்க பாருங்க... அதான் பெண்கள் படிக்கணும், அவங்க தகுதியானவங்களா இருந்தால் இப்படி கஷ்டம் வரும் நேரம் எந்த வேலையும் செய்யலாம்.

அரைகுறையா படிச்சா... வீட்டுவேலைக்காரியா அல்லது ஆபத்தான தொழிலில் மாட்டித் தவிக்கவேண்டிவரும்... என்ன செய்ய... கஷ்டமே... வாழ்க்கையாகிவிட்டது. ஆண்டவன் கைவிட மாட்டான்... நிச்சயம் நம்மட பிள்ளைகளால் நமக்கு நிம்மதி இருக்கு என கூறியபோது... ரஜாவுக்கு ஏற்றுக்கொள்ள மனமே இல்லை...

தேநீர் குடிக்கவில்லை. வாழ்க்கையில் ஏதோ பறிகொடுத்த வனைப் போல் இடிந்து உட்கார்ந்திருந்தான். அவன் விபத்துக் குள்ளாகிய நேரம் கூட இப்படி கவலைப்பட்டது கிடையாது. தன் மனைவியை நினைத்து மிகவும் கவலைப்படத் தொடங்கினான்.

பஸ்லியா இன்னும் தொடர்கின்றாள். சரி நான் வேலைக்கு போகவில்லை... பிள்ளையை வளர்ப்பது எப்படி?... உங்கட மருந்து சாப்பாட்டிற்கு எங்கே போவது? என்று கூறி... தான் பட்ட அவமானங்களை கண்ணீரோடு சொன்னபோது ரஜா... மனைவியின் கண்களில் நீரைதுடைத்து... ஏதோ ஒரு முடிவுக்கு வருகின்றான்...

பெருமூச்சு விட்டவனாக சரியும்மா... போங்க... ஆனா கவனம்... நம்மட காலம் கூடாது... உங்களுக்கு ஒன்றென்றால் நான் உயிருடன் இருக்கவே மாட்டேன் பஸ்லி. என்று சின்னக் குழந்தை போல் முணங்கிக் கொள்கின்றான். கணவனின் அன்பும், பாசமும், அரவணைப்பும் பஸ்லியாவின் எல்லாக் கவலை களையும் தீர்த்தது...

கணவன் மனைவி என்பது புனித உறவாகும். அதனைப் பேணி வாழ்ந்தால் வாழ்க்கை முழுவதும் இன்பந்தான். அந்த பாசத்திற்கு விலை கிடையாது. அதற்கு நிகர் எதுவுமே உலகில் கிடையாது என பஸ்லியா நினைத்துக் கொள்கின்றாள்.

இவ்வாறு காலம் உருண்டோடியது. மகனை கொண்டுபோய் தாயிடம் விட்டுவிட்டு காலையில் தன் குழந்தை, கணவனின் கடமைகளை முடித்து காலை 6.00-2.00 மணி வரை டீச்சர் வீட்டில் வேலைக்கு சென்று வரும் பஸ்லியா...

இப்போது யாரிடமும் கடன் கேட்பதும் இல்லை... யாரும் கிண்டல் செய்வதும் இல்லை. ஏதோ ஒரு வகையில் காலம் ஓடிக் கொண்டிருந்தது.

★★★

இப்போது ரஜாவுத்தீன் கால்கள் சுகமாகி வந்து கொண்டி ருந்தது. ரஜா தனக்குத் தெரிந்த நண்பன் மூலம் மீண்டும் ஒரு கடையில் சேர முனைந்தான்... ஆனால் கால் சரியாக சுகம் வராத காரணத்தால் வேலை உடனே கிடைக்கவில்லை.

அன்று பஸ்லியா வேலை விட்டு வரும்போது வீட்டுக்காரர் பஸ்லியாவை வீதியில் வைத்துக் கதை கேட்டார். “கணவனின் சுகம் எப்படி?” என்று. அவள் மிக அடக்கமாக பதில் கூறினாள். ஓரளவு சுகம் என்று. தனக்கு தெரிந்த கடையில் சிறு வேலை யுள்ளது. இருந்த இடத்தில் இருப்பதுதான். பெரிய வேலை யில்லை. பெரிய கடை, முன்பகுதியில் போட்டிருக்கும் பொருட் களை பாதுகாப்பது மட்டும் தான். வேறு வேலை இல்லை என்று கூற. நான் வீட்டிற்குபோய் அவரோடு கதைத்து முடிவு சொல் கின்றேன் என்று கூறி பஸ்லியா விரைகின்றாள் வீட்டிற்கு...

பஸ்லியா தாயிடம் உள்ள தன் குழந்தையை எடுத்துக் கொண்டு வீட்டிற்கு வருகின்றாள்... வீட்டில் கணவரின் முகம் சரி யில்லை. ஏதோ கவலை நிறைந்த கோபத்தில் இருப்பதை உணர்கின்றாள். எனவே எதுவும் பேசவில்லை. பிள்ளைக்கு சாப்பாடு கொடுத்துத் தூங்க வைத்துவிட்ட பஸ்லியா கணவனருகே வருகின்றாள்.

என்ன ஏதும் சுகமில்லையா? என்று கேட்கவே... எதுவும் கணவன் கூறவில்லை. மௌனமாக இருப்பதை பார்த்து துடித்து விட்டாள்... என்ன பிரச்சினை... என்று கேட்கவே.... கணவன் கோபத்தில் சீறினான்...

ஆமா... எல்லாமே பிரச்சினைதான்... யாரோடு ரோட்டுல நின்று கதைத்தாய்?... என்று கணவன் கேட்கும்போதே விளங்கி விட்டது... அதற்கிடையில் யாரோ தன்னைப்பற்றி கூறி விட் டார்கள் என்று...

நான்... முதலாளியுடன்... என்று கதைக்க முற்படும்போதே.... ஏன்... முதலாளியுடன் வீட்டில கதைப்பது காணாது என்று

ரோட்டிலயும் கதைக்க வெளிக்கிட்டியோ... என்று பஸ்லியாவைப் பார்த்து பாசமிக்க கணவன் பழி பாதகங்களைக் கதைக்க முற்படு கின்றான்... பஸ்லியா அதிர்ந்து போய் விட்டாள்...கோவம் என்று வந்துவிட்டால் எதைக் கதைக்கின்றோம். யாரைப் பேசு கின்றோம் என்பது எல்லாம் மறந்து விடுகின்றது... ஆனால் அதன் தாக்கம் அப்படி மனதை உடைத்து விடுகின்றது... ஆண்டவனே! என்று அழுகின்றாள். இதயம் துடிக்கின்றது... மேனி கொதிக்கின்றது... ஆனால் அனைத்தையும் அடக்கிக் கொண்டு....

என் கணவனா? கதைப்பது... நான் செய்த தியாகத்தின் விலை இது தானா... ஆண்டவனே என்று இடியை கேட்ட நாகம் போல் ஆடிப் போய் விட்டாள்...

கணவன் தொடர்ந்து சத்தம் போட ஆரம்பித்தான்... வேலைக்கு போனோமா... வீட்டிற்கு வந்தோமா... என்று இருக்காம ரோட்டில... கடையில.. சீ.. என்ன பொம்பள நீ... என்று கூறி... ரோட்டில போனவன் வாறவன் எல்லாம் என்னைப் பார்த்து சிரிக்கின்றான் என்று கூறுகையில் இருந்த தேநீர் கோப்பையை கீழே போட்டு உடைத்து விடுகின்றான்... அந்த சத்தத்தில் தூக்கத்திலிருந்த குழந்தை எழுந்து அழ ஆரம்பிக்கின்றது...

பஸ்லியா பிள்ளையை மீண்டும் தூங்க வைக்கின்றாள்... ஆனால் அவள் நடைப்பிணமாகவே... நின்று கொண்டிருக் கின்றாள்...

கணவனின் கோபத்திற்கு முன் தன் கோபத்தை காட்ட விரும்பவில்லை...

ஆனால் அவளை அறியாமலே கண்ணீர் கரை புரண்டு ஓடிக்கொண்டது... ஒரு மூலையில் இருந்து ஏங்கி ஏங்கி அழுகின்றாள். அவளின் ஏக்கம் தியாகம் குடும்ப வறுமை எல்லாம் இணைந்துகொள்கின்றது. சிந்தனையில் சில துளிகள் எண்ணங்களில் கண்ணீரோடு உருண்டு கொண்டது.

வறுமை எனை ஏன் வாட்டியது...
வாழ்க்கை ஏனோ தடுமாறியது.
வல்லோனே உன் அருள் இல்லை எனின்
வழியே இல்லை தெளிய வைக்க

(என்று ஆண்டவனிடம் மன்றாடுகின்றாள்...அல்லாஹ்... என அழுகின்றாள்..... இதயத்தில் இறைவனை நினைக்கின்றாள்.)

அன்பும் பாசமும் நிறைந்த உள்ளம்
அருவருப்பு வார்த்தை பேசியதோ....
கணத்தில் உதித்த சந்தேகம் - என்
கற்பை களங்கம் ஆக்கியதே...

பசியின் கொடுமை வாட்டிடவே...
என் கணவன் வாழ்வை தேற்றிடவே...
சென்றேன் வேலையொன்று தேடி... நானும்
பழியும் பாதகம் ஆகியதோ...

உறவால் உணர்வால் இணைந்த உள்ளம்
உருகப் பேசிடும் வார்த்தை எல்லாம்
உண்மை இல்லை ஆண்டவனே!
காண்பாய் என் நிலை வையத்தில்

(கண்ணீரில் நனைந்தவளாய்)

பெண்ணாய் பிறந்த பாவம் இது...
பெருமை ஒன்றும் தேவையில்லை...
பழிச் சொல் ஏதும் கூறாமல்
பாரினில் வாழ வழிசமைப்பாய்...

(கண்களில் கண்ணீர் ஊற்றெடுக்க இதயத்தில் எண்ணங்கள் தொடர்கின்றன.)

வறுமையும் துன்பமும் வையத்தில்
பெண்கள் காண்பார் பலவடிவில்...
பாசமிகு கணவன் கூறும் வார்த்தை
முடியவில்லை தாங்கிடவே... ஆண்டவனே

(என்று அழுகின்றாள் இறைவன் முன்... அல்லாஹ்வே...)

உறவுகள் எல்லாம் உண்டெங்கும்
உதவிகள் இல்லை நான் துடித்தேன்...
தொழில்களை நாடிச் செல்லும்போதே
பழி சொல்ல உறவுகள் வந்தென்ன...
மனைவியாய் நான் செய்த தியாகமெல்லாம்
மறந்ததோ மன்னவன் நெஞ்சமிங்கு

என்று அல்லாஹ்விடம் புலம்பிக் கொண்டிருந்தாள் பஸ்லியா... அப்படியே தன் குழந்தையின் அரவணைப்பில் தூங்கிவிட்டாள்... (தலையணை முழுவதும் நனைந்துவிட்டது)

விடியும் பொழுதில் கண் முழித்தாலும் தலையில் யாரோ அடித்ததைப் போன்ற வலி தாங்க முடியவில்லை... இதயம் கனத்தது...

அவசரமாக எழுந்து இரவு சமைத்த உணவுகளை சூடு காட்டி வைத்து விட்டு... தேநீரை தயார் செய்து கணவனின் அருகில் வைத்து விட்டு பிள்ளையை தூக்கி கொண்டு வேலைக்காக புறப் பட்டாலும் மனம் சரியில்லை.... எனவே... அவர்கள் வீட்டில் போய் உடல்நிலை சரியில்லை... இரண்டு நாள் லீவு பெற்று வீடு வருகின்றாள்...

தாயின் வீட்டிற்கு வந்தபோது.... தன் உறவுகளை நினைத்து ஏனோ மனம் வேதனைப்பட்டது... வீட்டிற்கு பாரம் என்றார் கள்...இப்போ... எல்லாம் பாரமாகி விட்டது...என அவளை அறியா மலே கண்கள் குளமாகியது...

தாய் தந்தை சகோதரிகள் என்று எவ்வளவு சந்தோசமாக இருந் தேன்... ஆனா... இப்போ... முடியவில்லை.... பழிச்சொற்களை தாங்க முடியவில்லை... என்று யோசித்துக் கொண்டிருந்த அவளுக்கு தாய் கொண்டு வந்து கொடுத்த தேநீர் மனதில் ஏதோ ஒரு தென்பை ஏற்படுத்தியது...

தாயோ தன் முகம் வாடியிருப்பதைக் கண்டு... என்ன மகள் யோசனை என்று அன்போடு கேட்டபோது தன் வேதனைகளைச் சொல்லி அவர்களையும் கவலைப்படவைக்க விரும்பாத பஸ்லியா... ஒன்றுமில்லை உம்மா... என்று கூறிக்கொள்கின்றாள்... ஆனால் தாயோ தன் முந்தானையை ஏந்தியா அல்லாஹ்.......

ஏன்தான் என் பிள்ளைகளுக்கு இவ்வளவு சோதனையோ என்று இறைவனிடம் கையேந்தி கவலைப்பட்டுக் கொண்டிருந் தாள்...

பிள்ளைகள் திருமணம் முடித்து சந்தோசமாக வாழத்தான் வாழ்க்கை..... ஆனா துன்பமே வாழ்க்கையாகிவிட்டால்..... பஸ்லியா போன்ற பல பெண்களின் வாழ்க்கை எப்படி எப்படியோ செல்கின்றது.....

ஆனால் பஸ்லியா தன் துணிவையும் துடிதுடிப்பையும் விடவில்லை.... உலகில் வாழ்ந்துதான் பார்க்கணும்... என ஒரு நிமிடம் தன்னை சுதாரிப்பிற்குட்படுத்திய அவள்... தாயிடம் விடை பெற்றுத் தன் குழந்தையோடு வீடு நோக்கி வருகின்றாள்... தான் தப்புச் செய்யவில்லை.... ஏன் பயப்பட வேண்டும்.... என நினைத்துக் கொள்கின்றாள்.....

வீட்டில் பயங்கர அமைதி... ரஜாவுத்தீன் எழுந்திருக்க வில்லை.... தேநீர் கோப்பை தொடவும் இல்லை.... பஸ்லியா வீடு வாசலை துப்பரவு பண்ணிவிட்டு தானும் ஒரு மூலையில் சுருண்டு கொள்கின்றாள்.

ரஜாவை எழுப்பவோ.... தேநீரை கொடுக்கவோ விரும்ப வில்லை... ரஜாவை ஒரு கணம் நோக்கிய அவள்...இவரா... என்னை ... இப்படி கேட்டார் என்று நினைத்து நினைத்து உள்ளம் வெம்பிக்கொள்கின்றது... அவளை அறியாமலே... கண்களில் கண்ணீர்.... உருண்டோடியது.

சற்று நேரத்தில் ரஜாவுத்தீன் எழுந்து பார்க்கின்றான். வீடே... அந்தளவு அமைதி. பஸ்லியாவை பேசிவிட்ட கவலையில் அவனும் விடியும்வரை தூங்கவில்லை...

காலைப்பொழுதில் தூங்கி கண் விழித்த அவனுக்கு அவன் மனச்சாட்சி அவனை கேள்விமேல் கேள்வி கேட்டது.

மடையனே!

- உன்னை கரம் பிடித்து

  உனக்காக வாழ்ந்து - உன்

  கருவை சுமந்த பேதையடா....

- துன்பம் உனை தீண்டிய நேரம்

  தூரமான உன் உறவை நினைத்துப் பார்...

  ஆனால்

- தன் உடலை சாறாக்கி - பல

  தியாகம் செய்த உன் மனைவியை நினைத்துப் பார்

- குழந்தைக்கு தாயாக - உனக்கு

  மனைவியாக - உன்

  நோய்க்கு மருந்தாகி

  வீட்டின் பெருமைகளைக் காத்திடும்...

  பெண்ணடா... இவள்

- வாசல் படி தெரியா பெண்ணவள்... இப்போ

  எத்தனை வாசல் படிகள் ஏறியிருப்பாள்

  உதவிக்காக

- எத்தனை நாள் கண்ணீர் விட்டிருப்பாள்

  உனக்காக

- பல நாள் விழித்திருப்பாள் உன் நோய்க்காக...

மடையனே!

- வாசற்படி தாண்டி சென்றது... தன்
  சுகத்திற்காகவா... இல்லை
  உன்னையும் குழந்தையையும் காப்பதற்காகவா...

- உன்... வீட்டில் அல்லி ராணியாக இருக்கவேண்டிய அவள்
  மறுவீட்டில் வேலைக்காரியாக ஆகிவிட்டாள்

இது அவளின் தியாகம்.

அதன் விலை சந்தேகம்.

கொடிய வார்த்தைகள்...

அவள் ஒரு நிமிடத்தில் உடைந்துவிட்டாளே.... முட்டாள்... என மனச்சாட்சி உறுத்தியது......

அவள் இதயம் வெடித்து சுக்குநூறாகிப் போயிருக்கும். அவள் விட்ட கண்ணீரில் உன் பாசம் பெரும் கேள்விக்குறியாகியிருக் கும் என்று மனச்சாட்சி கூறிக் கொண்டிருந்தது... எந்தப் பக்கம் திரும்பினாலும் யாரோ அவனைப் பார்த்து கேள்வி கேட்பது போன்ற உணர்வு.....

ஆண்டவனே....... கோபத்தில் வாய்க்கு வந்ததெல்லாம் பேசிவிட்டோமே.. .. என்று எழும்ப முடியாமல் மிகவும் கஷ்டப் பட்டு எழும்பி உட்கார்ந்து கொள்கின்றான். தடியை ஊன்றி ஊன்றி காலைக்கடன்களை முடிக்கும் நேரம்.... மனைவி பக்கத்தில் இல்லை.... அதன் கஷ்டம் விளங்கியது.... அவள் பக்கத்திலிருந்தால் தனக்கு தடியின் உதவிகூட தேவையில்லை.... ஆனால் தடியிருந்தும் எவ்வளவு கஷ்டமாகவுள்ளது... என்று

யோசித்துக் கொண்டே வந்தவன்... வாசலில் யாரோ... வந்து நின்றார்கள்... அவர் வேறு யாருமில்லை... பஸ்லியாவின் முதலாளி... வாசலில் வந்தவரைக் கண்டவுடன் ரஜாவுத்தீனுக்கு ஏனோ கோபம் வரவில்லை. அமைதியாக என்ன விடயம் என்று கேட்டபோது... நேற்று உங்கட மனைவி... உங்களுக்கு ஒரு சிறிய வேலையொன்று தேடிக் கொடுக்கச் சொன்னா...

நீங்க வீட்டில சும்மா யோசித்துக் கொண்டிருக்கிறீங்க... சம்பளம் குறைவாயிருந்தாலும் ஏதும் கதிரையில் போய் இருந்து நாலுபேருடைய முகத்தைப் பார்த்தாலும் கவலைப்படாமல் இருப்பார்... என்று கவலையா கூறினா.... அதான் ஒரு வேலை யொன்று உள்ளது... கொஞ்சம் செய்துபாருங்கள்.. பிடித்தால் செய்யுங்கள்.... என்று கூறும்போது ரஜாவுத்தீனுக்கு தூக்கி வாரிப் போட்டது...

நேற்று ரோட்டில... இது தானா கதைத்தா என்று ரஜா கேட்க... ஆமா... நான் ஒப்பீஸ்ல இருந்து வர நேரம் போய்விட்டது... ஆள் அவசரமாக தேவை. அதான் உங்கட மனைவியை ரோட்டில வைத்து கதைத்தேன் என்று அவர் கூற... ரஜாவின் இதயம் கனத்தது...

தன்னோடு வாழ்ந்து கொண்டிருக்கும் தன் மனைவியைத் தானே புரிந்து கொள்ளவில்லையே..... ஆண்டவனே..... என்று நினைத்தவன்.... சேர்.... நான் நாளைக்கு வருகின்றேன்..... கட்டாயம் வருவேன் சார்..... என்று கூறி வழியனுப்பிவிடுகின் றான்.

பிறரின் கதைகளைக் கேட்டு தன் மனைவியை தானே கேவலப் படுத்திவிட்டேன்... ஆனால் ஊர் கதைப்பதில் என்ன தான் நியாயப்

படுத்தி விட்டோமோ... தன் மனைவிக்கான நியாயங்களை நாம் தட்டிக் கேட்க மறந்து விட்டோமே... ரோட்டில் செல்லும் ஆண் களை மனைவிமார் சந்தேகப்படுவது குறைவு... ஆனால் அதுவே ஆண்கள், உண்மை எதுவென்று தெரியாது பொங்கி விடுகின் றோம்... என தன்னைத் தானே நொந்து...சிறிது நேரம் கதிரையில் அப்படியே உட்கார்ந்துவிட்டான். என்ன செய்வது... என சிந்திக் கின்றான். வெட்கத்தை மறந்து.

ஏதோ மன்னிப்புக் கேட்க வேண்டியதுதான்... அடி விழுந் தாலும் பரவாயில்லை... என்று மனதில் எண்ணியவன்...

பஸ்லியாவை மெதுவாக எழுப்புகின்றான்.... பஸ்லியா... தூங்க வில்லை... அங்கு நடந்த விடயங்களைக் கேட்டுக் கொண்டிருந்தாள்... கண்கள் மட்டும் கண்ணீரோடு தூங்கிக் கொண்டிருந்தது.

பஸ்லி... எழும்புங்க... என்று எழுப்ப முயற்சி செய்கின்றான். சிறிது நேரத்தில் பஸ்லியா எழுந்து எதுவும் பேசவில்லை.

தயவு செய்து மன்னித்துக் கொள்ளுங்கள்...

என்று கேட்ட போது, எழுந்து சென்றவளை ரஜாவுத்தீன் கையில் எட்டிப் பிடித்து விடுகின்றான்... எனக்கு எங்கட வாப்பாதான் வந்து சொன்னார். நீங்க ரோட்டில நிண்டு கதைக்கிறீங்க என்று. தயவு செய்து மன்னித்து கொள்ளுங்கள்...

உலகில் எத்தனை மாமா, மாமி, மச்சிமார்கள் குடும்பத்திற்கு உதவியாக இருக்கின்றார்கள் என்பது யோசிக்க வேண்டிய விடயம்... அநேகமாக பிரச்சினைகளே இவர்களாலும், சில

பிரச்சினை... ஊர் பிரச்சினைகளை வாழ்க்கையாக்கிக் கொள்ளும் பலரால்தான் வீட்டில், சமூகத்தில், நாட்டில் குழப்பங்கள்!

உள் ஒன்று வைத்து புறம் பேசுபவர்கள். பலருடைய பிரச்சினைகளுக்கு குழப்பங்களை ஏற்படுத்துபவர்கள், அமைதியைக் குழப்புபவர்கள், நம்பிக்கைத் துரோகம் செய்பவர்கள் நாட்டில் அதிகமாகிக் கொண்டிருப்பதால்தான் எங்குமே நிம்மதி இல்லை... ஆனால் இவர்கள் இறைவனடி சேரும்போது எப்படி பதில் கூறுவார்களோ தெரியாது.

அரசன் அன்று கொல்வான்

தெய்வம் நின்று கொல்லும்...

நிச்சயம் இறைவனின் தீர்ப்பு யாரையும் விடுவது இல்லையே.

★★★

பஸ்லியா சில நாட்கள் ரஜாவுத்தீனோடு கதைப்பது இல்லை. அவளால் எதையும் மறக்கவும் முடியவில்லை. ஆனால் ரஜா பஸ்லியாவோடு கதைக்க முற்பட்டாலும் கேட்கும் கேள்விகளுக்கு மட்டும் விடை கூறி விலகிச்சென்றாள்... தான் செய்தது மகா தவறு என்பதை உணர்ந்த அவன்... பஸ்லியாவை கடிந்து கொள்ளவில்லை.

நாட்கள் நகர்ந்தன... ரஜாவுத்தீன் மீண்டும் வேலைக்கு சென்று வரலானான். பஸ்லியா வேலை செய்வதை நிறுத்திக் கொண்டாள்... சிறிது சிறிதாக இருவரின் இதயங்களும் ஒன்றாகின...

பஸ்லியாவின் சந்தோசத்திற்காக ஏங்கிய ரஜாவுத்தீன் அவளின் பாச அரவணைப்பிற்காக பல நன்மைகளைச் செய்யலானான். பஸ்லியாவுக்கு எந்த விடயங்கள் பிடிக்குமோ... அனைத்தையும் செய்துவரலானான். பஸ்லியா மீது ரஜாவுத்தீன் இப்போ அளவு கடந்த அன்பு காதலாக மாறி கணவன் மனைவி நற்பண்புகளை யும் தாண்டி பாசப்பிணைப்பை ஏற்படுத்தியது...

பஸ்லியாவுக்கு இரண்டாவது குழந்தையும் பிறந்துவிட்டது. வீட்டில் சந்தோஷத்திற்கு அளவுகள் இல்லை. ஆசைக்கு ஓர் பெண்ணும் ஆஸ்திக்கு ஒரு ஆணும், அன்பான கணவன். பஸ்லியா இப்போது அந்த வீட்டில் ராணியாக வலம் வந்து கொண்டி ருந்தாள்.

இப்போதெல்லாம் பூமி மிக வேகமாக சுழல்கின்றது காலம் மின்னல் வேகமாக ஓடியது... இரண்டு குழந்தைகளும் மிக செல்லமாக வளர ஆரம்பித்தனர்.

குழந்தைகளின் மழலைப் பருவத்தின் அழகை ரசித்த இதயங் கள் இரண்டும் சந்தோசத்தின் உச்சியில் நின்றன.

மகனும், மகளும், மிகவும் கெட்டிக்காரக் குழந்தைகள்தான்... இரண்டு குழந்தைகளும் தாயின் கட்டுப்பாடும் தந்தையின் கட்டளையையும் செவிமேற்கொண்டு செய்தனர்...

பெரியோரை மதித்தல், சிறுவர்களுடன் அன்பாக பழகுதல், இறைவனைத் தொழுதல், இறைவேதம் கற்றல், கல்வியில் உயர் வடைதல், மரியாதையாக நடத்தல்... பிள்ளைகளின் கட்டாய கடமைகள் என்பதை பெற்றோர் குழந்தைகளுக்கு சொல்லிக்

கொடுத்தனர். குழந்தைகள் இருவரும் பெற்றோரின் கடமைகளை ஏற்று நடக்கலானார்கள்.

பஸ்லியாவுக்கு தன்னால் படிக்க முடியவில்லை... என்பதின் கவலையை பிள்ளைகளில் தீர்க்க நினைத்தாள். குறிப்பாக கூறப் போனால் அழிந்த இலட்சியங்களை தன் குழந்தைகளில் காண நினைத்தாள்.

ஆனால் அன்பு, பாசம், அரவணைப்பு, அறிவு எல்லாமே குழந்தைகளுக்கு பெற்றோரிடமிருந்து கிடைத்ததால் குழந்தை கள் தவறுகள் செய்வதிலிருந்து காத்தது...

எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக் கையிலே அது நல்லவராவதும் தீயவராவதும் அன்னையின் வளர்ப்பினிலே... என்பதற்கு பஸ்லியா முன் உதாரணமாக காணப்பட்டாள்.

பெண் குழந்தையை படிக்க வைப்பதில் கவனம் செலுத்து வதைவிட ஓதல் (இறைவேதம் கற்றல்) மூலம் மௌலவியா (பெண் மதகுரு)வாக உருவாக்க நினைத்தாள். எனவே... அதற்காக உருவாக்கப்பட்ட ஒரு மத்ரஸா (மதத்தை கற்பிக்கும் இடம்) வுக்கு விட்டு கல்வியை தொடரச் செய்தார்கள்... அக்குழந்தை அக்கற்றல் பணிகளை தொடர சகல ஏற்பாடுகளும் செய்து கொடுக் கப்பட்டது பெற்றோர்களால்...

ஆனால் நிஃமத் ஆண் குழந்தை என்பதால் அவன் சமூகத் தில் பல விடயங்களை கற்றுத் தெளியவேண்டும் என்பதில் மிகக் கவனமாக இருந்தனர் பஸ்லியா ரஜாவுத்தீன்... இவ்வாறு

11 ஆம் வகுப்பு வரை காலம் உருண்டோடியது. நிஃமத் கிராமத்திலுள்ள சிறிய பாடசாலை ஒன்றில் கல்வியைத் தொடர்ந்தாலும் பாடசாலையில் முதன்மைச் சின்னமாக விளங்கினான். பெற்றோரின் கனவுகளை நினைவாக்க வேண்டும் என்பதில் அவன் கவனம் இருந்தது... காரணம் அவன் தாயின் செல்லப் பிள்ளையாகும். பொதுவாக ஆண் குழந்தை தாயின் அரவணைப்பையும் பெண் குழந்தை தந்தையின் பாசத்திற்குள்ளும் அகப்படுவது விஞ்ஞானம் கண்ட உண்மைகள்தானே. இவை இவர்கள் குடும்பத்திற்கும் விதிவிலக்கல்ல.

நிஃமத்திற்கு வழிகாட்டியாக தாய் பஸ்லியா துணை நின்றாள். எந்த ரியூசன் எதுவுமில்லை. எந்த பிரச்சினை என்றாலும் பஸ்லியா மகளையும் மகனையும் அரவணைத்து வழிகாட்டுவதில் சளைக்கவில்லை... பஸ்லியாவின் துணிவும் வீரமும்... அவளுக்கு ஏற்பட்ட பல சவால்களை முறியடித்து... பிள்ளைகளின் இலட்சியப் பணிகளில் வெற்றிக்கான துணையாக நின்றது எனலாம்.

தந்தையின் பங்களிப்பு காலையில் சென்றால் கடை, மாலை / இரவு வீடு வருவதும் சம்பள பணத்தை பஸ்லியாவுக்கு கொடுப்பதுமாக அவரது பணி முடிவடைந்தது... ஆனால் பஸ்லியாவின் கடமை...

காலை எழுந்து பிள்ளைகளுக்கு உணவு சமைப்பது, உடை, பாத்திரங்கள் கழுவுதல், வீடு ஒழுங்கு செய்தல், வருமானத்திற்கு ஏற்ற மாதிரி செலவு செய்தல், பிள்ளைகளின் கல்விக்கு வழிகாட்டியாக இருப்பது... மாலையில் வீடு வரும் கணவனுக்கு நல்ல மனைவியாக இருப்பது... என வேலைகளை அடுக்கிக்

கொண்டே செல்லலாம். இது எல்லா வீடுகளிலும் உள்ள பெண்கள் செய்யும் வேலைகள் தான் ஆனால் சமூகம் பெண்கள் செய்யும் வேலைகளை வேலைகளாகவே நினைப்பது இல்லை... இது பெண்களுக்கான கடமை எனப் பலர் கூறிக்கொள்கின்றனர்... இவை எந்தளவு நியாயம் என்பது விளங்கவில்லை... ஆனால்... பஸ்லியா மனைவி... (மனை என்பது வீடு... வி.. என்பது சாவி) வீட்டின் நல்ல சாவியாக தொழிற்பட்டாள்...

இதனால் அந்த வீட்டில் எதிர்காலம் ஒன்றாக வர வழி ஏற்பட்டது.

அதே போல் ரஜாவுத்தீன் மனைவிக்குரிய கணவன். (கண்+அவன்) கண்ணுக்கு இமைபோல வீட்டின் நல்ல துணை வனாக இயங்க ஆரம்பித்தான்.

இவர்களின் வாழ்க்கைச் சக்கரம் மிக கவனமாக உருண்டு கொண்டன... அதில் பயணம் செய்த குழந்தைகள் இருவரின் எதிர் காலம் இன்பமாக துலங்க ஆரம்பித்தன.

பிள்ளைகளின் வளர்ச்சிப் படிகளில் ஏணிப்படியாக இருந்து பெற்றோர் உழைத்தனர். பிள்ளைகளின் உயர் படிப்புகளில் எல்லாமே... பெற்றோர்... மிகக் கவனமான முறையில் பாடத் தெரிவுகளைத் தெரிவது தொடக்கம் கல்வி கற்கும் முறை வரை பஸ்லியா தெளிவாக வழிகாட்டினாள். சில கேள்விகளுக்கான விடைகள் விளங்காத சமயங்களில்... தெரிந்தவர்களிடம் சென்று விடைகளைத் தேடி குழந்தைகளின் கல்விக்குத் தடையாக வரும் விடயங்களுக்கு விடைகாண உதவினாள்.

பரீட்சைக் காலங்களில் பிள்ளைகள் தூங்கினாலும் பஸ்லியா தூங்குவது கிடையாது... தானும் புத்தகங்களைப் படித்து... சுருக்கக்

குறிப்புகள் எடுத்து வினாக்களை தெரிவுசெய்து விடைகளை தேடித் தொகுப்பு புத்தகங்களை ஆக்கிவிடுவாள்... அனேகமாக பஸ்லியா தேடிக் கொடுக்கும் கேள்விகள் பரீட்சை காலங்களில் வருவதால் பிள்ளைகள் தாய் மீது நம்பிக்கை வைத்தனர்... பிள்ளை களுக்கு ஏற்ற மாதிரி, பிள்ளைகளின் நிலைகளுக்கு ஏற்ப பிள்ளை களுக்கு கற்பிக்கலானாள். எவ்வளவு வேகமாக தனது வேலைகளை முடிக்க முடியுமோ... அவ்வளவு வேகமாக பிள்ளைகளின் கல்வி விடயத்தில் கண் விழித்துப்பாடுபட்டாள்...

ஆனால் இந்த விடயம் கணவன் ரஜாவுக்கு ஒரே சிரிப்பு... மகனை பார்த்து... மகன்... நிஃமத்... சோதனை உங்களுக்கா?... அல்லது உம்மாக்கா?...

மகனும் எனக்கு சோதனை இல்லை வாப்பா. உம்மாதான் பாவம் கஷ்டப்பட்டு படிக்கின்றா... பாஸ் பண்ணுவாவோ... தெரியாது... என்று கிண்டல் பண்ணும் போது பஸ்லியாவுக்கு வெட்கம் வந்தா லும் அடக்கிக் கொண்டு கோபத்தில் ஒரு பார்வை...

வாப்பாவும் பிள்ளையும் வந்த சிரிப்பையும் அடக்கிக் கொள் வார்கள்.

மகன் வாப்பாவிடம் காதிற்குள் கூறிக்கொண்டான். “உம்மா... டென்சன் பார்ட்டி”... என்று... தந்தைக்கு சிரிப்பு...இவ்வாறு நாட்கள் மாதங்களாகி, மாதங்கள் வருடங்களாகி, வருடங்கள் பலவும் கடந்து....

உயர்தரப் பரீட்சை முடிவு வெளியாகி விட்டது.

★★★


மகன் ஓடோடி வருகின்றான்... உம்மா... உம்மா... எனக்கு... எனக்கு... பெறுபேறு... வந்துள்ளது என்று தாயை கட்டிப்பிடித்து கண்ணீர் விடுகின்றான்... அவள் பயந்துவிட்டாள். என்ன தம்பி என்று கேட்டு கையில் இருந்த பேப்பரை வாங்கி பார்த்த போது நாலும் A ஆ! அல்லாஹ்... மாஸா அல்லாஹ் (இறைவனைப் புகழ்கின்றனர்) அல்ஹம் துலில்லாஹ் என்று... அல்லாஹ்வுக்கு நன்றி கூறிக்கொள்கின்றாள்.

உம்மா... இதுவெல்லாம் உங்களால்தான் எனக்கு கிடைத் தது... என்று மகன் தாயிடம் கூறி தாயைக் கட்டியணைத்துக் கொள்கின்றான்... அல்லாஹ்வை நினைக்க வேண்டும் மகன்... என பஸ்லியா கூறியபோது... செய்தி கேள்விப்பட்ட வாப்பா வாசல் படிகளை எட்டிப் பார்க்கும்போது... உம்மாவினதும் மகனினதும் ஆனந்த பூரிப்பில் தானும் இணைந்து கொள்கின்றார்...

O/L பரீட்சையிலும் நிஃமத்... 9 A எடுத்தபோதும் கூட... A/L பாடத்தில் பஸ்லியா கணிதப் பாடப்பரப்பை தெரிவுசெய்து... மகனை பொறியியலாளர் ஆக்குவதற்கு முயற்சிகளை மேற் கொண்டார்.

பல்கலைக்கழகம் தெரிவாகிய செய்தி கேட்டு அந்த சிறிய வீட்டில் நிறைய கல்விமான்கள் நிஃமத்திற்கு வாழ்த்து சொல்லி சென்றனர்... பாடசாலையில் சமூகத்தில் நல்ல மனிதனாக இப்போது நிஃமத் பிரகாசிக்கப்போகின்றான் என்பது உண்மை யாகியது. ஒரு ஆசானின் கற்பித்தலை விட ஒரு பெற்றோரின் தியாகம்தான் இந்த குடும்பத்தின் விடியலுக்கு சான்றாகியது.

★★★



வாசலில் தபாற்காரனின் அழைப்பு மணி.... நிஃமத் ஓடோடி செல்கின்றான்... கையில் கடிதம் பல்கலைக்கழக அனுமதி...

ஏற்கனவே...அதற்காக ஒழுங்குகளை செய்து வைத்திருந்த நிஃமத் தாயிடம் கடிதத்தை காட்டியபோது... வாற மாதம் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இணையவேண்டும்... என்று கவலையோடு கூறிக்கொள்கின்றான்... எதற்கும் கவலைப்படக் கூடாது... அல்லாஹ் துணை... என மகனுக்கு ஆறுதல் கூறினாள் தாய்...

இவர்களின் கவலைக்கு காரணம் தொடர்ந்து படிக்க வைக்க கையில் பணம் எதுவும் இல்லை. மாதம் செலவாகப்போகும் பணத்தை நினைத்து மிக கவலைப்பட்டான் நிஃமத்... காரணம் தந்தையின் சிறிய உழைப்பில் தாய் என்ன செய்யப் போகின்றார்? முன்பு சின்னப்பிள்ளை... எந்த கவலை கஷ்டம் தெரியாது ஆனால். இப்போது வளர்ந்து விட்டான்... தங்கையின் படிப்பிற்கே... மாதம் 10,000 (பத்தாயிரம் ரூபா... செலவாகின்றது... என மிகவும் கவலைப்பட்டவன்... தாயின் முகத்தை கவலையோடு பார்க்க... தாயின் புன்னகை தவழ்ந்த முகம் கவலைப்படாதே மகனே என்று ஆறுதல் பேசியது.

பல்கலைக்கழகம் செல்லும் நாள் நெருங்கியது. இரவு தூக்கம் வரவில்லை. நிஃமத்திற்கு.... ஏதோ... மனவேதனை... படுக்கையில் இருந்து எழுந்து கொள்கின்றான். ஆனால் அவன் நினைவலைகளில் ஏதோ ஓடிக்கொண்டிருந்தது.

அன்பிற்கு அன்னையவள்
அரவணைப்பின் தந்தையவர்

பாசத்தின் சிகரங்கள் - என்
உள்ளத்தில் குடியிருக்க...

கல்வியென்ற கடலலைகள்
மாற்றியதே என் வழிகளைத்தான்...
ஒற்றுமையாய் ஒன்று கூடி...
உணவுண்ணும் காலங்கள்...

பாசத்தோடு சண்டை செய்து - பெற்றோரின்
அணையில் படுத்துறங்கும் காலங்கள்...
கல்வி என்ற மருந்தையும் அமிர்தமாக்கி தந்த
என் தாயவளின் இலட்சியங்கள் நினைவான
காலங்கள் - இனி கனவாகக் கூடாது... ஆனால்...

கல்வியை தொடர்ந்திட காசு மாலை வேண்டும்
கனக்கின்ற இதயங்கள்.... தோற்றிடுமோ
என் இலட்சியத்தை...

இல்லை இல்லை..... துணிந்து நில்..... மலைகளும் மண்ணாகும் நிமிர்ந்து நில்... கனவுகளும் நினைவுகளாகும்..., முயற்சியோடு போராடு..... வென்றிடுவாய் வாழ்வில் என்றும் இவை தாய் கற்றுத் தந்த பாடங்கள்...

இரவுகள் எல்லாமே... ஏதோ ஒரு விடியலுக்காகத்தான், துன்பங்கள் எல்லாமே... ஏதோ ஒரு வெற்றிக்காகத்தான்...

கல்விக்கான தடைகளைக் கண்டு பயப்படக்கூடாது... கல்வி வேகம் அதிகரிக்கும் போது தடைகளைத் தாண்டிவிடலாம்... என்று... நினைத்தவன்

“அல்லாஹ் கைவிடமாட்டான்”

என்று உம்மா சொல்லும் வசனத்தினை அவனும் கூறிக் கொள்கின்றான். இவ்வாறு மனப் போராட்டங்களில் நிஃமத் தூக்கம் வராமல் புரண்டு கொள்கின்றான்.

★★★

மறுபக்கத்தில் தாய் பஸ்லியா தூக்கம் வராமல் படுத்துத் தூங்க முயற்சி செய்து கொண்டிருந்தாள். கணவன் ரஜாவுத்தீன் பஸ்லியாவின் மனநிலைகளை நன்கு அறிந்து கொண்ட கணவனல்லவா....

பஸ்லி.... என மெதுவாக அழைக்கின்றான். பஸ்லியா... ம்... சொல்லுங்க... என்று கூறும்போது கொஞ்சம் வாங்களேன்... என்று மெதுவாக கூற பஸ்லியா எழுந்து ரஜாவுத்தீனைப் பார்க்க அவனும் தூங்கவே இல்லை... மணி பன்னிரெண்டாகி விட்டது. கதிரையில் அமர்ந்து யோசித்துக் கொண்டிருக்கின்றான்... சீ... நாம... படுத்து விட்டோமே... என பஸ்லியா பதறிப்போய் விட்டாள்.... என்ன!... நீங்க தூங்கலையா... எனக் கேட்க...

இல்ல பஸ்லி... எனக்கூறிய நேரமே... பஸ்லியா அவனருகே வந்து நிற்கின்றாள்...

தலையில் கையை வைத்துப் பார்க்கும் நேரம்... எனக்கு ஒன்று மில்லை... மகனை நினைத்து தூக்கமே வரவில்லை... நாளை மகன் பல்கலைக்கழகம் செல்லவேண்டும். சாமான் கொஞ்சம்தான் வாங்கியிருக்கு... இன்னும் காசு வேண்டும்... என்ன செய்யப் போறீங்க... எனக் கேட்ட போது பஸ்லியா சிரித்தே விடுகின்றாள்.

ஓ... இதுதான் உங்கள் கவலையா.... என்று கேட்கும்போது.... ஏன் உங்களுக்கு கவலை இல்லையா.... என்று கணவன் கேட்ட போது பஸ்லியா தொடர்கின்றாள்.... நீங்க தாற காசில மாதம் இரண்டாயிரம் (2000/=)ரூபா சேர்த்து சீட்டு போட்டு ஒரு ஐம்பது ஆயிரம் ரூபா என்னிடம் இருக்கு.... அது.... என்ற போது....

கணவனுக்கு மனைவியை நினைத்து மிகச் சந்தோசம் காரணம்... உண்மையில் மிக நிதானத்துடன் யோசிக்கும் பஸ்லியா போன்ற பெண்களால் குடும்பத்தில் வரும் எந்தப் பிரச்சினைகளையும் வென்று விடலாம்...

பஸ்லியா தொடர்கின்றாள். அந்த காசு நாளை வரும். நாம மிகுதி சாமான் வாங்கி நிஃமதை வழியனுப்பலாம்... மிகுதியை பின்பு யோசிப்போம்.

அல்லாஹ் என்றும் கைவிடமாட்டான்.

எம்மை போன்ற ஏழைகளுக்கு சோதனை வரும்... ஆனால் ஏதும் வழியேற்படும்... நாளை தொழுது அல்லாஹ்விடம் கேட்போம் நிச்சயம் எல்லாம் இலேசாகி விடும் என்று கணவனுக்கு ஆறுதல் கூறினாள் பஸ்லியா... எல்லாம் உங்கட காசுதான்... என்று கணவனைப் பார்த்து கூற.... கணவன்.... வேறு என்ன இருக்கு ஒளித்து ஒளித்து... என்று மனைவியைக் கேட்க.... அவளுக்கு விளங்கிவிட்டது.... நாளைக்கு மகனை அனுப்ப வேண்டும் போய்படுங்க.... என்று மனைவி கூற.... கணவன் ரஜா.... மனைவியின் கரம் பற்றிக்கொள்கின்றான்.

பஸ்லியா! நீங்க... மகனை வழியனுப்ப முடிவு செய்திட்டீங்க... என்ன... என்று கேட்க... இவ்வளவு நாளும் மகனைப் பிரிந்திராத தம்பதிகள் இப்போது... பிரிவு என்ற சொல்லால் துடித்து நின்றனர்.

பஸ்லியாவின் கண்களில் இருந்து கண்ணீர் மாலை மாலை யாக வடிந்தது... மகன் நிஃமத் பஸ்லியாவின் - ரஜாவுத்தீனின் - உயிர் அல்லவா...

ஆனால் ஒரு நிமிடத்தில் ரஜா... தெளிவாகிக்கொண்டான்... ஏய்... அழுகின்றாயா... நான் சும்மா கேட்டேன்... இங்க பாரு... நாளை அழுது அவனைக் குழப்பக்கூடாது... அல்லாஹ்வை நினைத்து அவனை அனுப்புவோம். கல்விக்காகத்தானே அனுப் பப்போகின்றோம்... என்று கூறினாலும் பஸ்லியா... கணவனின் மார்பில் சிறு குழந்தை போல அழுது முடித்தாள்...

பஸ்லியா எவ்வளவுதான் அந்த வீட்டில் நிர்வாகியாக இருந்தாலும் இரவு நேரத்தில் ஓய்வான நேரத்தில் கணவனிடம் எல்லா மனப்பாரத்தையும் கொட்டிக்கொள்வாள்... சிறு குழந்தை யாக கணவனோடு நடந்து கொள்வாள்....

அதனால் கணவன் மனைவிக்கிடையே எந்த ஒளிவு மறைவு எதுவும் இல்லை.... அதனால் கணவன் மனைவியின் வாழ்க் கைப் பயணம் தடம் புரளாது ஓடிக்கொண்டிருந்தது.

★★★

காலையில் எழுந்து சுப்ஹ் தொழுது... தேநீர் கோப்பை யோடு நிஃமத்தின் பிரயாணம் தொடர்பாக யோசிக்கும் நேரம் வாசலில் ஒரு மாமி... வருகின்றார்... அவர் கையில் காசோடு

வரவே... பஸ்லியா சிரித்துக் கொண்டே.... வாங்க மாமி... என்று கூறி.... கதிரையை போடும் போதே.... மாமி காசுப் பையை பஸ்லியாவிடம் கொடுக்க பஸ்லியா கணவனிடம் கொடுத்து எண்ணி எடுங்கப்பா.... என்று கூறி மாமிக்கும் தேநீர் பரிமாறிக் கொள்கின்றாள்...

மகன் எழுந்து வந்தவன் காசைக் கண்டு கடன் வாங்கினீங்களா... உம்மா... என்று கேட்கவே தந்தை ரஜா இல்லை... தம்பி... உம்மாட... சேவிங் என்று கூற... மகன் தாயை வியப்போடு பார்க்கின்றான்.

தாயோ மகனிடம் இல்ல தம்பி... உங்கட படிப்புக்காக 2000/= (இரண்டாயிரம் ரூபா) சேர்த்து வந்தேன். அதான் மாமி கொண்டு வந்து தந்துள்ளார்... எனக்கு தேவைப்படும்போது தாங்க... என்று சொல்லியிருந்தேன்.. என்று மகனிடம் தாய் கூறிய போது... தாயின் பெருமையை நினைத்து மகன் மெச்சிக்கொண்டான்... ஆனால் தாயோ எல்லாம் உங்கட வாப்பாட உழைப்பு என்று கூறிக் கொண்டிருந்தாள்.

அந்த பணத்துடன் அவனுக்குத் தேவையான சகல பொருட்களும் வாங்கி மிகச் சிறப்பாக வழியனுப்ப ஏற்பாடு செய்யப்படுகின்றது. தந்தை மனதில் கவலையோடு வாசலில் உட்கார்ந்திருக்க... மனைவி கண்ணீரோடு சமையலறையில் சாப்பாடு சமைக்க... மகன் நிஃமத் தனது அறையில் தயாராகிக் கொண்டிருந்தான்...

ஒரு கூட்டுக் கிளிகளான எம் வாழ்வில்...
பிரிவு என்ற ஒன்று ஏனோ... இன்று...

தாயின் இலட்சியங்களை நினைவாக்க

வேண்டுமானால்

பிரிவு என்ற ஒன்றை ஏற்கத்தானே வேண்டும்.

வெற்றிக்குப் பிரிவுதான் படி என்றால் நான்

ஏறிச் செல்லத்தானே வேண்டும்...

என்று ஏதோ நினைத்தாலும்... வீட்டை விட்டு செல்ல மன மில்லாதவனாக... மெது மெதுவாக புறப்படுகின்றான் நிஃமத்...

இவ்வாறு மூன்று உள்ளங்களும் மூன்று மூலைகளில் தவித்துக்கொண்டிருந்தன... சிறிது நேரத்தில் ஆட்டோ வரவே...

தந்தையும் மகனும் புறப்படுகின்றார்கள்... பஸ்லியா இரு வரையும் வழியனுப்ப ....... வாசலில் வந்தவள்

மகனிடம் பஸ்லியா ஒழுங்காக தொழுங்கள், நேரத்தோடு சாப்பிடுங்கள்... என்று கூற... மகன் தொடர்ந்தான்... கூட்டாளிமார் களோடு சேரக் கூடாது. ஒழுங்கா படிக்கணும். நல்ல பிள்ளையா இருக்கணும்... என்று தாயின் புராணத்தை தொடர்ந்தாள். பஸ்லியா கூறும் விடயங்கள் அவனுக்கு பாடமாகிவிட்டது... சிரித்துக் கொண்டே..... அல்லாஹ்வுங் காவல்..... போய் வருமாறு வழி யனுப்பி விடுகின்றாள்..... மகனும் தந்தையுடனும் ஆட்டோ விரைந்து செல்கின்றது...

பஸ்லியாவின் கண்களில் இருந்து கண்ணீர் தாரை தாரை யாக கொட்டுகின்றது... மகனின் பிரிவு அவளால் தாங்கமுடிய வில்லை.. அன்று இரவே... கணவனும் வீடு வந்து விடுகின்றார்...

வீடே... ஏதோ ஒரு அமைதியாகியது.... வீட்டில் யாருமே... இல்லை... பஸ்லியா ஒரு மூலையில் சுருண்டு கொண்டாள்... ரஜாவுத்தீன் மறு மூலையில் அன்று இரவின் பயணம் மிக அமைதியாகியது...

★★★

நாட்கள் கடந்து சென்று கொண்டிருந்தன. படிக்க வைக்க செலவு கள் அதிகரித்தன. மாதம் பிள்ளைகளுக்கு மட்டுமே முப்பதாயிரம் ரூபா தேவையாக இருந்தது... கடனாளியாகி விடுவோமோ... என்று பயந்தனர்... ஆனால் பஸ்லியா பக்கத்து கடையொன்றிற்கு இடியப்பம், பிட்டு அவித்து கொடுக்க யோசிக்கின்றாள்... ஆனால் கணவனுக்கு விருப்பம் இல்லை... ஆனால் கடன்களை யோசித்து.. செய்ய வழி இல்லாமல்... அந்த வேலைகளில் ஈடுபட ஆரம்பிக் கின்றாள்...

காலை எழுந்து தேவையான பிட்டு இடியப்பம் தயார்படுத்தும் போது ரஜா... கடையொன்றிற்கு கொண்டுபோய்க் கொடுப்பான்... தான் கடை வேலை முடிந்த பின்பு... கணக்கு பார்த்து காசு... கொண்டுவந்து மனைவியிடம் கொடுத்து வரலானான்.

ஏதோ மேலதிக வருமானங்களால் ஒருவாறு பிள்ளைகள் படித்து வரலானார்கள். தாய் தந்தை இருவரின் ஒற்றுமை ஒரு குடும்பத்திற்கு எந்தளவு முக்கியம் என்பதை இவர்கள் வாழ்வு எடுத்துக்காட்டியது.

களவு, பொய், சுத்துமாத்து இவைகளைத் தவிர்த்து உண்மை யில் உழைத்தால் பின் நல்ல பலன்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

இவ்வாறு காலச் சக்கரம் ஓடியது... அன்று அவசர அவசரமாக காலையில் இடியப்பம், அப்பம் வேலைகளை முடித்து ரஜாவை அனுப்பிவிட்டு மிகுதி வேலைகளை செய்ய நினைத்தவள் தலை சுற்றி... கீழே விழப்பார்த்தாள். ஆனால் வீட்டில் யாருமே இல்லை... அப்படியே... போய் ஒரு கதிரையில் அமர்ந்தவளுக்கு பத்து நிமிடம் எதுவும் தெரியவில்லை.

சற்று நேரத்தில் கண் முழித்துப் பார்த்தாள். தரையில் படுத்திருப்பது தெரிந்தது... மெதுவாக எழும்புகின்றாள்... கட்டிலில் போய் படுத்து சிறிது நேரம் ஓய்வு எடுக்கின்றாள்... ஆனால் காய்ச்சல் நெருப்பாக கொதித்தது. பனடோலை எடுத்து போடுகின்றாள்... எழுந்திருக்கவே முடியவில்லை...

மௌத்தின் நினைவுகள் இதயத்தில் வந்து நிழலாடியது... இரண்டு குழந்தைகளின் முகங்களை பார்க்க முடியாமல் போய் விடுவோமோ... என்ற பயம் பிள்ளைகளைப் படிப்பித்து முழு மனிதர்களாக்காமல் என் உயிர் போகக்கூடாது... என்று அல்லாஹ் விடம் து ஆ (மன்றாடுதல்) செய்கின்றாள்... கண்களில் வடிந்த நீரை துடைத்து... மெதுவாக கணவனை தொலைபேசியில் அழைக்கின்றாள்...

ஒரு நாளும் மனைவி இந்த நேரத்தில் போன் எடுப்பதில்லை... ஹலோ... என்னம்மா... என்று கேட்க... கொஞ்சம் வீட்ட வருவீங்களா?... என்ன?... என்று கேட்க ஒன்றுமில்லை சும்மாதான்... கொஞ்சம் வந்துவிட்டு போங்க... என்று கூற... முதலாளியிடம் விடை பெற்று வீடு வருகின்றான் கணவன்...

வாசற் கதவு திறந்திருக்கின்றது... வீடு ஒழுங்குபடுத்தப்பட வில்லை. அடுப்படியில் எதுவுமே கழுவப்படவில்லை. மனைவி கட்டிலில் சுருண்டு கொண்டிருந்தாள். தலையை தொட்டுப் பார்த்தால் காய்ச்சல் அனலாக அடித்தது. கண்களில் இருந்து நீர் கொட்டிக் கொண்டிருந்தது. யா அல்லாஹ்... என்று பெருமூச்சு விட்டவன்... பக்கத்திலிருக்கும் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்கின்றான்.

வைத்தியர்கள் இரண்டு நாள் வைத்தியசாலையில் இருக்க வேண்டும் என்று கூறவே... செய்யவழியில்லை... வைத்திய சாலையில் விட்டுவிட்டு வரும் போது... பஸ்லியா பிள்ளைகளுக்கு எதுவும் சொல்ல வேண்டாம்... கூடினால் பார்ப்போம்... பிளீஸ்... என்று கூறவே... ரஜாவுத்தீன்... சரியென கூறி வீடு வருகின்றான்.

வீட்டிற்கு வந்த ரஜா... மனைவியில்லாத அருமை இப்போது அவனுக்கு விளங்கியது. அடுப்படியை துப்பரவு செய்யவே வேண்டாம் என்றாகிவிட்டது. தினமும் விடிய மூன்று, நாலு மணிக்கு எழும்பி... கடைக்கு சாப்பாடு செய்து வீட்டுவேலை சமையல் வேலை.... என்று பம்பரமாக சுற்றி வரும் மனைவியின் பிரிவு அவனால் தாங்க முடியவில்லை. தன் மனைவியின் உடல் சுகத்திற்காக அன்று பள்ளிவாசலில் இரண்டு ரக்காக் தொழுது... (சுன்னத் தொழுகை) அல்லாஹ்விடம் துஆ செய்கின்றான்.

ஆண்டவனே... என் மனைவி குழந்தைகளை நீதான் காப் பாற்ற வேண்டும்... என்னிடம் வருமானம் இல்லை... ஆனா... கல்வியறிவுள்ள குழந்தைகளை வளர்க்க நாங்க பட்ட கஷ்டத்தை... பாரு அல்லாஹ்.... கல்வி நிறைவு பெறும் வரையிலாவது எங்கட

சகல கஷ்டங்களில் இருந்தும் காப்பாத்து... யா அல்லாஹ்... நாங்க யாரிடம் கையேந்துவோம். உன்னை விட எங்களுக்கு யாருமே... இல்லை... என்று புலம்பிக் கொண்டிருந்தான்...

சிறிது நேரத்தில் கடையில் சாப்பாட்டை எடுத்துக் கொண்டு வைத்தியசாலைக்கு சென்றபோது... மனைவி சிரித்துக்கொண்டு கட்டிலில் குந்திக் கொண்டிருக்க... கணவன் அருகே செல்கின் றான்... என்னவாம்... என்று கேட்க... ஒன்றுமில்லை... கொஞ்சம் ஓய்வு வேண்டுமாம்... என்று கூற... நேர்ஸ் (தாதி) அருகே வந்து ஊசி போடும்போது ரஜா... ஏனோ முகத்தை மறுபக்கம் திருப்பிக் கொண்டான்... அவனால் பஸ்லியாவை இந்த கோலத்தில் பார்க்கவே பிடிக்கவில்லை... கண்கள் குளமாக நேர்ஸ்... “என்ன பிரச்சினை?” என வினவ... நேர்ஸ் “அது... பிரசர்... சீனி... எல்லாம் கூடிவிட்டது... அவங்க தன்ர உடம்ப கவனிக்கவில்லை. அவ்வளவு தான்...” நீங்க.... மனைவி மேல் பாசம் என்றாள் மனைவி தன்னை பற்றி கவலைப்படாம இருந்திருக்காங்க...

குடும்பத் தலைவியாகியவுடன் அனேக பெண்கள் தங்களைப் பற்றி யோசிப்பது குறைவு... கணவன் பிள்ளைகள் வீடு... என்று பம்பரமாக சுழல்வார்கள்... ஆனால் வீட்டிலுள்ளவர்களும்கூட தங்கள் கடமைகள் மனைவியால் நிறைவு பெறவேண்டும்... மனைவி என்பவள் தங்களை காக்க... தங்கள் கடமைகளை முடிக்க மட்டுமே என்று நினைக்கின்றார்களே தவிர...

மனைவியை தாங்கள் பார்க்கவேண்டும். அவளுடைய நோய் நொடிகளை யோசிப்பது குறைவு.... வீட்டில் கடைசியாக தூங்கு வது மனைவி... ஆனால் நேரத்தோடு முழிப்பதும் மனைவி யாகத்தான்

இருக்கும்... துாக்கத்தில் கூட... விடிந்தால் கணவனுக்கு அது வேண்டும் பிள்ளைகளுக்கு இது வேண்டும்... அந்த பிரச்சினை இந்த பிரச்சினை..... என்று தலை வெடித்துவிடும்... அனேக பெண் கள் இதனால்தான் நோய்வாய்ப்படுகின்றார்களோ தெரியாது... ஆனால் பொதுவாக சில குடும்பங்களில் மனைவியாகி விட்டால் அவளைப் பற்றி அவள் உணர்வுகளை எண்ணங்களை ஆண்கள் புரிவது குறைவு...

சில குடும்பங்களில் மாறி நடந்தாலும் அனேகமாக பெண் கள் தங்கள் மனவலிகளை வேதனைகளை... நோய்களை, கஷ்டங்களை மறைத்து வாழப் பழகிக்கொள்கின்றார்கள்... பிறர் கவலைப்படக்கூடாது... என்பதற்காகவோ... அல்லது அவர்கள் இயல்பாகவே... அப்படி நினைத்துவிடுகின்றார்கள். ஆனால் இவற்றை புரிந்து வாழும் சில குடும்பங்களில் இரட்டிப்புச் சந்தோ சங்கள் காணப்படுவது இயல்பாகும்.

ஆனால் பஸ்லியா ரஜாவுத்தீன் இருவரின் வாழ்க்கையில் மிக நெருக்கமான அன்னியோன்யம் காணப்பட்டாலும், ரஜாவிடம் மனைவி எதையும் மறைப்பது கிடையாது. ஆனால்... சில கஷ்டங் களை தனது நோய்களை எந்த நேரமும் சொல்வது இல்லை... இதன் விளைவு... இன்று... பிரசர், சீனி, கொலஸ்ரோல் எல்லாம் மிகக் கூடிவிட்டது. இன்னும் கொஞ்சம் என்றால் பிரசர் கூடி ஆள் முடிந்திருக்கும்... நல்ல காலம் கீழே விழுந்தவள் தலை அடிபட வில்லை. கொஞ்சம் தவறிவிட்டது என்று வந்திருந்த நேர்ஸ் கூறிக் கொண்டார்.

என்ன கீழே விழுந்தீங்களா?... என்று ரஜா... கேட்க... தலையை மெதுவாக ஆட்டிக் கொண்டாள் பஸ்லியா.

பஸ்லியா தொடர்கின்றாள். “நீங்க போன பிறகு திரும்பினேன். தலைசுற்றியது… என்ன நடந்தது என்றே தெரியாது… கொஞ்ச நேரத்தில் கீழே விழுந்து கிடந்தேன்”

ரஜா தலையில் கைவைத்தான்…. தனியா பத்து நிமிடம் மயங்கி கிடந்திருக்கிறாங்க… அல்லாஹ்… என்று ஏங்கி விட்டான்.

நேர்ஸ்… இப்ப எப்படி… என்று நேர்சை விடாமல் கேள்வி கேட்ட போது இப்ப பரவாயில்லை… கவலைப்பட ஒன்றுமில்லை… மருந்தை ஒழுங்கா குடிக்கணும். கொஞ்ச நாளைக்கு நல்லா ஓய்வு வேண்டும்… முக்கியம் ஓய்வு இல்லை… என்று கூறி… நேர்ஸ் செல்கின்றார்…

ரஜா… மனைவி பக்கத்தில் வந்தவன்… என்ன பஸ்லி… என்று அன்போடு கேட்டபோது… எனக்கு ஒன்றுமில்லை… பிள்ளைகள் போன் எடுத்தார்களா… என்ன சொன்னீங்க… என்று கேட்க… உம்மா எங்க என்று கேட்டார்கள். உம்மாவுக்கு தலைவலி தூங்குகின் றா… என்று கூறினேன்… மகளுக்கு… உம்மா தூங்கமாட்டாங்களே வாப்பா… ஏதும் சுகமில்லையா… என்று எப்படி எப்படியெல்லாம் கேள்வி கேட்கின்றாள் தெரியுமா… மகனுக்கு விளங்கிவிட்டது. உங்களுக்கு ஏதோ சுகமில்லை என்று… உம்மா கவனம்… கவனம்… என்று ஆயிரம் தடவை சொல்லிவிட்டான்…

இவ்வாறு இரண்டு நாட்கள் ஏதோ ஒரு வழியாக சென்றுவிட்டது. பஸ்லியா வைத்தியசாலையில் இருந்து வீடு வந்துவிட்டாள். மீண்டும் ரஜாவுத்தீன் கடைக்குச் செல்ல புறப்படுகின்றான்…

பஸ்லியா இனி நீங்க கஷ்டப்பட வேண்டாம். இன்னும் ஒரே ஒரு வருடம் தானே. ஏதோ... கொஞ்சம் கஷ்டம்தான்... ஆனா நீங்க எதுவும் செய்ய வேண்டாம்... எனக்கு நல்ல மனைவியாகவும் பிள்ளைகளுக்கு தாயாகவும் இருக்கிற உங்களை இனி அப்படி ஒரு கோலத்தில் பார்க்க முடியாது... குடும்பம் குடும்பம் என்று போதும் நீங்கள் படும் கஷ்டம்... என மனைவியிடம் கூறிய போது அப்ப... காசுக்கு என்ன செய்வீங்க... என்று கேட்க.


காசு முதலாளியிடம் கதைத்துள்ளேன்... "பத்தாயிரம் ரூபா... மாதம் கூட தாருங்கள்.... பின்பு தருகின்றேன் என்று கூறியுள்ளேன்.... அவர் சரி என்று கூறிவிட்டார்.... இந்த பணத்தையும் சம்பள காசை யும் வைத்து சமாளிப்போம்... நாம... இன்னும் சிக்கனமாக நடந்தால் சரி..." என்று கணவன் கூறி விடைபெறுகின்றான். தங்களின் வாய்களைக் கட்டி, ஆசைகளைக் கட்டி, உணர்வுகளைக் கட்டி எத்தனையோ பெற்றோர் கஷ்டப்படுகின்றனர்... பஸ்லியா வீட்டிலுள்ள சகல செலவுகளையும் குறைத்து... குழந்தைகளுக்கு மட்டும் செலவுகளை செய்யலானாள்...

சிலர் பஸ்லியா ரஜாவுத்தீனை பேசாதவர்கள் இல்லை... விரலுக் குத் தக்கதுதான் வீக்கம்... இப்படியெல்லாம் படிக்க வைக்கவா வேண்டும்... தேவையா உனக்கு... மகனை கடையில புடித்து விட்டால் கை நிறைய காசு வரும் என்ற யோசனைகளும் குத்தல் பேச்சுகளுக்கும் குறைவு இல்லை. ஏதும் உதவி கேட்டு சில உறவினர்களை நாடினால் கூட... எந்த உதவிகளும் அனேக மாக கிடைப்பது இல்லை.... மனமுடைந்த உள்ளங்கள் சில நேரம் இரவு நேரங்களில் கவலைப்பட்ட காலங்களும் உண்டு...

அவமானப்பட்ட காலங்கள் அழுத காலங்கள்..... சில கல்யாண வீடுகள் சென்றால் கூட நல்ல உடை இல்லாது..... வெட்கப்பட்ட காலங்கள்..... கூட உண்டு. புட்டு இடியப்பம் அவித்து விற்ற நேரம் சில குடும்பங்கள் பஸ்லியாவை செய்த நக்கல் அதைக் கேட்டு பஸ்லியா துடித்துவிடுவாள்.

அனைத்தையும் தாண்டி சோகங்களை தங்களுக்காக்கி குழந்தைகளுக்கு எந்தக் கவலையும் தெரியாது படிப்பை முடிக்க வைத்து ஒரு தகுதியான குழந்தைகளாக சமூகத்தில் மிளிரச் செய்திருக்கின்றனர். இந்தத் தம்பதிகள் மனதில் இப்போது ஏதோ நிம்மதி.

★★★



இரண்டு பேரும் படிப்பை முடித்து வீடு வந்தனர். இன்னும் சில மாதங்களில் பட்டமளிப்பு விழா இருவருக்கும்... மகள் மௌலவியா (BA) மகன் எஞ்சினியர் இரண்டு குழந்தைகளும் வளர்ந்து விட்டார்கள்... பஸ்லியா, ரஜா பிள்ளைகளின் வளர்ச்சிகளைக் கண்டு பூரித்துப்போனார்கள்.... தாங்கள் பட்ட கஷ்டம் பிள்ளை களை வளர்த்துவிட்டது...

அன்று மகனின் பட்டமளிப்பு விழாவுக்குச் சென்ற நேரம்.... மேடையில் மகன் கறுப்பு உடையோடு முதல் நிலை மாணவனாக தெரிவுசெய்யப்பட்டு பாராட்டைப் பெறும்போது... பஸ்லியா ரஜாவுத்தீன் பூரித்துப் போனார்கள். கண்களிலிருந்து ஆனந்த மழை கொட்டிக் கொண்டிருந்தன. தங்கை கைதட்டி சிரித்துக் கொண்டாள்... பட்டம் பெற்று வரும் மகனைக் கண்ட பல உள்ளங்கள் அவளைத் திரும்பிப் பார்த்தன. உண்மைதான். இனி அவர்கள் குடும்பத்தை... உலகமே திரும்பி பார்க்கப்போகின்றது. பஸ்லியாவின் இலட்சியக் கனவுகள் நினைவுகளாகின.

சில மாதங்களில் மகளின் பட்டம் கிடைத்து பக்கத்து பாடசாலை ஒன்றிற்கு மகள் வேலைக்காக இணைந்து கொண்டாள்... மகளின் அழகும் அடக்கம்... பொறுமைகண்டு பலர்... பெண் கேட்டு வரலானார்கள்... ஆனால் இனி முடிவு எடுப்பது... மகன் நிஃமத் என்பதால்... அவர் முடிவுக்காக காத்திருந்தனர்.

பஸ்லியா ரஜாவுத்தீனின் சகல பொறுப்புகளையும் மகன் நிஃமத் பொறுப்பு எடுக்கின்றான்... பல விடயங்கள் மகனிற்குத் தெரியாது என்று பெற்றோர் நினைத்தாலும் பெற்றோரின் சகல விடயங்களையும் மகன் நுணுக்கமாக அறிந்து வைத்திருந்

தான்... இனி எந்தக் கஷ்டமும் தேவையில்லை... என்றான்... பொறுப்பான மகனான நிஃமத்...

பெற்றோரின் நல்ல சிந்தனை எண்ணங்களை இறைவன் என்றுமே ஏற்றிட மறுப்பதில்லை...

இப்போது இவர்கள் வீடு மாறிக்கொண்டிருந்தனர். சிறிய குடிசை வீடு, கல் வீடாகியது... காதில் தோடுகூட இல்லாமல் இருந்த தாய்க்கு... நகை விதவிதமாக வந்து சேர்ந்தன. தங்கைக்கு.... உரிய கணவனைத் தெரிவு செய்ய நிஃமத் கவனமாக இருந் தான்..... வாப்பாவின் ஓட்டை சைக்கிள்.... மோட்டார் சைக்கிள் ஆகியது.... மகள் தினமும் வாப்பாவோடு பயணம் செய்து கொண்டாள்...

வேலைக்காரியாக இருந்த உம்மா இப்போது சில வேலைக் காரர்களுக்கு தலைவியாகிவிட்டாள். அந்தக் குடும்பம்... இப் போது... மாற்றத்தினை தேடி ஓடியது...

மௌலவியாவின் திருமணம் ஒரு வைத்தியருடன் நடை பெற்றது... நிஃமத் ஒரு ஆங்கிலப் பாட ஆசிரியையை மணந் தான்... மாற்றுத் திருமணம்தான்... ஆனால் நல்ல குடும்பம். அமைதியான வாழ்க்கைப் பயணத்தை குழந்தைகள் ஆரம் பித்தன....

தங்கைக்கு வீடு தனியாக அமைத்து.... அவர்களை அனுப்பி வைத்தான் நிஃமத்... தனது வீட்டில் உம்மா வாப்பா இருவரும் இருக்க வேண்டும் என்பது அவனது ஆசை... ஆனால் பஸ்லியா வுக்கு ஏனோ... விருப்பமில்லை.

மகனிடம் தனக்கும் வாப்பாவுக்கும் பழைய வீடே போதும்... என்று அன்புக் கட்டளை இட்டார். நிஃமத் விடவில்லை... இருந் தாலும் தாயின் கட்டளை அல்லவா...

பழைய வீடு மீண்டும் திருத்தியமைக்கப்பட்டு... புதிய வீட்டில் பழைய தம்பதிகளின் வாழ்க்கை ஆரம்பமாகியது. இருவருக்கும் தலை நரைத்துவிட்டது... பற்கள் கொட்டிவிட்டன... உடல் தளர்ந்து விட்டது... ஏதோ கூழோ... கஞ்சியோ... நம்மட காலம் ஓடிவிடும் என்று ரஜா கூறிக் கொண்டான். ரஜா பஸ்லியாவின் அன்பு நிறைந்த வாழ்க்கையை கண்ட பிள்ளைகளும் அப்படியே வாழ ஆரம்பித்தன....

பெற்றோர் சண்டை பிடித்துக் காணாத பிள்ளைகள் தாங்களும் தங்கள் பெற்றோரைப்போல் அன்பும் பண்பும் நிறைந்து வாழ வேண்டும் என்பதில் கவனமாக இருந்தனர்.

ரஜா பஸ்லியா மருமகனையும், மருமகளையும் தங்கள் பிள்ளைகளைவிட மேலாக கவனித்தனர்... அவர்களாலும் இவர் களுக்கும் இவர்களால் அவர்களுக்கும் எவ்வித சண்டையும் வந்தது கிடையாது...

இப்போது உறவுகள் வீடு வந்து செல்ல ஆரம்பித்தனர்... பேசிய வர்கள், கடன் கேட்டால் முகம் சுழித்தவர்கள் எல்லாம் சொந்தம் கொண்டாடி நின்றனர்.

இப்படிப் படிக்கவைக்கவேண்டுமா? என்று கேட்டவர்கள் கூட படிக்க வைக்கத்தானே வேண்டும் என்றும் அதனால்தான் நல்ல குழந்தைகளை உருவாக்க முடியும் என்றும் உணர்ந்தனர்...

தாங்கள் காசு இருந்தும் பணம் இருந்தும் படிக்க வைக்காததால்... பிள்ளைகள் மதுவுக்கு, மங்கைக்கு, களவு, பொய்களுக்கு அடிமை யாகி பண்பு இல்லாதவர்களாக காணப்படுகின்றார்கள்... ஆனால் ஏழை வீட்டில் பிறந்தாலும் இந்தக் குழந்தைகள் போல் தாங்கள் வளர்க்கவில்லையே... றோட்டில் நின்று ஊர்க்கதை கதைத்து வீணாக்கி விட்டோமே... என்று பலர் யோசிக்க வழியேற்பட்டது.

ஒரு தாயின் துஆ நல்ல குழந்தைகளை உருவாக்கும் என்பது இவர்கள் வாழ்வில் கண்ட உண்மையாகியது.

★★★

நிஃமத் இப்போது பொறியியலாளராக இருந்தாலும் அவனது திறமை ஊர் முழுவதும் பரவியது...

அன்று அவன் காரியாலயத்தில் இருந்து கொண்டிருக்கின் றான். அவசரமாக அழைப்பு மணி அடித்தது...

ஹலோ... என்று கூறியபோது நிதி நிறுவனத்தின் தலைவ ரின் தொலைபேசி பேசியது...... பணிப்பாளர் உடனடியாக நிஃமத் அவர்களை சந்திக்கும்படி கட்டளை வந்தபோது எதுவும் விளங்கவில்லை...

சிறிது நேரம் சிந்தித்தவன் வாகனத்தில் புறப்படுகின்றான்... அங்கே பல நிதி நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தை நடைபெற்ற பின்பு நிஃமத் அழைக்கப்படுகின்றார். உள்ளே நிதி நிறுவனத்தின் தலைவரைச் சந்தித்தபோது அது வேறுயாருமில்லை. நிஃமத்தின் நண்பன் பைசுர் ரஹ்மான்... பழைய நண்பர்கள் இருவரும் ஸலாம் சொல்லி அணைத்துக்கொண்டனர்.

நீண்ட நாள் பிரிவின் பின்பு இருவரின் சந்திப்பு மிக மகிழ்ச்சிகர மானதொரு நிலையை உருவாக்கியது... நண்பர்கள் தங்களின் பல்கலைக்கழக காலங்கள்... திருமண பந்தம்... தாய் தந்தை சுகங்களை விசாரித்துக் கொள்கின்றனர்....

பின்பு நிஃமத் அழைக்கப்பட்டது எதற்காக என்பதை பைசுர் ரஹ்மான் கூறலானார்...

"நிஃமத்... உங்களை அழைத்தது... என்னத்திற்கு என்பது தெரியுமா...?" என்று கேட்டபோது...

"சொன்னால்தானே தெரியும்" நிஃமத் தலை ஆட்டுகின்றான்.

நிஃமத் நீங்க சொந்த இடம் யாழ்ப்பாணம் சோனக தெரு இல்லையா? என்று கேட்டபோது... ஆமாம்...என்று கூறிய நிஃ மத்திடம்... தொடர்கின்றார் பைசுர் ரஹ்மான்...

நிஃமத்... உங்கட மக்கள் இப்போ எங்கெல்லாம் இருக்கின் றார்கள் தெரியுமா... என்று கேட்ட போது எதுவுமே தெரியவில்லை. தன்னட உம்மா. வாப்பா. தங்கச்சி. மனைவி.... என்று மட்டும் வாழும் நிஃமத்திற்கு எதுவுமே... தெரியாது....

ஆனால் யாழ்ப்பாணத்திலிருந்து அகதியா வந்து முகாம் களில் வாழ்ந்த வாழ்க்கையில் கொஞ்சம் ஞாபகம் இருக்கின்றது...

அதைவிட எதுவுமே விளங்கவில்லை... யுத்தத்தின் பின் அகதி வாழ்வில் இரண்டாவது தலைமுறைதான் நிஃமத். அவனுக்கே எதுவும் புரியவில்லை என்றால் இனிவரும் தலைமுறைகளின் நிலை என்ன என்பது எதுவும் விளங்கவில்லை.

பைசுர் ரஹ்மான்... தொடர்கின்றார்... நிஃமத்... 1990ம் ஆண்டு வரை வடமாகாணத்திலுள்ள முஸ்லிம்களின் நிலை தேன்கூடு போன்றது... அதன்பின் கல்லெறிபட்டு கலைக்கப்பட்ட தேனீக் கூட்டம் திசைமாறி பரந்து பல இடங்களில் கூடு கட்டி வாழ் கின்றன.... குறிப்பாக யாழ்ப்பாண முஸ்லிம்களின் நிலைகள் இதுதான் என இலங்கையின் வரைபடத்தை காட்டியபோது அதிர்ச்சியடைகின்றான் நிஃமத் ஒரு நிமிடம் கதிரையில் இருந்து விழித்துக் கொள்கின்றான். வடமாகாணத்தில் 5 மாவட்டங்களான யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சியிலுள்ள மக்கள் 1990ஆம் ஆண்டு ஒக்டோபர் 30ஆம் திகதி தமது சொந்த இடங்ளில் இருந்து வெளியேற்றப்பட்டார்கள்....

மக்கள் அனைவரும் புத்தளம் முதலில் தஞ்சமடைந்து பின்பு சிலாபம், கொழும்பு, நீர்கொழும்பு, மட்டக்களப்பு,அனுராதபுரம், போன்ற பல பிரதேசங்களில் குடியேற்றங்களை அமைத்தனர். ஆனால் யாழ்ப்பாணத்தைத் தவிர ஏனைய மாவட்டங்களில் உள்ள பல தலைவர்கள் ஒன்றிணைந்து அவர்களுக்கு 9மீள் குடியேற்றக்கிராமங்கள் அமைக்கப்பட்டன.... ஆனால் யாழ்ப் பாண மக்களுக்கு பல உதவிகள் வழுங்கப்பட்டாலும்... இன்னும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கின்றனர்.... என.......

தொடர்கின்றார் பைசுர் ரஹ்மான். புத்தளத்தில் மட்டும் குறைந்தது 20 முகாம்கள் யாழ்ப்பாண முகாம் 2005-2007ம் ஆண்டு தகவல்களின் படி...

முகாம்கள் குடும்பங்களின் எண்ணிக்கை

| | |
|---|---|
| சோல்டன் I | 125 |
| சோல்டன் II | 43 |
| புத்தளம் டவுன் | 672 |
| சதாமியா புறம் | 345 |
| மர்ஹூம் அஸ்ரம் வீதியில் | 97 |
| தில்லையடி E | 23 |
| தில்லையடி கொழும்பு வீதி | 103 |
| ஆனைப்பிள்ளையூற்று | 112 |
| உமராபாத் A | 206 |
| அரபா நகர் | 151 |
| ரத்மல்யாய | 524 |
| Y.M.M.A. நகர் | 104 |
| ஹிஜ்ரத் புறம் | 165 |
| சாபி நகர் | 46 |
| பரீதா பாத் | 72 / 48 |
| செம்பபடு | 52 / 35 |
| மதீனா புறம் | 46 / 31 |
| மலீஹா புறம் | 122 / 82 |
| ஜின்னாவத்தை | 59 |
| சிறிமா புறம் | 85 |



-தகவல் -

முகாம் உத்தியோகத்தர் E.M. வாஜித்

மேற்படி உள்ள முகாம்களில் யாழ்ப்பாண முஸ்லிம் மக்களுக் காக உருவாக்கப்பட்டவையாகும். பல நிதி நிறுவனங்கள், அரசு, மாபெரும் தலைவர்கள், அமைப்புகள் மக்களுக்கு உதவி வழங்கியதாக கூறப்படுகின்றது.... ஆனால் உளுக்காப்பள்ளம், கரம்பை, ஹிதாயத் நகர், எருக்கலம்பிட்டி, அல்காசிம், 90 ஏக்கர் தம்பன்னி... என்று 9 மீள்குடியேற்றக் கிராமம் உருவாக்கப் பட்டுள்ளன. புத்தளத்தில் பல வீடுகள், மலசலகூடம், கிணறு.... உயர்தர பாடசாலை, தொழில் பயிற்சி நிலையம், கூட்டுறவுச் சங்கம், மத்ரஸா, முன்பள்ளி, சிறுவர் பூங்கா... கடனுதவி பல அமைப்பு என்று ஒரு கிராமத்திற்கு வழங்கப்பட்ட நிதித் திட்டங்களும் செயற் பாடுகளும் (மாஸா அல்லாஹ) கூறமுடியாது. இப்படி 9 மீள்குடி யேற்றக் கிராமங்களின் எதிர்காலம் பிரகாசிக்கின்றது.... அதே போல்... சொந்தக்காணிகளில் குடியேறும்... மக்களுக்கு... மன்னார், முல்லைத்தீவு..., வவுனியா... பிரதேசங்களில் இன்னும் பல உதவிக் கரங்கள் நீட்டப்படுகின்றன.

ஆனால் யாழ்ப்பாண முஸ்லிம் மக்களுக்கு ஒரு மீள்குடியேற்றக் கிராமம் அமைக்க முடியவில்லை. வீடு மலசலகூடம் கிணறு இல்லாமல் மழை வெள்ளம், தொழில் வசதி இல்லை விழிப்புணர்வு இல்லாமல் கஷ்டப்படும் ஒரேயொரு மக்கள் யாழ்ப்பாண முஸ்லிம் களாகும்... நிஃமத் மக்களுக்குப் பல உதவிகள் கிடைத்துள்ளது. ஆனால்....

பைசுர் ரஹ்மான் தொடர்கின்றார்.... மக்களுக்கு நிதி பூரணமாக பயன்படுத்தப்பட்டிருந்தால்... ஏன் வீடு இல்லாத பிரச்சினை.. ஏன் பாடசாலை பிரச்சினை.. மலசலகூடம், நீர் வெள்ளம், தண்ணீர்

எல்லாம் எப்படி வந்தது… என்று பைசுர் ரஹ்மான் கொதித்துக் கொள்கின்றார்.

கடந்த காலங்கள் கடந்து விட்டது. புதிய யுகத்தில் இளஞர் சமூகம் விழித்துக் கொண்டது…

எம் மக்களைக் காப்பது எங்கள் ஒவ்வொருவரின் கடமை யாகும்… என்று நிஃமத் கூறும் போது.. பைசுர் ரஹ்மான் தலை யாட்டிக் கொள்கின்றார்… மீண்டும் தொடர்கின்றார்…

நிஃமத் கடந்த காலங்களில் யாழ்ப்பாணத்திலிருந்து மக்கள் விட்டுச்சென்ற பல கோடி ரூபா பெறுமதியான உடைமைகள் எதுவுமே… மக்களுக்கு கிடைக்கவில்லை. அனேக வீடுகள் கூட முற்றாக அழிக்கப்பட்டுள்ளது. பல இழப்புகளைக் கண்டு கொண்ட எம் சமூகத்தை நாம் உடனடியாக சீர்படுத்த வேண்டும் நிஃமத்…Please…. நாம முயற்சி எடுப்போம் என்று பைசுர் ரஹ்மான் மனமுருகக் கூறும் போது நண்பனின் ஏக்கம் புரிந்து நிஃமத் தலையாட்டு கின்றார்.

யாழ் மண்ணில் பிறந்த இவர்கள் புத்தளத்தில் இத்தனை முகாமில் சிதறி வாழ்கின்றனர் நிஃமத்…. அது மட்டுமல்ல…

மாவட்ட ரீதியாக பார்த்தால் யாழ்ப்பாண மக்கள்…

புத்தளம்

சிலாபம்

நீர்கொழும்பு

கொழும்பு

மட்டக்களப்பு

திருகோணமலை

அனுராதபுரம்

வவுனியா

கம்பஹா

கழுத்துறை

கண்டி

காலி

என்று பல திக்குகளில் வாழ்கின்றனர்... என்ன விஷேடம் என்றால்... கடந்த இருபத்தி ஐந்து வருடத்தில்...

- எருக்கலம்பிட்டி மக்களுக்காக எருக்களம்பட்டி மீள்குடியேற்ற கிராமம் தலைவர் மர்ஹூம் மஸூர் ஹாஜியர் (அமைச்சர்).

- மன்னார் மக்களுக்காக தலைவர் றிசாட் பதியுத்தீன் (அமைச்சர்) (ஹாஸிம் குடியேற்ற கிராம, உளுக்காப்பள்ளம், கரம்பை, 90 ஏக்கர்....

- சிலாபத்துறைக்காக - எகியா பாய் தொழிலதிபர்...

- முல்லைத்தீவுக்காக கூட தற்போது ஓர் குனைஸ் பாருக் (அமைச்சர்)

படித்தவர்கள் அதிகம் வாழும் எம் பிரதேசத்தில்... ஏன் ஒரு மீள்குடியேற்ற கிராமம்... புத்தளத்திலும் அமையவில்லை... இப்போ... யாழ்ப்பாணத்திலும் இல்லை... என்று பைசுர் ரஹ்மான் கேட்டபோது.... நிஃமத்திற்கு விடை எதுவுமே தெரியவில்லை. சிறிது நேரத்தில் இணையத் தளத்தினை தட்டி விடுகின்றார் பைசுர் ரஹ்மான்.

அங்கே யாழ்ப்பாண முஸ்லிம்களைப் பற்றி மிகவும் மோசமாக எழுதப்படும் விடயங்களை பைசுர் ரஹ்மான் காட்டியபோது... நிஃமத்தின் உள்ளம் கொதித்து விட்டது...

யாழ்ப்பாணம் குடியேற்றத்தினை விரும்பும் மக்களுக்கு யாழ்ப் பாணத்தில் வாழ முடியவில்லை என்ற சோதனை... ஏற்கனவே இருக்கும் வீடுகள் குறைந்த விலையில் விற்பனையாகிவிட்டது... பல வீடுகள் திருத்தப்படாத நிலை... இருக்க நினைப்பவர்களுக்கு வீட்டுத் திட்டம் இல்லை... வாடகை கொடுக்கமுடியவில்லை...

இது ஒரு பிரச்சினை.....என்பதால் மக்கள் திண்டாடி வருகின் றனர்.

நிஃமத் எந்த இடத்திலும் ஒரு தலைமைத்துவம் கட்டுபாடு... இருக்கும் இடத்தில்தான் அல்லாஹ் பரஹத் செய்வான்.

நபி (ஸல்) அவர்களின் வாக்கு கூட... அதுதான்... சமூகக் கட்டுப் பாட்டிற்கு ஒரு தலைமைத்துவம் எந்தளவு முக்கியமென்பதை ஹிஜ்ரத் சம்பவங்கள் யுத்த நடவடிக்கைகளில் பல இடங்களில் சுட்டிக்காட்டியுள்ளதை நாம் நினைக்க வேண்டும் நிஃமத்.

நிச்சயம் கலாசாரச் சீரழிவுகளுக்கும். சட்ட விரோத செயல் கள் அதிகரிக்கவும் அமைதியில்லாத நிலை மாறுவதற்கு தலை மைத்துவத்தில் உறுதி மிகக் கட்டாயமாகும்... நிஃமத் என்று கூறிய பைசுர் ரஹ்மான் அப்படி இருந்தால் இன்று யாழ்ப்பாண மக்களுக்கு ஓர் விடிவு ஏற்பட்டிருக்கும்... இளைஞர். யுவதிகள். மாணவர்கள் இந்தளவு கஷ்டப்படமாட்டார்கள் நிஃமத்...

வெள்ளத்திலும்... வறுமையிலும் வீடுகள் இல்லாமல் மக்கள் படும்பாடுகளை புகைப்படம் மூலமும். வீடியோ மூலமும் பைசுர்

ரஹ்மான் எடுத்துக்காட்டியபோது நிஃமத் துடித்தேவிட்டார்... யா அல்லாஹ்.... என்று ஏங்கிய நிஃமத்... பைசுர் ரஹ்மானை ஒரு கணம் பார்க்கின்றார்...

பைசுர் ரஹ்மான் தொடர்கின்றார்... கொள்ளையடித்தவர்களையும், நிதிமோசடி செய்தவர்களையும், அநீதி செய்பவர்களையும், குழப்பங்களை ஏற்படுத்துபவர்களையும், அல்லாஹ் பார்த்துக் கொள்ளட்டும். நிஃமத் தப்புச் செய்பவர்களுக்கு தண்டனை இறைவனிடம். ஆனால் படித்த சமூகம்.... குறிப்பிட்ட சிலர்.... ஏழைகளுக்கு நடக்கும் அநீதிகளுக்கு தட்டிக்கேட்க வேண்டாம்.... ஆனால் அவர்களுக்கு உதவ முன்வர வேண்டும்...

உண்மையில் யாழ்ப்பாணத்தில் சிலர் முன்னிலை உதவிகளை செய்கின்றார்கள்... அவர்களுக்கு அல்லாஹ் கூலி கொடுக்க வேண்டும். ஆனால் போதாது... நிஃமத்...

உதவி செய்யக்கூடியவர்கள் ஒன்றிணையவேண்டும். ஒற்றுமையாக இணைந்து செயற்படவேண்டும். கைகளை தனித்தனியே தட்டுவதை விட சேர்ந்து தட்டவேண்டும்.

யாழ்ப்பாணத்தில் படித்தவர்களும் பண்புள்ளவர்களும் பணக்காரர்களும் அதிகம். ஆனால்... ஏன் வளர்ச்சிப் பணி தாமதம் என விளங்கவில்லை.

அதே நேரம் மக்களுக்காக நிதிகளை பூரணமாக செலவு செய்யப்படவில்லை என்பது பலருக்குத் தெரியும்... ஆனால் மௌனமாக இருந்து விட்டார்கள். இதனால் உண்மையில் பாதிக்கப்பட்டவர்கள் ஏழை அப்பாவிக் குடும்பங்களாகும்...

எவ்வளவோ காலத்தின் பின் முற்றாக அழிக்கப்பட்ட பல பிரதே சங்கள் கூட உதாரணமாக மிக வேகமாக மீள்குடியேற்றத்தின் உச்சியை அடைந்துவிட்டது. ஏன் நிஃமத்... உங்கட பிரதேசம்... சீரழிந்துள்ளது?... என்று பல ஆதாரங்களையும் மக்களின் நிலை களை காட்டிய நேரம் நிஃமத்... பைசுர் ரஹ்மான் நோக்குகின்றார்.

உணர்வு ரீதியாக கூறிக் கொண்டிருந்த பைசுருக்கு தாகம் தாங்க முடியவில்லை. மேசை மீது இருந்த தண்ணீரைக் குடித்து தொடர்கின்றார்...

★★★

நிஃமத் எங்கட காரியாலயம் யாழ்ப்பாணத்தில் அவசரமாக ஆரம்பிக்கவுள்ளோம்... அதற்கு இரண்டு வருடத்திற்கு நீங்க தான் போகப்போகின்றீர்கள்... யாழ்ப்பாணத்தில் அந்த பிரதே சத்தில் ஒரு மாற்றம் வர வேண்டும் என்றால் நீங்கள் துணிந்து செல்லுங்கள்...

தற்காலிகமாக உங்கள் வேலைக்கு No pay (இரண்டு வருடத் திற்கு கொடுங்கள்). பதிலாக எங்கள் கம்பனி மாதம் ஒரு லட்சம் சம்பளம் உங்களுக்கு தர தயாராகவுள்ளது... அதிலும் சமூகத்தை மாற்ற ஒருவன் பிறக்கத்தானே வேண்டும். அது துணிவுள்ள ஒருவனால் மட்டுமே முடியும்...

அல்லாஹ்... உங்களை தேர்ந்தெடுத்திருக்கின்றான். முயற்சி செய்து பாருங்கள். துணைக்கு நாங்கள் பக்கபலமாக இருப்போம் என்று கூறி தங்கள் நிதி நிறுவனத்தால் மக்களுக்கு உதவிக்கான சகல நிதிகளையும் தரத்தயாராகவுள்ளதாக கூறிய

போது நிஃமத் சிறிது நேரம் யோசிக்கின்றான். நாளை வந்து முடிவு சொல்கின்றேன் என்று நண்பனிடம் விடைபெறுகின்றான்…

பைசூர் ரஹ்மான் கடந்த மாதம் ஜமாத் (யாழ்ப்பாணம்) வந்த போது இங்கு மக்களின் நிலைகளைக் கண்டு துடித்துள்ளார்… இந்த மக்களில் ஒரு மாற்றம் காண வேண்டும் என்று கொழும்பில் பிறந்தவர் நினைக்கும் போது… யாழ் மண்ணின் வேர்களான எங்களுக்கு எந்த உணர்வும் இல்லையே என்று யோசித்துக் கொண்டே நிஃமத் வீடு வருகின்றான்… நேரம் போய்விட்டது. மனைவி… நிஃமத்திற்காக காத்திருக்கின்றார்…. கணவன் ஏதோ யோசனையில் வருவதனைக் கண்ட மனைவி அமைதியாக சாப்பாட்டைக் கொடுத்து தனது அறைக்குள் சென்று விடுகின்றாள்.

ஏதோ யோசனையில் என்ன சாப்பிட்டோம் என்று கூடத் தெரி யாது…. தனது ஓய்வுக்கான அறையில் போய் விடுகின்றான்…

வேலை அதிகம்… குழப்பம்… என்றால் அனேகமாக அவன் யாரிடமும் கதைப்பது இல்லை. தனக்கான அறையில் சென்று விடுவான்… அந்த அறைக்குள் யாருமே போக முடியாது… அவனை யாரும் கரைச்சல் பண்ணவுங் கூடாது…

மனைவி அமைதியாக தனது அறையில் போய் தூங்கிவிடு கின்றாள்…

நிஃமத்… அமைதிக்காக தொழுகின்றான். அவனது அறையில் கட்டிலில் படுத்துக் கொண்டே சிந்திக்கின்றான்… பைசுர் ரஹ்மான் சொன்ன பல விடயங்கள் அவனது இதயத்தை தாக்கியது… பல கேள்விகளுக்கு விடை தெரியவில்லை.

பிறரைப் போல் தானும் சுயநலமாக... ஒதுங்கிவிட்டால்... மக்களின் நிலை... தொடர்ந்து கலாசார சீரழிவுகளும் வறுமை நிலை களும் தொடரப் போகின்றது... யாழ்... வீட்டுத்திட்டம் கேள்விக் குறியாகிவிடும் என்று சிந்தித்தவாறு ஏதோ முடிவு ஒன்றை எடுத்து புறப்படுகின்றான்...

யாழ்ப்பாணம் புறப்பட தயார் ஆகிக்கொள்கின்றான். மனை விக்கு விருப்பமில்லை. சில விடயங்களை மட்டும் மனைவிக்கு சொல்லி... மனைவியின் தாய் வீட்டில் விடும்படி மனைவி கூறவே அவளுடைய ஆசைக்காக சொந்த வீட்டிற்கு ஒரு மாதம் மட்டும் என்று கூறிவிடுகின்றான்....மனைவி படித்தவர் என்பதால் நிஃமத்தின் எண்ணங்களைப் புரிந்துகொள்கின்றார்.

தனது உம்மா வாப்பாவை பிரிய மனமே இல்லை. வயது போன நேரம்... சரி அல்லாஹ் துணை... நல்ல காரியத்திற்காக புறப்படு கின்றோம் அல்லாஹ் துணை செய்வான் என்று கூறி உம்மா வாப்பாவிடம் சில விடயங்களைக் கூறி.... தங்கையிடம் தாயை அடிக்கடி பார்க்கச் சொல்லி.... அவர்களுக்கு பாதுகாப்புகளைத் தேடிக்கொடுத்து...

நிஃமத் புறப்படுகின்றான்.... ஒரு காலத்தில் ஒரு சமூகத்தை அழித்த அல்லாஹ் வேறு ஒரு சமூகத்தை உதயமாக்கி இருக் கின்றான். யாழ் மண்ணின் முஸ்லிம்களின் விடிவுக்காக மாற்றத்திற்காக நிஃமத்... வேலைகளைப் பொறுப்பெடுத்துப் புறப் படுகின்றான்... அவனுடன் 10 (பத்து) உத்தியோகத்தர்களும்... புறப்பட்டுக்கொள்கின்றார்கள்.

புத்தளத்தில் இருந்து புறப்படும்போது... உறவுகளை நினைத்து மனவேதனைப்பட்டாலும்... நம்முடைய நாலு பேரை பிரிந்து நாலா யிரம் பேரை வாழவைக்க அல்லாஹ் வாய்ப்புத் தந்துள்ளானே என்று இறைவனைப் புகழ்ந்து கொள்கின்றான்...

வவுனியா தாண்டியபோது கிளிநொச்சி சாவகச்சேரியின் அபி விருத்தி உண்மையில் வியக்கும் அளவு இருந்தது. A9 பாதை... மிக அழகாக செப்பனிடப்பட்டுள்ளதை நினைத்து சந்தோசப்பட்ட நிஃமத்...யாழின் எல்லையை தொட்டபோது... சனக் கூட்டங்களும், வாகனங்களும், கடைகளும் அப்பப்பா... குட்டி சிங்கப்பூராகிவிட்டது... மாஸா அல்லாஹ் என்று நினைத்தவன்...

யாழ்ப்பாணம் முஸ்லிம் வட்டாரத்திற்குள் வருகின்றான்... மனம் கவலைப்பட ஆரம்பித்தது.

இஸ்லாமிய உடை அணிந்து... முஸ்லிம்கள் உலாவும் இடம் என்ற தனித்துவத்தைக் காட்டும் இந்த பிரதேசம் களை இழந்துவிட்டது... தமிழ் முஸ்லிம்களின் கலகலப்பான குடும்பங்களின் வாழ்க்கை இப்போது குறைந்துள்ளது. எதையும் ஆழமாக பார்க்கவில்லை. ஏற் கனவே திறக்கப்பட்ட காரியாலயத்திற்குள் சென்றபோது ஏற்கனவே இவன் வருகின்றான் என்ற செய்தி கேட்டு காரியாலயம் மிக அழகாக ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது. நிஃமத் தனக்கான அறையில் சென்று உடைகளை மாற்றி குளித்துவிட்டு இரவுச் சாப்பாட்டை முடித்து தொழுதுவிட்டு துங்கச் சென்றுவிடுகின்றான். காரியாலயத்தில் யாருடனும் கதைக்கவில்லை. ஊழியர்கள் தங்கும் அறைகளுக்கு எல்லோரும் ஒதுங்கி விடுகின்றார்கள்.

★★★

இரவின் அமைதியை தொடர்ந்து காலைச் சூரியன் வருகை அதிகாலையை நினைவுபடுத்தியது… ஆனால் வந்த பிரயாண அசதி அன்று சுப்ஹு தொழுகை தொழ முடியவில்லை… வீட்டில் மனைவி / உம்மா… அலாரம் வைத்து எழுப்புவார்கள்… அந்த நினைவு அவனுக்கு பழகிகண் முழித்தபோது… காலை 6.30 மணியாகிவிட்டது. பதறி முழித்தவன்… அவசர அவசரமாக எழுந்து குளித்துவிட்டு தொழுது கொள்கின்றான். தாய்க்கு டெலிபோனில் சுகம் கேட்டு, மனைவியை சுகம் கேட்டு வேலைக்கு புறப்படுகின்றான்… இது அவனுக்கே தனியான பண்புகளாகும்… எந்தக் கடமையிலும் தான் தவறக் கூடாது என்பதில் மிகக் கண்டிப்பானவனாகும்.

★★★

காலை 7.30 மணிக்கெல்லாம் அன்று காரியாலயத்தில் இருக்கும் நிஃமத் தனது கண்ணாடி அறையில்… இருந்து வெளியே நடப்பதை அவதானிக்கின்றான்…. ஊழியர்கள் 8.30 மணி வரை வருகைதந்து கொண்டிருந்தனர்…

சிறிது நேரத்தில் அவனது P.A. உதவியாளரை உள்ளே அழைத்து கிராமத்தின் நிலைகளை கேட்டபோது… அவனுக்கு ஆச்சரியம்… முதலில் எந்த தலைவரை அழைப்பது… என்பதுதான்…

சரி பரவாயில்லை… Mr.பஹத் (P.A.) இன்று பி.ப 4.00 மணிக்கு… ஊரிலுள்ள… பள்ளிவாசல் தலைவர்கள், கிராமத் தலைவர்கள்… ஊரின் முக்கிய உறுப்பினர்களை அழைக்கமுடியுமா… என்று கேட்டபோது… ஓம் எனக் கூறி… உடனடியாக அறிவித்தல் விடப் படுகின்றது…இது மீள் குடியேற்றத்தின் முதல் ஆரம்பமாகும்.

பி.பகல் கூட்டம் ஆரம்பம்... பலருடைய கருத்துகள் கூறப்படு கின்றன... அனைத்தையும் அமைதியாக பார்த்துக் கொண்டிருந்த நிஃமத்... சிறிது நேரத்தில் பேச ஆரம்பிக்கின்றான்...நிஃமத் தன் பார்வையினால் அங்குள்ள நிலைகளை மிக அமைதியாக அளந்து கொண்டான்... அனைத்து நிலைகளையும் படமாக மனதில் நிறுத்தி பேச ஆரம்பிக்கின்றான்.

அனைவருக்கும் ஸலாம் அஸ்ஸலாமு அலைக்கும்... நான் திட்டப்பணிப்பாளர் நிஃமத்... நான் வந்த நோக்கம்... சில வேலைத் திட்டத்தை செய்ய முன்வந்துள்ளேன்...அதற்கு உங்கட ஒத்துழைப்பு தேவை... என்று கேட்டபோது ஒரு வயது போனவர் இன்னொரு வயது போனவரிடம் ஏதோ கூற நிஃமத் அந்தப் பெரிய வரை எழுப்பி ஐயா... என்ன சொன்னீர்கள் கூறுங்க... என்று அன்போடு கேட் கின்றான்.

தம்பி... எங்கள நிறைய போட்டோ புடிச்சு புடிச்சு... நாங்க கிழவனா கவும் போய்விட்டோம். இப்ப நீங்க... என்ன செய்யப் போறீங்க... போட்டோவா... அல்லது சோத்துப் பாசலா... தந்து ஏமாத்தப் போறீங்க... என்று மனவிரக்தியோடு கூறிய பெரியவரைப் பார்த்து எல்லோரும் நக்கலாக சிரிக்கின்றனர்... அவனுக்கு விளங்கிவிட்டது. மக்கள் நம்பிக்கை இழந்து விட்டார்கள்... மக்கள் களைத்துவிட்டார்கள்... நிஃமத் புன்னகை பூத்தவனாக...மனதி னுள் கவலைப்பட்டுக்கொள்கின்றான். மக்களின் நிலைகளை நேரடியாக கண்டவனுக்கு.... வேதனை தாங்க முடியவில்லை.

நிறைய கதைக்க விரும்பவில்லை... தனக்கு சில விபரங்களை உடனே கொண்டு வந்து தரும்படி கூறி... அங்கிருந்தவர்களை நிதானமாக அவதானித்து காரியாலயம் திரும்புகின்றான்...

மறுநாள் காலை காரியாலயம் சென்றபோது பல மொட்டைக் கடதாசிகள் பல கடிதங்கள்...... ஒருவரை பற்றி ஒருவர்..... ஏதோ எல்லாவற்றையும் பார்த்த அவன்...... அனைத்தையும் பைல் ஒன்றில் போட்டு கவனப்படுத்திவிடுகின்றான். மணக்கும்பான் பள்ளி வாசல் பொறுப்பானவர்களை அழைத்து அவசரமாக கூட்டம் நடாத்தப்படுகின்றது. அதற்கு பொறுப்பானவர்களிடம் அங்குள்ள காணிகளை விலைக்கு எடுத்து... 100 வீடுகள் கட்டி... அங்கு நிரந்தரமாக குடியேற விருப்பமுடையவர்களுக்கு... உடனடியாக காணிகளை கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டது... அதற்கமைவாக...

நிஃமத்துடன் மணக்கும்பான் பொறுப்பு குழுவினர்... காணிகளை விலை கொடுத்து வாங்கிக்கொள்கின்றனர்... காணிகளை கொடுக் காதவர்கள் உடனடியாக தங்கள் காணிகளை துப்பரவு செய்து... வீடு கட்ட வேண்டும்... இல்லையென்றால் நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்யப்படுகின்றது...

சிலர் காணிகளை துப்பரவு செய்து... வீடுகளை கட்ட முயற்சி எடுக்கின் றனர். பலர் காணிகளை நிஃமத்திற்கு விற்கின்றனர். அனைத்து காணிகளும் 100 வீட்டுத்திட்டத்திற்காக பிரிக்கப்பட்டு வீடு கட்ட அத்திவாரம் போடப்பட்டு... வீடுகள் கட்ட ஏற்பாடு செய்யப் படுகின்றது. வீடு இல்லாதவர்கள் விண்ணப்பங்களை கடிதம் மூலம் கொடுக்கின்றார்கள்.

மிக வேகமாக வீட்டுத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன் அங்கே ஐந்தாம் தரத்திற்கான பாடசாலையும் முன்பள்ளியும் ஆரம்பிக்கப்படுகின்றது. பள்ளிவாசல் புனர்நிர்மாணம் செய்யப் படுகின்றது... மணக்கும்பான் மீள்குடியேற்ற கிராமத்தின் வேலை நடைமுறைப்படுத்தப்பட்டபோது...

இவ்வேலைத்திட்டத்தில் மண்கும்பான் பரிபாலனசபை மிக ஒற்றுமையுடன் செயற்பட ஆரம்பித்தனர்.

நம்பிக்கை ஏற்பட்டாலும்... அதனை குழப்பவோ அல்லது பிரச்சினை ஏற்படுத்தவோ யாருமே முன்வரவில்லை... காரணம் நிஃமத் யாரோடும் கதைப்பதும் இல்லை... யாருடைய பேச்சு கேட்பதும் இல்லை.. அதே நேரம்.. மக்கள் உணர்ந்து கொண்டனர். இது வரையில் கைகொடுக்க ஆளில்லை.. அன்போடு கைகொடுத்த நிஃமத்தை கைவிட மக்கள் விரும்பவில்லை.

அந்த வேலைத்திட்டத்தினைத் தொடர்ந்து 1972ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பொம்மைவெளி (புதிய சோனக தெரு கிரா மத்தின் தலைவர்களை அழைத்தபோது... அங்கிருந்து வந்த வர்களில் பலர் பல கவலைகளைக் குறிப்பிடுகின்றனர்.

2003ம் ஆண்டு தாங்கள் மீண்டும் நம்பிக்கையோடு யாழ்ப் பாணம் வருகை தந்தது... கடந்த 10 வருடங்களுக்கு அதிகமாக தாங்கள் ஏமாற்றப்பட்டுக் கொண்டிருப்பதும் பத்து வருடங்களிலும் வெள்ளம், தண்ணி, மழை, வெயில்... எல்லாக் கஷ்டங்களையும் மக்கள் அனுபவிப்பது... மலசலகூட வசதிகள், கிணறு, குடிநீர் வசதிகள்... எதுவும் ஒழுங்கில்லாத நிலை. பெற்றோர்களுக்கான சரியான விழிப்புணர்வுகள் இல்லை... வறுமையில் சிறுவர்கள் கூட வேலை தேடி செல்கின்றார்கள்... சிறுவயது திருமணம்,அதே போல் சிறு வயதிலேயே கணவனை பிரிந்தவர்கள் மனைவியை பிரிந்தவர்கள், மதுவுக்கு அடிமையானவர்கள்... என்று.. எல்லாமே மக்கள் அனுபவிக்கும் துன்பங்கள் என்பதை தலைவர் அவர்கள் குறிப்பிடும்போது...

சமூகத்தின் வளர்ச்சிக்காக பொம்மைவெளி மீள்குடியேற்றங் கள்... தங்கள் குழு... பல முயற்சிகள் எடுத்த விடயங்களை அவர் கவலையோடு குறிப்பிடும் போதே... வந்திருந்த அந்த கிராமத்தின் தலைவர்களின் கவலை நிஃமத்திற்கு புரிந்தது...அந்த மக்களின் எண்ணங்களையும் ஏக்கங்களையும் புரிந்து கொண்ட நிஃமத்....

பாவம்... இவர்கள்.... உண்மையில் வழி எது... என்று கூட தெரியாத வர்கள்... பலர்... இவர்களின்... நிலைகளை சாதகமாக்கி... இந்த மக்களை வளரவிடக் கூடாது... என்று நினைத்துவிட்டனர்... அல்லாஹ் நீ தான் துணை அந்த கிராமத்திலுள்ள குடும்ப விபரங் களைப் பெற்ற நிஃமத்...

நிரந்தரமாக யாழ்ப்பாணத்தில் குடியிருப்பவர்கள் மட்டும்... முதலில் அவர்கள் விபரத்தை பெற்றுத் தரும்படி கேட்ட போது...

சில நாட்களில் கிராம சேவையாளர் ஆதாரபூர்வமான கடிதத் துடன் நூற்றுக்கும் அதிகமான கடிதங்கள் கிடைக்கப் படுகின்றது....

★★★

நிஃமத்....U.N. தலைமைக் காரியாலயத்துடன் ஏதோ கதைத் துக்கொள்கின்றான்... பைசுர் ரஹ்மானுடனும்... யாழ்ப்பாண மாகாண அமைச்சு மாகாண சபை... மூலமாக பல விடயங்களை தொகுத்துக் கொள்கின்றான்... முகாம் முக்கிய குழுவினர் உடனடி யாக அழைக்கப்படுகின்றனர்...

மீண்டும் 100 வீட்டுத்திட்டம் அமுல்படுத்தப்படுகின்றது... ஊரில் வேலையில்லாதவர்களுக்கு வேலைவாய்ப்பு.....மேசன்மார்

கள்..... தச்சன்..... அனைவருமே..... உள்ளூர்வாசிகள்... வேலைத்திட்டம் மிக வேகமாக நடைபெற்ற நேரம்...

பலர் வீடுகள் கேட்டு விண்ணப்பங்களை அனுப்பி வைக் கின்றனர். உங்களுக்கு வீடு தரலாம்... உடனடியாக உங்கள் வீடுகளில் குடியிருங்கள்... உடைந்த வீடுகளை துப்பரவு செய் யுங்கள். ஒரு வருடம்.... யாழ்ப்பாணத்தில் நிரந்தரமாகக் குடி யிருங்கள்.... நானே... வீட்டுத் திட்டம் தர... ஏற்பாடு செய் கின்றேன்... எங்கட திட்டம் இரண்டு வருடத்திற்கானது... எங்களுக்கெனப் பல விதி முறையுள்ளது.... எங்களுக்கு சட்டம் உள்ளது.... அதை மீற முடியாது....

நூற்றுக் கணக்கான மக்கள்... கடந்த பத்து வருடமாக கஷ்டப்படு கின்றார்கள்... வீடு இல்லாமல் வாடகை கொடுக்கமுடியாமல்... மிகத் துன்பப்படுகின்றார்கள்... என்று கூறியபோது வீடு கிடைக் காத ஒருவர் தகாத வார்த்தையொன்றை பேசி நிஃமத்திற்கு அடிக்க வந்த போது.... நிஃமத்.... கோபத்தில் எழுந்து

விட்ட 'அடி'... அந்த கூட்டமே... பயந்துவிட்டது... நான் யாரெண்டு நினைத்தாய்.... ஏமாற்றுக்காரனோ.... பொய் சொல்லுற வனோ இல்ல... சொல்றத செய்கின்றவன்... சண்டித்தனம்... எத்தனை பேரடா... இப்படி... வெளிக்கிட்டீங்க... என்று... கூறியவாறு... டெலிபோனில் கதைக்கின்றான். மின்னல் வேகத்தில் பொலிஸ்மா அதிபர் உட்பட... பல பாதுகாப்புப் படை வந்திறங்கியது.

கூட்டம் கூடியிருந்தவர்கள் பயந்துவிட்டார்கள்.... தகாத வார்த்தை கூறி கையோங்கியதற்காக... பொலீஸ் அந்நபரைக் கைது செய்து கொண்டு போனபோது... ஒரு அமைதி...

நிஃமத் மேலும் பேசுகின்றான்... குழப்பம் செய்து... கண்டது எதுவும் இல்லை... எனக்கு.... அல்லாஹ்வை தவிர யாருக்கும் பயம் இல்லை....

எங்கள் காரியாலய சட்டத்திற்கு கட்டுப்பட்டால் வீட்டுத்திட்டம் இல்லையென்றால் எதுவும் இல்லை... என்று கூறி... எழுந்து செல்கின்றான்...

★★★

இரண்டாவது... வீட்டுத்திட்டம் பொம்மைவெளி மீள்குடியேற்ற கிராமத்தின் வேலைகள் மிக... வேகமாக நடைபெறுகின்றது... பள்ளக் காணிகள் நிரப்பப்படுகின்றது... பாதை உயர்த்தப்படுகின்றது... வடிகால் அமைப்புகள் ஒழுங்குபடுத்தப்படுகின்றது. அனைத்து வீடு களுக்கும் மலசலகூடம்... கிணறு... நல்ல தண்ணீர் திட்டம் அமுல்படுத்தப்படுகின்றது. அங்கே சனங்கள் எல்லாமே மிகச் சந்தோசமான முறையில் வேலை செய்ய ஆரம்பிக்கின்றார்கள்.

பள்ளிவாசல் பரிபாலன சபையில் ஒரு மாற்றம்... குடிப்பவர்கள் குழப்பம் செய்பவர்கள்... குழந்தைகளை ஒழுங்காக பார்க்காத வர்கள் பிரச்சினைகள் கண்டறியப்பட்டு... சீர்திருத்தப் பள்ளி கள்... பொலீஸ்... உதவிகளைப் பெற்று... பல.. மாற்றம் காண முயற்சி எடுக்கின்றார்... புதிய பொலிஸ்மா அதிபர் அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டு தகாத விடயங்களில் ஈடுபடும் பலர் கைது செய்யப்படுகின்றார்கள்.

என்ன புதினம் என்றால்... நிஃமத்... பைசுர் ரஹ்மான் இணைந்து யாழ்ப்பாணத்தில் பொலீஸ்மா அதிபர் கூட... ஒரு முஸ்லிம்...

அவரை இவர்கள் இத்திட்டத்திற்காக இரண்டு வருடம்... டான்ஸ்வர் செய்து... யாழ்ப்பாணத்திற்கு வரவழைத்துள்ளனர்... இது... இந்த இளைஞர்களின்... கூட்டு முயற்சியாகும்... இரண்டு வருடத்தில் ஒரு மாற்றம் காணும் தீவிர முயற்சி.... மூன்று பேரும் நல்ல நண்பர்கள் என்பது... யாருக்குமே அன்று தெரியவில்லை...

★★★

பொலீஸ்மா அதிபர் கூட... யாழ்ப்பாணம்தான் பவாஸ்.... ஆனால்... யாருக்குமே தெரியவில்லை... பவாஸ்... மிக வேகமாக... மூலை முடுக்கெல்லாம்... அநீதி... நடக்கும் இடங்களை தட்டி எடுத்தான்... பல சட்டவிரோத கடைகள் உடைத்தெறியப்படுகின்றது... பலர் கைது செய்யப்படுகின்றார்கள்...

பள்ளிவாசல்களில் தொழுகைக்காக செல்பவர்கள் தொகை அதிகரிக்கின்றது... பெண்களின் கலாசாரம்... மாணவர்களின் ஒழுக்கத்திற்கான விழிப்புணர்வுகள் நடைபெறுகின்றது...

பாடசாலைகள் கூட ஆண்களுக்கான பாடசாலை... பெண் களுக்கான பாடசாலைகள்... மதரஸாக்கள்... எல்லாம் மேலும் சிறந்த முறையில் நடைபெறுகின்றது... ஏற்கனவே... யாழ்ப்பாண மண்ணில் பல உதவிகளைச் செய்த கொடை வள்ளல்கள், சீர்திருத்த வாதிகள் எல்லாம் மேலும் மேலும்... தங்கள் உதவிக் கரங்களை நீட்டி யாழ்ப்பாண முஸ்லிம்களின் அபிவிருத்திக்காக கஷ்டப்பட ஆரம்பிக்கின்றனர்...

முஸ்லிம் வட்டாரத்திலுள்ள சகல முஸ்லிகளின் வீடுகளும் மீண்டும் புனர்நிர்மாணம் செய்யப்படுகின்றது... மாநகர சபை

அவரை இவர்கள் இத்திட்டத்திற்காக இரண்டு வருடம்... டான்ஸ்வர் செய்து... யாழ்ப்பாணத்திற்கு வரவழைத்துள்ளனர்... இது... இந்த இளைஞர்களின்... கூட்டு முயற்சியாகும்... இரண்டு வருடத்தில் ஒரு மாற்றம் காணும் தீவிர முயற்சி.... மூன்று பேரும் நல்ல நண்பர்கள் என்பது... யாருக்குமே அன்று தெரியவில்லை...

★★★

பொலீஸ்மா அதிபர் கூட... யாழ்ப்பாணம்தான் பவாஸ்.... ஆனால்... யாருக்குமே தெரியவில்லை... பவாஸ்... மிக வேகமாக... மூலை முடுக்கெல்லாம்... அநீதி... நடக்கும் இடங்களை தட்டி எடுத்தான்... பல சட்டவிரோத கடைகள் உடைத்தெறியப்படுகின்றது... பலர் கைது செய்யப்படுகின்றார்கள்...

பள்ளிவாசல்களில் தொழுகைக்காக செல்பவர்கள் தொகை அதிகரிக்கின்றது... பெண்களின் கலாசாரம்... மாணவர்களின் ஒழுக்கத்திற்கான விழிப்புணர்வுகள் நடைபெறுகின்றது...

பாடசாலைகள் கூட ஆண்களுக்கான பாடசாலை... பெண் களுக்கான பாடசாலைகள்... மதரஸாக்கள்... எல்லாம் மேலும் சிறந்த முறையில் நடைபெறுகின்றது... ஏற்கனவே... யாழ்ப்பாண மண்ணில் பல உதவிகளைச் செய்த கொடை வள்ளல்கள், சீர்திருத்த வாதிகள் எல்லாம் மேலும் மேலும்... தங்கள் உதவிக் கரங்களை நீட்டி யாழ்ப்பாண முஸ்லிம்களின் அபிவிருத்திக்காக கஷ்டப்பட ஆரம்பிக்கின்றனர்...

முஸ்லிம் வட்டாரத்திலுள்ள சகல முஸ்லிகளின் வீடுகளும் மீண்டும் புனர்நிர்மாணம் செய்யப்படுகின்றது... மாநகர சபை

மூலம்... தெரு வீதிகளில் உள்ள நாய்கள் கூட... பிடிக்கப்படுகின்றது... தொழுகைக்காக செல்லும்போது "நஜீஸ்" வீதிகள் எல்லாமே... நாய்களின் தொல்லைகள் அதிகமாக இருப்பதால்... நாய்கள் பிடிக்கும் பணி கூட ஆரம்பிக்கப்பட்டுவிட்டது...

முஸ்லிம் வட்டாரத்திலுள்ள தலைவர்களுடன் கதைக்கப்பட்டு அரச காணியொன்றில் மதரஸாக்கள் (பெண்களுக்கான / ஆண் களுக்கான) கட்டிடமாக கட்டப்படுகின்றது...

வீடுகள் மெதுமெதுவாக கட்டப்படுவதுடன் புதிய குடிகளின் வருகையும் அதிகமாகியது....

இளைஞர் படைகளை அன்று ஒன்றிணைந்து கதைத்து... வீடுகள் விற்கப்படுவதாக இருந்தால் அவ்வீடுகளை பணக்கார இளைஞர்கள் விலைகொடுத்து வாங்கத் தயார் ஆனார்கள்... யாழ்ப்பாணத்தின் இளைஞர்குழு மீள்குடியேற்றத்திற்காக மும் முரமாக ஈடுபடுகின்றனர்.

எனவே ஓரளவு பிரதேசத்திலுள்ள பல் காணிகள் மீண்டும்... முஸ்லிம்களுக்கே சொந்தமாகிக் கொண்டிருந்தது...

கடந்த காலங்களில் பல முஸ்லிம் கிராமங்கள் இழக்கப்பட்டதைப் போல் இல்லாமல்... அல்லாஹ்வின் உதவியுடன்... மீண்டும் ஓர் ஆயிரம் வீட்டுத் திட்டம்.... பூரணப்படுத்தி முடிவுற்ற நிலையில் இருந்தது...

★★★

வெள்ளக் கடற்கரை குழுவினரும், பொம்மைவெளி குழுவி னரும், சோனகத் தெரு குழுவினரும் போட்டி போட்டு வேலை

களைச் செய்தனர்... யார் முதலில் திறப்புவிழா செய்வது என்பது போட்டி...

இப்போது சமூகம் சந்தோசத்தின் உச்சியில் இருந்தது...

இணையத்தளத்தில் நல்ல செய்திகள் தினமும் போடப்படு கின்றன... யாழ் மண்ணில் மீண்டும் உதயம்... முஸ்லிம் கிராமம்... புதிய வரலாற்றை நோக்கி... கடந்த பத்து வருடம் கேள்விக் குறியாகிய... கிராமத்திற்கு... அல்லாஹ்வின் துணையோடு விடிவு கிடைத்துவிட்டது...

படித்த இளைஞர் படை ஒன்றிணைந்தால் நிச்சயம் வெற்றி தான்...

நிஃமத் சமூகத்தில் யாருடனும் அதிகம் கதைப்பது இல்லை... ஆனால் அவனைக் கண்டால் சமூகம்...மதித்தது... அளவுக்கு மிச்சமாக... சமூகத்தில் மரியாதை கிடைத்தது... ஆனால் அவன் யாருடைய மரியாதைகளையும் எதிர்பார்க்கின்றவன் இல்லை...

உண்மையில்... நான் என்ற அகம்பாவம் திமிர்... என்னால் தான் முடியும் என்று நினைத்த... எந்த பிர்அவ்ன்... நும்றூத்... ஹிட்லர்... போன்றவர்கள் நிலைத்ததில்லை...

இறை சிந்தனை அல்லாஹ்வுக்கு பயந்து நடப்பவர்களுடன் நிச்சயம் அல்லாஹ் கூடவே இருப்பான்...

அன்று காரியாலயத்தில் ஒரு பெருந்தலைவர் வருகை தந்தி ருந்தார். நிஃமத் ஏற்கனவே அவரைப் பற்றி அறிந்திருந் தாலும்... மரியாதைக்காக வரவேற்று என்ன விடயம் என்று

கண்ணால் கேட்டபோது... அது... தம்பி... இவ்வளவு காசை செலவு செய்யாதீங்க... இங்க யாரையும் நம்பவேண்டாம்... எல்லாம் பச்சக் கள்ளர்... என்று... வேலைசெய்து கொண்டிருக்கும் குழு வினரைத் தப்பாக பேசும்போது வேலைகளை குழப்பச் சதி செய்ய நினைக்கின்றார்கள் என்பது விளங்கிவிட்டது.

ஐயா! முதல்ல... வெளியே போங்க... please... கெட்... அவுட்.... என்று கோபமாக கத்திவிட்டான்... அவர் இல்ல தம்பி... எனக்கு அவனைத் தெரியும்... இவனைத் தெரியும்... நான் சொல்றத கேளு என்று திணிக்க முற்பட்டவரை

முதல்ல வெளியே போங்க... உங்களுக்கு சனாதிபதியை தெரிந்தாலும் பரவாயில்லை. போங்க வெளியே...

எனக்கு யாரையும் பற்றி இங்கு கதைக்க தேவையில்லை...

சீ... நீங்க ஒரு பெரிய மனுசன்.. முதல்ல... உங்கள பத்தி நீங்க யோசிங்க... உங்க... சமூகம் எப்படி எப்படியெல்லாம் கேவலமா பேசுறாங்க தெரியுமா....நீங்கள் நல்லது செய்கிறேன் என்று ஊர் முழுவதும் கூற வேண்டாம்... உங்கள் மனச்சாட்சியை தட்டிக் கேளுங்கள்.

எவ்வளவு தப்பு நீங்க செய்றீங்க தெரியுமா... ஆனா...முழு பூசணிக்காயை சோத்தில மறைச்சுக் கொண்டு என்னிடம் வேலை செய்வதற்கு தடையாக வாரீங்க...

முதல்ல நீங்க யோசிங்க... உங்கட வயசுக்கு நீங்க என்ன நல்லது செய் தீங்க... என்ன கெட்டது செய்தீங்க..... என்று..... பிறரை பற்றி கதைக்க... ஒரு தகுதி வேணும்... உண்மையில்... இங்குள்ள

தலைவர்கள் பாவம்... அவர்களுக்கு சரியான வழிகாட்ட மனுசர் இல்லை. இளைஞர்கள் பாவம்... அவர்களுக்கு கைகொடுக்க ஆளில்ல...

தலைமைத்துவம் ஒரு ஆணுக்கு அல்லாஹ் கொடுப்பது எதற்காக தெரியுமா... நல்ல சிந்தனை பக்குவம் இருக்கும் என்பதற்கு... ஆனால் நீங்க... ஒரு சமூகத்தை அழித்துக்கொண்டு இருக்கின்றீர்கள்...

இன்னும் எத்தனை வருடம் உயிருடன் இருக்கப் போகின்றீர்கள். நல்லதைச் செய்யுங்கள், அல்லது செய்யவிடுங்கள் அல்லது... அல்லாஹ்வின் பாதையில் செல்லுங்கள் என்று... அவரை திருத்துவதற்காக பொங்கி எழுந்தான்... உண்மையில் சமூகத்தின் குழப்பவாதி.... இவர்தான்... இவரைப் போல் ஒரு சிலர் இருந்து கொண்டு சமூகத்தை அழித்துக் கொண்டு வருகின்றார்கள்... சந்தர்ப்பம் பார்த்திருந்த நிஃமத்திற்கு போட்டுத்தாக்க நல்ல சந்தர்ப்பத்தை அல்லாஹ் கொடுத்துவிட்டான்...

ஒன்றுமட்டும் நினைத்துக் கொள்ளுங்கள். அநியாயம் என்றும் நிலைக்காது... ஆனால்... உண்மை என்றும் அழியாது...

போங்க... போய் நல்லதை செய்யும் வழிகளைப் பாருங்கள் என்று.... கூறி... தனது கதிரையில் இருந்து எழுந்து சென்றுவிட்டான் நிஃமத்...

வந்த பெரியவர்... தனது ஓட்டை... எல்லாமே இவனுக்கு எப்படி தெரியும்... என்று வெட்கத்திலும்... அவர் விட்ட பிழைகளை யோசித்துக் கொண்டே வெளியே செல்கின்றார்... நிஃமத் கூறிய

பல வார்த்தைகளை அவர் மீண்டும் மீண்டும் யோசிக்கின்றார்... பல நாட்களில் இந்த துன்பச்செய்தி நிஃமத்தின் காதுகளில் கேட் கின்றது....

★★★

அன்று இரவு... அந்த அநியாயக்காரன் வீட்டில் தனியே படுத் துறங்கிக் கொள்கின்றான்... நிஃமத்தின் ஆணித்தரமான பேச்சு.... காதுகளில் கேட்டபோது... நான் என்ன செய்தேன்... மறுமைக்கு நான் எதுவுமே செய்யவில்லை... என்று கவலையொன்று எழ ஆரம்பித்தது... ஆனால் நெஞ்சுவலியால் துடித்தார். நெஞ்சை அடைத்து தண்ணி... தண்ணி... என்று அழுதார்... ஆனால் ஒரு சொட்டுத் தண்ணி கொடுக்க கூட ஆளில்லை... காரணம்... அவரை நம்பி வந்த மனைவிக்கு... அவர் செய்த அநியாயத்தால்... மனைவி... அவரோடு இல்லை... ஏனோ... பிள்ளைகளும் அவரைக் கணக்கெடுப்பதும் இல்லை... உறவுகளையும் பிரித்து பிரித்து உறவுகள் எல்லாமே தூ ரமாகிவிட்டது... இப்போது யாருமே இவரோடு இல்லை... இவர் இறைவனின் பிடியில்...

துடித்து விடுகின்றார்... முடியவில்லை... அல்லாஹ் அல்லாஹ்... நான் செய்த பாவத்தை மன்னித்துக்கொள் என்று நினைக்கின்றார். வாய் கதைக்க முடியவில்லை... இதயத்தில் அவர் செய்த பாவங்கள் முட்டி மோதியது... தான் எந்த நன்மைகளையும் அல்லாஹ்வுக்காக செய்யவில்லை என்பதை உணர்ந்தார்.... ஆனால் கலிமா வர வில்லை... இரவு முழுவதும்... இறைவன் பிடியில் அகப்பட்ட அவர்... துடி துடித்து மரணமான செய்தி அதிகாலையில் பள்ளிவாசலில் அறிவிக்கப்படுகின்றது...

நிஃமத் அதிர்ந்துவிட்டார்... காரணம்... தான் பேசியதால் தானோ... என்று யோசித்தவர்.... இல்லை... கடைசி நேரத்தில் தன்னாலேனும் அவர் விட்ட பிழைகளை அவர் யோசிக்க வழி ஏற்பட்டதே... என்று ஜனாஸாவுக்கு சென்று அவருக்காக துஆ செய்கின்றான்...

ஆனால் ஜனாஸா... பல மொட்டை கடிதங்கள், டெலிபோன கோல்கள் செய்ததால் என்னவோ..... கைவளைந்த நிலையில்... வாய் கோணடி... கால் மடிக்க முடியாத நிலையில் மிகவும் மோச மாக ஜனாஸா நல்லடக்கம் செய்யப்படுகின்றது... இவர் மரணம்... பலருக்கு பாடமாக வேண்டும்... இவரது... ஜானாஸாவை பார்த்து பலர் பேசிய பேச்சு... தப்பு செய்தவர்களை திருத்துமா? என்பது... கேள்விக்குறிதான்... உண்மையில் அல்லாஹ்வுக்காக செய்யும் உதவிகளை அல்லாஹ் ஏற்றுக்கொள்வான்... ஆனால் சிலர் தங்கள் குறைகளை மறைக்கசெய்யும் உதவிகளை சில நேரம் அல்லாஹ் அம்பலப்படுத்திவிடுவான். ஜனஸாவுக்கு வந்தவர்கள் அனைவரும்.... அந்த மனிதர் செய்த அநியாயங்களை கூறிக் கூறி பேசிக்கொண்டனர்... நாற்பது பேருடைய துஆ.. ஒரு மனிதனை சுவர்க்கத்தின் பால் அழைத்துச் செல்லும். ஆனால், நாலு பேர் கூட இல்லை இவருக்காக துஆ செய்ய... அவரது மனைவி கூட கணவனால் இழைக்கப்பட்ட அநீதிகளை கூறிக் கூறி அழுகின் றாள்... பலருடைய கண்ணீரைச் சுமந்தவராக ஜனஸா நல்லடக்கம் செய்யப்படுகின்றது..

இந்த முஸ்லிம் கிராமமும் ஒரு விடிவை நோக்கி நகர்கின்றது.

★★★

வீட்டுத்திட்ட வேலைகள் நிறைவு கண்டது... வீடுகள் உரியவர் களுக்கு பகிர்ந்தளிக்கும் வேலை... அன்று முஸ்லிம் பிரதேசத்தில் மாபெரும் பொன்னால் ஒரு தசாப்த காலம் நடைபெறாத வேலைப் பணி நிறைவாகிய நன்நாள்... மக்களின் மனங்களில் ஆனந்த பூரிப்பு...

எல்லோரும் சந்தோசம்... ஒரு வருடத்தில் 1000 வீடுகள் பாட சாலை மத்ரஸா.... கிணறு..... மலசலகூடம்.... தொழில்வசதி.... இளைஞர்களுக்கான தொழில்பயிற்சிகள் நன்கொடைகள் எல்லாமே மாறிவிட்டது.

அன்று பைசுர் ரஹ்மான், நிஃமத், பவாஸ் மூவரும் ஒன்று சேர்கின் றார்கள்..... உண்மையில் மூவரும் யாழ்ப்பாணம்தான்.... பைசுர் ரஹ்மான் திருமணம் முடித்தது கொழும்பில்.... சிறு வயதில்.... கொழும் போடு சென்றுவிட்டார்.

மூன்று பேருமே... யாழ் மண்ணிற்கு சொந்தமான மூவேந் தர்கள். பைசுர் ரஹ்மான் UNHCR நிறுவனத்தின் இலங்கையின் பணிப்பாளர் ஆவர்... மாபெரும் கோடீஸ்வரன்... அவர் எதை நினைக்கின்றாரோ... அது யோசித்து செய்வார்... பல சாதனை மிக்க மாமனிதர் நிஃமத்... நேர்மை, உண்மை நிறைந்த பொறியிலாளர்... கெட்டிக்காரன்... பல்கலைக்கழகத்தில் கூட அனைவராலும் விரும்பப்படும் மாணவன் கோபம் வந்தால்... யார் என்பது தெரியாது...

அதேபோல் பவாஸ் (IPS) நீதி தவறாத பொலிஸ் மா அதிபர்... கெட்டிக்காரன் கடமை தவறாது புறப்படும் சிங்கம்...

மூன்று இளைஞர்களின் திட்டம் வெற்றியளித்த நாள்... மூவரும் ஒருவரை ஒருவர் கட்டியணைத்து சந்தோசத்தின் உச்சிக்கே சென்றுவிட்டார்கள்... பின்பு கிராமங்கள் திறக்கப்பட போகின்றது... யார் திறப்பது யாரை அழைப்பது...

பைசுர் ரஹ்மான்... கூறுகின்றார்... எல்லோரையும் அழைக்க வேண்டும்... நிகழ்வுகளை பெரிய அளவில் செய்யவேண்டும் யாழ்ப்பாண முஸ்லிம்களின் மாற்றத்தை உலகமே வியக்க வேண்டும்.

எமது இளைஞர்கள், சமூகத் தலைவர்கள்... முகாம் தலைவர் களின் பணிகளை மெச்சவேண்டும்.

அவர்கள் தங்களிடம் உள்ள திறமைகளை தெரியாமல் இருந் துள்ளார்கள் என்று... பைசுர் கூறும்போது... நிஃமத் இல்லை... அவர்களுக்கு வழிகாட்ட உதவி செய்ய யாரும் இல்லை...

நாம் நல்ல வழிகளை காட்டினோம்... அவர்கள் தங்கள் கிரா மங்களை தாங்களே செய்து கொண்டார்கள்... என்பதை கூறிக் கொண்டே நிகழ்வுக்கான நிரல் போடப்படுகின்றது... பிரதேச செயலாளர், மாவட்ட செயலாளர், கல்வி அமைச்சர், மாகாண அமைச்சர், ஆளுநர், UNHCR பெரியவர்கள்... கொழும்பிலுள்ள தலைவர்கள். யாழ் மண்ணின் தலைவர்கள். ஊர் மக்கள் என... எல்லோருக்கும் அழைப்புவிடுகின்றார்கள்...

2015ம் ஆண்டின் இறுதிப் பகுதி அது... 2016இன் ஆரம்பம்... யாழ்ப்பாண முஸ்லிம்களின் நினைவு நாள் புதிய வரலாற்றின் ஆரம்ப நாள்...

★★★

மூன்று இளைஞர்களின் திட்டம் வெற்றியளித்த நாள்... மூவரும் ஒருவரை ஒருவர் கட்டியணைத்து சந்தோசத்தின் உச்சிக்கே சென்றுவிட்டார்கள்... பின்பு கிராமங்கள் திறக்கப்பட போகின்றது... யார் திறப்பது யாரை அழைப்பது...

பைசுர் ரஹ்மான்... கூறுகின்றார்... எல்லோரையும் அழைக்க வேண்டும்... நிகழ்வுகளை பெரிய அளவில் செய்யவேண்டும் யாழ்ப்பாண முஸ்லிம்களின் மாற்றத்தை உலகமே வியக்க வேண்டும்.

எமது இளைஞர்கள், சமூகத் தலைவர்கள்... முகாம் தலைவர்களின் பணிகளை மெச்சவேண்டும்.

அவர்கள் தங்களிடம் உள்ள திறமைகளை தெரியாமல் இருந்துள்ளார்கள் என்று... பைசுர் கூறும்போது... நிஃமத் இல்லை... அவர்களுக்கு வழிகாட்ட உதவி செய்ய யாரும் இல்லை...

நாம் நல்ல வழிகளை காட்டினோம்... அவர்கள் தங்கள் கிராமங்களை தாங்களே செய்து கொண்டார்கள்... என்பதை கூறிக் கொண்டே நிகழ்வுக்கான நிரல் போடப்படுகின்றது... பிரதேச செயலாளர், மாவட்ட செயலாளர், கல்வி அமைச்சர், மாகாண அமைச்சர், ஆளுநர், UNHCR பெரியவர்கள்... கொழும்பிலுள்ள தலைவர்கள். யாழ் மண்ணின் தலைவர்கள். ஊர் மக்கள் என... எல்லோருக்கும் அழைப்புவிடுகின்றார்கள்...

2015ம் ஆண்டின் இறுதிப் பகுதி அது... 2016இன் ஆரம்பம்... யாழ்ப்பாண முஸ்லிம்களின் நினைவு நாள் புதிய வரலாற்றின் ஆரம்ப நாள்...

★★★

முதல் மீள்குடியேற்றம் மண்கும்பானில் நடைபெற்று மக்களுக் கான வீட்டிற்குரிய சாவிகள் வழங்கப்படுகின்றது... காணி எதுவும் 5 வருடத்திற்கு யாரும் விற்கவும் முடியாது... யாரும் வாங்கவும் முடியாது. அனைத்து காணிகளும் பள்ளிவாசல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது...

பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது... அதேபோல் மத்ரஸா... ஒன்றும் திறந்து வைக்கப்படுகின்றது.

அதேபோல் மறுநாள் பொம்மைவெளி (புதிய சோனக தெரு) குடியேற்றமும்... அதன் திறப்புவிழா வைபவமும்... மிக அழகான முறையில் நடைபெற்று முடிந்தது...

இறுதியில் அனைத்து மக்களும் ஜின்ன மைதானத்திற்கு வரவழைக்கப்பட்டு அங்கு நடைபெற்ற மாபெரும் விழா.. அதில் பல தொழிலதிபர்கள்... பிரதேச... மாவட்ட செயலாளர்கள்... அமைச் சர்கள்... கல்விமான்கள்... என... பலர் கலந்துகொண்டனர்... அதே போல் முஸ்லிம் வட்டார வீடுகள் முழுவதும ஓரளவு பூரணப் படுத்தப்படுகின்றது.

அப்போது தான் தெரிந்தது... இது ஒரு கூட்டுமுயற்சி... இவ்வுதவி களுக்காக... யாழ்ப்பாண பிரதேச அலுவலகம், மாவட்ட செயல கம், மாகாண அமைச்சு, ஏன் மாநகர சபை,யாழ்.மண்ணின் பல அமைச்சர்கள் சுகாதார திணைக்களம், பொலிஸ் பாதுகாப்பு பிரிவு என...ஒட்டுமொத்தக கூட்டு முயற்சிகளை ஒருங்கிணைத் தவர்கள்தான்... இவர்கள் தமிழ் முஸ்லிம்கள் என்ற பாகுபாடு இல்லாது... இந்த மக்களின் வெற்றிக்காக அயராது உழைத்த நிறுவனங்கள் பாராட்டப்படுகின்றன.

இந்த யாழ்ப்பாண மூன்று முத்துகளும்... இவர்களின் திட்டமிட்ட செயற்பாடு.... அசையாத நம்பிக்கை தியாகம்... உறுதி... வீரம்.. எல்லாம் வெற்றிப் பாதைகளாகிவிட்டது. இவர்களைப் போல் முயற்சி கொண்டு போராடுபவர்களுக்கு வெற்றி நிச்சயம். இவர்களை பாராட்டாதவர்கள் யாருமில்லை...

அனைத்தையும் முன் வரிசையில் அமர்ந்திருந்து பார்த்திருந்த மூன்று பேருடைய தாய்மார்களும் ஆனந்தத்தில் பூரித்தனர்... ஒரு குழந்தை தாய்க்கு கொடுப்பது சந்தோசத்தை மாத்திரம்தான்.. அதை தான் அவர்கள் எதிர்பார்ப்பார்கள்.

பைசுர் ரஹ்மான், நிஃமத், பவாஸ்... மூவருக்கும் பொன்னாடை போர்த்தி கௌரவிழா நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டபோது... மூவரும் எழுந்து வந்து மூன்று தாய்மார்களையும் தங்கள் பக்கத்தில் நிற்பாட்டியபோது... பலர் வியந்தனர்...

யாழ்ப்பாணத்தை சேர்ந்தவர்களா?.... இவர்களுடைய பிள்ளைகளா? பைசுர் ரஹ்மான் குடும்பப் பரம்பரை பணக்காரர்... ஆனால் பவாஸ் உம்மா ஒரு ஆசிரியை... ஆனால் நிஃமத்தின் தாய் ஒரு ஏழை... பலருடைய சொல் பேச்சுக்களுக்குள் அகப்பட்டு அடிவாங்கிய ஏழைத்தாய்... ஏழைத் தாயின் கருவிலும் நல்ல குழந்தைகள் பிறப்பதுண்டு...

நிஃமத்தின் தாய் பஸ்லியாவுக்கு தாங்கமுடியவில்லை. மகனின் சேவைகளை நினைத்து ஆனந்தப் பூரிப்பில் ஆடிப்போய்விட்டார்...

அனைத்து பொன்னாடைகளும் இவர்களை பெற்ற தாய் மார்களுக்கு போடப்படுகின்றது...

ஒரு நல்ல குழந்தைகளை உருவாக்குவது...

நிச்சயம் தாயின் கையில்தான் உள்ளது...

என்பது பெரியோர் வாக்கு...

கடந்த இருபத்தைந்து வருட காலம் நடைபெறாத நிகழ்வுகள் இது... யாழ். மண்ணின் ஒரு திருப்புமுனை... முடியாதது என்பது எதுவும் இல்லை... ஆரம்பகால யாழ்ப்பாண வரலாற்றின் சிற்பிகள் விதானையின் ரஸீன், புரக்டர் சுல்தான், VMS அப்துல் ஹாகியர் 2015ல் தலைவர்கள் இவர்கள் மூவரும் உண்மையில் இவர் களைப் போல் சேவை செய்யும் மைந்தர்கள் எம் மண்ணில் இல்லாமல் இல்லை....

சேவை செய்து கொண்டு தான் இருக்கின்றார்கள் ஆனால், சேவை அனைத்தும் ஒன்றிணைக்கப்பட்டால், திட்டமிடப்பட்டால்... எம் நினைவுகளை நிஜங்களாக்கி... எம் மக்களுக்கான ஒளி மயமான வாழ்வினைப் பெற்றுக் கொடுக்க முடியும். நிகழ்வுக் காக வந்திருந்தவர்கள் பலருடைய பாராட்டுக்களைப் பெற்ற மூவேந்தர்கள்.. யாழ்.மண்ணின் தங்களுடன் இணைந்து சேவையாற்றிய மாகாண, மாவட்ட, மாநகர சபைகளுக்கும் அதன் செயலாளர்களுக்கும், அதிகாரிகளுக்கும் உத்தியோகத்தர் களுக்கும், கௌரவ அமைச்சர்களுக்கும் மகளிர் விவகார பிரதி அமைச்சருக்கும். நிதி நிறுவனங்களுக்கும்... நிஃமத் மனமார்ந்த நன்றிகளைக் கூறிக் கொண்டார்.

மக்களின் சந்தோசத்திற்கு அளவுகள் இல்லை. இவ்வாறு மாபெரும் கூட்டம் மகிழ்வுடன் இனிதே நிறைவு பெற்றது...

மூவரும் தங்கள் வீடுகளுக்கு வருகை தந்தனர். அப்போது வீட்டில் நடந்த சம்பவம் மூவரையும் வியக்க வைத்தது.


பைசுர் ரஹ்மானின் மகன் மேடை மீது அரசியல்வாதிபோல் பேசிக் கொண்டிருக்கின்றான். நிஃமத்தின் மகன் "ஸ்... யாரும் பேசக்கூடாது" என... ஏதே... எழுதுகின்றார்... பவாஸின் மகன் பொலீஸ் போல் சலூட் அடிக்கின்றான்...

இவற்றை ரசித்த மூவரும் வாய்விட்டே சிரித்து விடுகின்றார் கள்... இவர் யாழ் மண்ணின் மூன்றாவது தலைமுறையாகும். பெற்றோர் எவ்வழியோ குழந்தைகளும் அவ்வழியே... இருபத்தி ஐந்து வருட காலத்தில் யாழ் மண்ணின் பல குழந்தைகள் இது வரை யாழ்ப்பாணம் தெரியாமலே வாழ்கின்றனர்... ஆனால் இந்த மூவேந்தர்களின் சேவைப் பணி யாழ்மண்ணில் மீண்டும் தொடர்கின்றது... மக்களின் வருகை அதிகரிப்புடன் தொடர்ந்து இரண்டு வருட சேவைகளும் தொடர்கின்றது... எதிர்காலத்தில் நமது குழந்தைகளையும் நாமும் அப்படியே வளர்க்கவேண்டும்...

ஆனால் யாழ் மண்ணில் நேற்று இவர்களால் நாளை...?

பல பிரதேசங்களில் சிதறிய யாழ் மண்ணிலுள்ள முஸ்லிம்களில் பல துளிர்கள் மீண்டும் ஒன்று சேரும் என்ற நம்பிக்கை மெதுமெதுவாக உதயமாகிக் கொண்டிருந்தது...இந்த நினைவுகள் நிஜங்களாகினால் எம் மண்ணின் வரலாறு புதிய நாமத்தை உருவாக்கும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

★★★



# நாம் சிந்திப்போம்

கனவுகளை நிஜங்களாக்குவது... நிச்சயம் உங்கள் கைகளில் தான்...

முடியாதது என்று ஒன்றுமில்லை... முடியும் என்று உறுதி கொண்டால் வெற்றியும் நமக்கருகில்தான்...

பணத்தை யாரிடமும் அல்லாஹ் கொடுப்பதில்லை... அதுவே நம்மிடம் இருக்குதென்றால் பிறருக்கு உதவிடவே என்பதை நாம் உணரவேண்டும்.

அறிவு ஞானத்தை அல்லாஹ் தந்திருந்தால்... அது நல்லவர் களை உருவாக்கவே இறை அவன் நாடியுள்ளான் என்பதை உணர வேண்டும்...

நல்ல எண்ணங்கள் உதயமாகும்போது... அதை செய்வது பெரிய காரியமில்லை... காரணம் அந்த எண்ணங்கள் எல்லோருக்கும் தோன்றுவதில்லை.

பாவத்தைக் குறைக்க வேண்டுமென்றால் இறைபக்தியை கூட்டிக் கொள்ளவேண்டும்... பாவம் எம்மிடம் இருந்து விடைபெற்றுச் செல்லும்.

கிணற்றில் நீர் எடுக்கும்போதுதானே கிணற்று நீரும் ஊற் றெடுக்கும்... இல்லை என்றால் அதுவும் பாழடைந்துவிடும்.

கற்கள் கூட பட்டை தீட்டப்படும் போதுதான் அது ரத்தினங்களாக ஜொலிக்கின்றன... இல்லை என்றால் அதுவும் வெறும் கல்தானே...

அதுபோலத்தான் நாம் வாழ்வுக்கும் உயிரோட்டம் கொடுக்கும் போதுதான் அதன் அர்த்தங்கள் விளங்கும்.

பிறக்கும் ஒரு மனிதன் இறக்கும் வரை செய்யும் நல்ல சேவைகளின் வடிவம்தான்... மரணத்தின் நல்ல ஆரம்பம்...

திட்டமிட்ட செயற்பாடுகள் எம்மிடம் உள்ள திறமைகளுக்கு வழி வகுக்கும்.

திட்டமிடாத வேலைப்பாடுகள் எம்மை அறியாது அழிவுக்குள் தள்ளி விடும்...

முயற்சி இல்லாதவன் என்றுமே... மனதால் முடவன்தான்... ஆனால் நல்ல முயற்சியுடையவன் என்றுமே மா மனிதன்...

இறந்த பின்பும் அவன் வாழ்வான். அவன் செய்த சேவைகளின் வடிவத்தில்...

பெயர் வைத்து பிள்ளை பெறுவதை விட நல்ல பெயர் சொல்லும் பிள்ளைகளை உருவாக்கவேண்டும். இது பெற்றவரின் கடமையாகும்.

நான் எதைப் பேசுகின்றேன் என்று தெரியாமல் பேசுவதை விட நான் என்ன பேசுகின்றேன்... என்பதற்கு அர்த்தம் விளங்கப் பேசு... அப்போதுதான் பேச்சின் பெறுமதி விளங்கும்.

பிறருக்குத் தெரியாமல் பாவங்களைச் செய்து உலகில் பெரியவனாக முடியும்... ஆனால் இறைவனுக்கு தெரியும் உன் திருவிளையாடல் என்பதை நீ மறந்து விடாதே... ஏனென்றால் அவன் முன்னே... நீ... சிறியவன்தான்...


இறைவனைப் பயந்து நீ செய்யும் நல்ல சேவைகள். உன்னை மா மனிதனாக்கும். எப்போது என்றால்... இறைவனடி சேரும்போது...

பாவங்கள் என்றும் நிரந்தரமானது இல்லை. காரணம் திருத்துவதற்கு ஆயிரம் வழிகள் உண்டு...

ஆனால் பாவங்களையே வாழ்க்கையாக்கிக் கொண்டால், திருந் திட வாய்ப்பே இல்லை... நல்லதை செய்வோம். அதை நன்றே செய்வோம். அதை இன்றே செய்வோம்... வாழ்வில் வெற்றி பெறவே...

அன்புடன் ஆசிரியை
நஸ்பியா அஜித்


கவிதையில்
நனைவோம்




# தாயே!

வறுமை என்ற மூன்றெழுத்தை
பொறுமை என்ற மூன்றெழுத்தால்
தகர்த்துவாயம்மா
பசுமை நிறைந்த வாழ்வுதன்னை
பண்புடனே போராடி வென்றிடுவாய்
பாரினிலே...

பெண்ணே!
கல்லோடு மலையோடு விண்ணோடு போராடி
கனிவான குழந்தைகள் நீ பெற்று...
வாழ்விலும் நீ ஓர் ஆசானாகலாம்.
குழந்தைக்கு முதல் ஆசான் தாய்தானே!
வாழ்க்கை என்ற வட்டம்
போட்டிடுமே பல சட்டம்
தடைகள் தாண்டும்போதுதான்
கிடைத்திடும் பல பட்டம்
சொல்லடிகள் எமைத் தாக்கும்போது நீ
ஓடிப்பார். தடை தாண்டல் ஓட்டம் நீ
நுகர்ந்திடுவாய். அநுபவக் கல்வியின் நறுமணத்தை...

கண்ணே!
வானத்து நிலாப் பெண்ணும்
சோகத்தில் தான் வாட
கரு நிறத்து காக்கை அதும் – தன்
நிறத்தை நினைத்து வாட
தோகை விரித்து ஆடும் – மயில் கூட
தன் காலை நினைவு கொண்டு கவலை கொள்ள
மானிடனாம் நமக்கு எல்லாம்
துன்பங்கள் பெரிதில்லையே...
அறிவு மானிடர் நாம்
கவலை கொள்ள தேவையில்லை...
வாழ்க்கை வாழ்வதற்கே...
வாழ்ந்துதான் பார்க்கணுமே....

# இளம் பெண்ணே!



நல்லவளாய் நீயும் வாழு
நல்ல சேவை புரிந்து நில்லு
பெற்றோரை காத்து நில்லு
பெரியோரை மதித்து நில்லு
இறையோனை தினம் நினைத்து
இறையருளை பெற்று நில்லு
கல்வியதை கற்று நில்லு
கவி பலவும் படைத்து நில்லு
காற்றிலே தென்றல் போல
காலமெல்லாம் வீசி நில்லு


துன்பங்கள் நேரும் நேரம்
தூயவனை நினைத்திடனும்
தூங்காது கண் முழித்து
தூர நோக்கை நினைத்திடனும்
வஞ்சகர் கூட்டமெல்லாம்
வையகம் நிறைந்து நிற்பார்
வல்லமை கொண்டு நீயும்
வையகம் வென்றிடனும்

மதுவோடு மங்கை எல்லாம்
மாயையை தோற்றிவிடும்
மறுமையை நினைத்து நீயும்
மறக்கணும் பாவச் செயல்
தூய்மையான எண்ணம் கொண்டால்
இளந்துளிர் நீங்கள் எல்லாம்
துள்ளியோடும் மான் கூட்டமாய்
வாழலாம் பாரில் என்றும்

# பெற்றோரே!

அம்மா!
வயிற்றில் பசிக்கின்றது
உணவு தர யாருமில்லை.
பாரினிலே தவிக்க விட்டு
எங்கே நீயும் சென்றாய்
போதை நிறைந்த தந்தைக்கா...
பேதை நீ... எனைப் பெற்றாய்
வையகம் வெறுக்கின்றதே...
வெட்கத்தில் நான் தலை குனிந்தேன்..

பாடசாலை சென்று நானும்
பாடங்கள் படிக்க நின்றால்
குடித்துவிட்டு வந்து நிற்கும்
தந்தை முகம் தெரிகின்றதே...
புத்தகம் திறக்கும் நேரம்
கண்ணீரில் நீ... நின்ற காட்சி
கரைகின்றதே என் இதயத்தில்
கல்வியை நான் எப்படி கற்பேனம்மா...



# அநாதை மாணவன்

தந்தையும் எனக்கு இல்லை.
தாய் கூட எனக்கு இல்லை.
உறவுகளும் தெரியவில்லை... நானோ...
அநாதை மாணவனாம்...
அநாதை அநாதை என்று...
அன்போடு கூறி நிற்கும்
அற்பர் கூட்டம் எல்லாம்
படுத்திடுதே... பாடு என்றும்
அநாதைக்கு அன்பு காட்ட
அண்ணலார் கூறி நின்ற
அற்புதப் பொன்மொழிகள்
அழிந்ததோ... வையகத்தில்
சொத்துக்கள் எனக்கிருந்தால்
சுரண்டியதைக் கைக் கொள்ள
நெருங்கிடுதே வஞ்சகக் கூட்டம்
நெஞ்சத்தில் ஈரமில்லாமல்

அநாதைகள் நெருப்பினிலே
சுகம் காணும் மானிடனே
மறுமை என்ற நெருப்பு என்றோ
நிரந்தரமாகும் ஓர் நாளில்

அநாதைகள் நாம் வாழ வேண்டும்
அவனியில் வழி விடுங்கள்
வெந்த புண்ணில் வேல் பாய்ச்சி
கோழைகளாய் ஆக்க வேண்டாம்
முடியும் முடியும் என்றால்
எங்களுக்கு முடியும் என்போம்
பாரினிலே நல்ல மனிதர்களாய்
பண்போடு நடக்க முடியும் என்போம்.

# நன்றியுடன்- என்றும் நான்

ஒரு மனிதனின் திறமை என்பது.... முயற்சியில் தான் உள்ளது... "முயற்சி திருவினையாக்கும்" என்னால் முடியுமா? என்ற கேள்வி களுக்கு... "முடியும்"... என்று இலைமறை காயாக மறைந்திருந்த என் திறமைகளை எல்லாம் வெளிச்சம் போட்டுக்காட்டி தட்டிக் கொடுத்த கோப்பாய் ஆசிரிய கலாசாலை அன்னைக்கு என்றும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

குறிப்பாக கலாசாலையின் முன்னாள் முதல்வர் மதிப் பிற்குரிய ஐயா ஏ.கணபதிப்பிள்ளை அவர்களையும்... எனக்கு சகல வழிகளிலும் ஆலோசனைகளை வழங்கிய விரிவுரையாளர் மதிப்பிற்குரிய விக்னேஸ்வரி அம்மா... மற்றும்... ஆய்வு நடாத்திய திருமதி ஜெய குமாரியம்மா அவர்களுக்கும், எனது பாடசாலையாகிய யாழ் ஒஸ்மானியா கல்லூரிக்கும், அதன் முன்னாள் அதிபர் M.S.A.M முபாறக் அவர்களுக்கும், பிரதி அதிபரும் தற்போதைய அதிபருமாகிய ஏ.மகேந்திரராசா அவர்களுக்கும், எனது சக ஆசிரியர்களுக்கும் ஊழியர்களுக்கும், மாணவ மணிகளுக்கும்...

அத்தோடு எனது அழைப்பை ஏற்று வருகைதந்து விழாவை ஒளிமயமாக்கி நன்கொடையாக பதினையாயிரம் ரூபாவை தந்து தவிய யாழ்.பிரதேச செயலாளர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம்... அவர்களுக்கும்... மற்றும் பிளவ்ஸ் பவுன்டேசன் தலைவர் E.L.M லாபிர் அவர்களுக்கும், சிவள பள்ளி பேஷ் இமாமும் அகில இலங்கை ஜமியத்துல் உலமாசபை தலைவர் (யாழ்/கிளி) யு.ஆ.அஸீஸ் அவர் களுக்கும் அவரது மனைவிக்கும் எனது மன மார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்... இவர்கள் முதல் நூலான கண்ணீர் பூக்களின் பிரசுரத்திற்காக எனக்கான உதவிகளை செய்தவர்களாவர்.

இவர்களைப் போல் எனது நூல் வெளியீட்டில் பல பல கஷ்டங்கள் ஏற்பட்ட நேரம் “கலங்காதே” என்று ஆலோசனை வழங்கி என்னை ஊக்கப்படுத்திய என் அன்புக் கணவர் திரு.அஜித் அவர்களுக்கும் எனது குழந்தைகளுக்கும்.மேலும் சமூகத்திலுள்ள சகல ஊர் பெரிய வர்களுக்கும்... விஷேடமாக திரு நிலாம் (சம்மேளனத்தின் பிரதி தலைவர்) அவர்களுக்கும் நன்றி கூற கடமைப்பட்டவளாகும்...அதேபோல் அன்ரா நிறுவனத்திற்கும் அதன் சகல ஊழியர்களையும் நான் என்றுமே மறந்து விட முடியாது.

யார் யாரெல்லாம்... எம் பணிக்காக உதவிட நினைத்தார் களோ... அனைவருக்கும் என் நன்றிகளை தெரிவித்துக்கொள் கிறேன். இவை முதற் பயணத்திற்கான என் உளம் நிறைந்த நன்றிகளாகும்.

எனது இரண்டாவது வெளியீடான சிதறல்களில் சில துளிகள் என்ற நூல் வெளியீட்டுற்காக பிரதம அதிதியாக வருகை தரவுள்ள திருமதி விஜயகலா மகேஸ்வரன் (மகளிர் விவகார பிரதி அமைச்சர்) அவர்களுக்கு நான் விஷேடமாக நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். அத்துடன் இந்தியத் தூதுவர் யு.நடராஜா அவர்களுக்கும், இலக்கிய பேரவைகள் தலைவர் கவிஞர் சோபா சேர் அவர்களுக்கும். மற்றும் எனக்கு ஆலோசனைகளை வழங்கிய பஸ்மியா முபீன் அவர் களுக்கும் எஸ். கரீஸ் அவர்களுக்கும் மற்றும் சிறப்பதிதிகளாக, கௌரவ அதிதிகளாக, சமூகத் தலைவர்களாக சபையைச் சிறப்பிக்க இருக்கும் அனைவருக்கும் அத்துடன் நூல் வெளியீட்டுக்காக தங்களை அர்ப்பணித்த நூல் வெளியீட்டுக் குழுவிற்கும் யாழ். கல்வித் திணைக்களத்திற்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

– நூலாசிரியர்

## திருமதி நஸ்பியா அஜீத்

கடந்த பல வருடங்களுக்கு மேலாக அமைதியான இலக்கிய ஆர்வலராக இருந்து வரும் திருமதி நஸ்பியா அஜீத் அவர்கள் யாழ்.ஒஸ்மானியக் கல்லூரியின் வரலாறு கற்பிக்கும் ஆசிரியையாவார்.

ஆனால் கலைத்துறை என்பது இவர் கைகண்ட கலையாகும். பாடசாலை மட்டத்தில் நாடகம், கவிதை, சிறுகதை, கட்டுரை, பாடல், நடனம் என கலைத்துறைக்கு வடிவமைப்புக் கொடுப்பது இவருக்கு விருப்பமான பணியாகும்.

யாழ்.கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் நடைபெற்ற முத்தமிழ் விழாப் போட்டியில் இவரது சிறுகதை முதலிடம் பெற்றதுடன் பதக்கங்களையும் தட்டிச் சென்றது. 2012ஆம் ஆண்டு தமிழ்தினப் போட்டி நிகழ்வில் இவர் எழுதிய நாடகமானது மாணவர்களை தேசிய மட்டம் வரை கூட்டிச் சென்று கோட்டம், வலய மட்டங்களுக்குத் தெரிவாகவைத்து கல்வியில் ஆர்வங்களைத் தூண்ட வழி சமைத்ததாகும்.

பல வருடங்களுக்கு மேலாக பொதுப் பணிகளில் தன்னை அர்ப்பணித்து பல சமூக சேவை நிறுவனங்களுடன் இணைந்து வேலை செய்துள்ளார். கடந்த காலங்கள் வெளிமாவட்ட இடம்பெயர்ந்த சமூகத்திற்காக வேலை செய்தவராவார். ஆனால் குறிப்பிட்ட காலங்களில் யாழ்.மக்களுடன் இணைந்து சேவை செய்தபோது அவருக்கேற்பட்ட பல சவால்களினால் சமூகப் பணியில் இருந்து ஒதுங்கி வாழ்ந்தவராவார்.

இவர் கடந்த பல வருடங்களாக ஆசிரியத் தொழிலில் தன்னை இணைத்துச் சேவை யாற்றி வருகின்றார். தற்போது யாழ்ப்பாண முஸ்லிம் சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பின்னடைவுகளைக் கண்டு பேனா முனையில் ஒரு மாற்றத்தினைக் காண பல நூல்கள், கட்டுரைகள், கவிதைகளைத் தொகுத்து வருகின்றார்.

இவரது சேவைப்பணி தொடர எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்துக் கொள் கின்றேன்.

எழுத்தாளர்

**அல்ஹாஜ்** எம்.எப்.எம்.இக்பால்(ஜே.பி)

யாழ்ப்பாணம்.

ISBN 9789554210905

9 789554 210905

Print at: Andra Printers - 021 221 7279